# உதயன்


23

www.onlineuthayan.com

36 பக்கங்கள் சுடர் 28 கதிர் 016 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 27 புதன்கிழமை (12/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# நாடு முழுவதும் இன்று நீதித்துறை போராட்டம்

## வடக்கே நேற்றே பணிகள் முடக்கம்

கொழும்பு, டிசெம்பர் 12

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணை விசாரணை முறைமையைக் கண்டித்தும், நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியும் நாடு முழுவதும் நீதித்துறையினர் இன்று போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

அதேவேளை, பிரதம நீதியரசருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வடக்கு சட்டத்தரணிகள் நேற்றுமுதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருவதால் நீதிமன்ற நடவடிக்கைகள் யாவும் முடங்கியுள்ளன. இன்றும் அந்தப் போராட்டம் தொடரும்.

பார்க்க பக்கம் 4

## பிரிட்டனில் போராட்டம்



கொழும்பு, டிசெ.12

லண்டனில் உள்ள வெளிவிவகார அலுவலகத்தின் முன்பாக தமிழர்கள் நேற்று திரண்டு பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான படையினரின் தாக்குதல்கள், மாணவர்களின் கைது ஆகியவற்றைக் கண்டித்தும் இலங்கை அரசின் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையைத் தடுக்கத் தவறிய ஐ.நா. சபையைக் கண்டித்தும் பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொது நலவாய அலுவலகத்தின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்டு தமது கண்டனத்

பார்க்க பக்கம் 4

## 12.12.12

### இன்று அதிர்ஷ்டநாள்

கொழும்பு, டிசெ.12

இன்று திகதி, மாதம், வருடம் எல்லாம் 12ஆம் எண்ணில் வருகிறது. 12.12.12 என்ற இந்தத் திகதியை அதிர்ஷ்ட நாளாக பலரும் கருதுகின்றனர். எனவே, இந்த நாளில் நற்காரியங்கள்செய்தால் அவை வெற்றியடையும் என்றும் கருதுகின்றனர்.

இன்று திருமணம் செய்து

பார்க்க பக்கம் 4

## தெரிவுக்குழு அறிக்கையை ஆராய மற்றொரு சுயாதீனக் குழு நியமனம்

கொழும்பு, டிசெ. 12

இலங்கையின் தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக தீர்ப்பு வழங்கியுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து, ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சுயாதீனக் குழு ஒன்றைத் தான் நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை அறிவித்தார்.

கொழும்பு 07 விஜயராமவில் இலங்கை பட்டய கணக்காளர்கள் கல்வி நிறுவனத்தின் புதிய கட்டடத் தொகுதியை திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகளைப் புறக்கணித்துவிட்டு, அந்த விசாரணைகள் நியாயமற்றவை என்று கூறுவதை

பார்க்க பக்கம் 4

## உண்ணா நிலைப் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 12.

வடக்கில் தமிழர்கள் கைது செய்யப்படுவதைக் கண்டித்தும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரியும் யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் உண்ணா நிலைப் போராட்டம் ஒன்றை நடத்த உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்

பார்க்க பக்கம் 4

# மாணவர் மீதான அரசின் ஒடுக்குமுறையே அவர்கள் வெலிக்கந்தவுக்கு மாற்றப்பட்டமை

## புளொட் தலைவர் சித்தார்த்தன் கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரை வெலிக்கந்த - கந்தகடுவ புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றியதன் மூலம், மாணவர்கள் மீதான அரசின் ஒடுக்கு முறை அம்பலப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழக(புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நான்கு மாணவர்கள் விடுவிக்கப்படாமையைக் கண்டித்துச் சித்தார்த்தன் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

எமது ஜனநாயக உரிமைகளை மறுதலித்து எமது இனத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறையின் தொடர்ச்சியாகவே மாணவர்கள் மீதான தாக்குதல்கள் அமைந்துள்ளன.

போர் முடிவடைந்துவிட்டது. இயல்புநிலையும் ஜனநாயகமும் மீளவும் வடக்கு - கிழக்கில் நிலைநாட்டப்பட்டுள்ளது எனக் கூறும் அரசு, பல்கலைக்கழக மாணவர்களைத் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பியதன்மூலம் மாணவர்கள் மத்தியில் ஒரு நிச்சயமற்ற தன்மையையும், பெற்றோர்கள் மத்தியில் ஒரு பதற்றமான சூழ்நிலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

போர்ச் சூழ்நிலைகளில் எவ்வளவோ இழப்புகளுக்கும், கஷ்டங்களுக்கும், அர்ப்பணிப்புகளுக்கும் மத்தியில்

பார்க்க பக்கம் 4

# தடுப்பில் மாணவர்கள் கனடா ஆழ்ந்த கரிசனை

கொழும்பு, டிசெ.12

தமிழர் விடுதலைக்கான போராட்டத்தில் உயிரிழந்தவர்களை அமைதியாக நினைவுகூர்ந்த, யாழ். பல்கலை மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மாணவர்கள் காயப்படுத்தப்பட்டமை, பின்னர் அவர்கள் தடுத்துவைக்கப்பட்டமை குறித்து கனேடிய அரசு ஆழ்ந்த கரிசனையைக் கொண்டுள்ளது என்று கனேடிய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் வுட்வேர்த் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது தொடரும் தாக்குதல்களை அடுத்து இலங்கை மீதான கண்டனங்களும் கனடாவில் அதிகரிக்க

பார்க்க பக்கம் 4

# 13 ஐ ஒழிக்க சகல வழிகளிலும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்கு அரசுக்குள் அணியொன்று உருவாகியிருந்தாலும் குறித்த சட்டத்திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கான அனைத்துவித நடவடிக்கைகளையும் தாம் முன்னெடுப்போம் என்று ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது. "இந்தப் போராட்டத்தின் இலக்கை அடையும் வரை இம்மியளவேனும் பின்வாங்கப்போவதில்லை" என்று அந்தக் கட்சி நேற்று திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்காது அதை மையமாகக்கொண்ட மாகாணசபை முறைமையை மேலும் வலுப்படுத்துமாறு

பார்க்க பக்கம் 4

## முறைப்பாடுகள் 25 ஆக உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணத்தில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் உறவினர்களால் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று செவ்வாய்க்கிழமை வரையில் 25 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இதுவரையில் 45 பேருக்கும் மேற்பட்டோர் குடாநாட்டிலும், கிளிநொச்சியிலும்

பார்க்க பக்கம் 4

# நந்தாவில் கொலை; நான்கு பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 12.

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் பகுதியில் கடந்த வாரம் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் உறவினர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த இவர்களிடம் கோப்பாய் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலடிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை, பதுளையைச் சேர்ந்த ஆர். டபிள்யூ.டி.நிஷாந்த சம்பத் என்பவர் கோடரியால் வெட்டிக் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலையுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் குணதீஸ்வரன் (வயது-29), அவருடைய மனைவி திவாகரி (வயது -23), திவாகரியின் தந்தையான சீனியன் முருகப்பன் (வயது-47), திவாகரியின் சகோதரரான டிலக்ஷன் (வயது-20) ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் கணவன், மனைவி இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு படுக்கைக்குச் சென்ற பின்னர் காணாமல் போயிருந்தனர். இவர்களைக் காணவில்லை

பார்க்க பக்கம் 4

## 'கரடி' விட்ட ஜப்பானியருக்கு விளக்கமறியல்

கொழும்பு, டிசெ. 12

இலங்கையின் தேசியக் கொடியில் சிங்கத்துக்குப் பதிலாக பண்டா கரடியின் படத்தைப் பொருத்தி வைத்திருந்தார் எனக் கூறப்படும் ஜப்பானியரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கல்கிசை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கைத் தேசியக் கொடியில் உள்ள சிங்கத்

பார்க்க பக்கம் 4

# அடுத்த பிரதமர் பதவிக்கு சிறிசேன - நிமல் போட்டி

கொழும்பு, டிசெ.12

அடுத்த பிரதமர் யார் என்ற போட்டியில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேனவும், நிமல் சிறிபால டி சில்வாவும் ஒவ்வொரு திசையில் கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பிலான அரசியல் விளையாட்டுகள் இன்னும் சில வாரங்களில் வெளியாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

''பிரதமர் டி.எம்.ஜயரட்னவுக்கு உடல்நலக் குறைபாடு ஏற்பட்டுள்ளதால் அடுத்த பிரதமர் யார் என்ற போட்டி ஆளுந்தரப்பினரிடையே ஏற்பட்டது. ஆளுந்தரப்பின்

பார்க்க பக்கம் 4


சாதனை படைத்தது திசைகாட்டி

100 ஆவது நபரும் ஆஸ்திரேலியா விசா பெற்றார்.



யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவனும் பாடசாலை வீதி, களுபோவில, தெகிவளையை வதிவிடமாகக் கொண்டவருமான

திரு. பொன்னுத்துரை சிவமோகன்

அவர்கள் எம்மிடம் 27 ஆவது குடும்பத்தில் 100 ஆவது பயனாளியாக ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா பெற்றார்.

நீங்களும் ஆஸ்திரேலியாவுக்கான குடும்பவிசாவுக்கான ஆலோசனைக்கான இறுதி நாள் 15.12.2012 என்பதை நினைவில் நிறுத்தி விரைந்து செயற்படுங்கள்

(26632)(8.14)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்.

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். (021 2219016)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுப் பிரச்சினைகளை வெளியாரால் தீர்க்க முடியாது

## ஜனாதிபதி மஹிந்த மீண்டும் தெரிவிப்பு

இலங்கையின் பிரச்சினைகளை பிறிதொரு நாட்டால் தீர்க்கமுடியாது என மீண்டும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும் எண்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்து ஆலயங்களின் அறங்காவலர்கள் மற்றும் அந்த அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறியும் விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல வருடங்களாகக்கொடூர போர் நடைபெற்ற நாட்டில் மக்களிடையே மீண்டும் சாந்தியையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கும், மக்களின் மனங்களிலிருந்து வக்கிரத்தைப் போக்குவதற்கும் ஆன்மிக ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்வது எம் அனைவரினதும் பொறுப்பாகும். எமது நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளவேண்டும். வேறொரு நாட்டால் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.


தீர்வை எட்ட, எமக்குள் புரிந்துணர்வு, தொடர்பு, கலந்துரையாடல், நம்பிக்கை ஆகியன ஏற்படவேண்டும். இந்தச் செயற்பாட்டை நிறைவேற்ற நம் மனதுக்குள் நம்பிக்கை ஏற்படவேண்டும். விரோதத்தை வைத்துக் கொண்டு பிரிவினையை ஏற்படுத்த முனைவது அநியாயமானது.

அதேவேளை, அரசு இன்று செய்யும் அனைத்து நடவடிக்கைகளும் சிலருக்குத் தவறாகத் தெரிகின்றது. நாட்டுக்கு சட்டம் மிக அவசியம். அந்தச் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். எந்தத் தொழிலாக இருந்தாலும் கௌரவத்தைப் பாதுகாத்துச் செயற்பட வேண்டும் என மதங்கள் ஒழுக்கத்தைப் போதித்துள்ளன. அனைத்து மத குருமார்களுக்கும் ஒழுக்கமொன்று இருக்கின்றது. போதிப்பதற்கு சட்ட வரையறையுள்ளது. சட்டம் எவருக்கும் பொதுவானதாகும். அதிகாரிகள் தமக்கான கடமைகளைச் சரியாக நிறைவேற்றவேண்டும்.

அரச அதிகாரி ஒருவர் தவறிழைத்தால் அவரை வேலையை விட்டு நீக்கி விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முறையொன்று உள்ளது. குறிப்பாக, நாட்டின் ஜனாதிபதி தவறிழைத்தாலும் அவருக்குத் தண்டனை வழங்கப்படும் முறையொன்றுள்ளது. எனவே, அனைத்துத் துறைகளினதும் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவது அந்தத் துறைகளில் பதவிகளை வகிப்பவர்களின் பொறுப்பாகும்.

சோறு கொட்டினால் அதை அள்ளலாம். ஆனால், கௌரவத்தை இழந்தால் அதை மீளப் பெறமுடியாது எனப் பழமொழியொன்று உள்ளது - என்றார் ஜனாதிபதி.

நிகழ்வில் தமிழிலும் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்து மதம் பழைமை வாய்ந்தது; நீண்டதொரு வரலாற்றைக் கொண்டது. இதை எவராலும் இல்லை என்று சொல்ல முடியாது. சாதி, மதம், பேதமின்றி நாம் அனைவரும் நாட்டில் ஒன்றாக வாழ்கின்றோம் - என்றும் தெரிவித்தார்.



ஜோர்தானில் பணிப்பெண்ணாகப் பணிபுரியும் தனது மனைவியை மீட்டுத் தருமாறு கோரி மரம்மீது ஏறி போராடுகிறார் நபரொருவர்.

## மதுபோதையில் இடையூறு இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், டிசெ.12

மதுபோதையில் கைகலப்பில் ஈடுபட்டதோடு பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றத்துக்காக 2 பேருக்கு நீதிமன்றம் 17 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

புங்குடுதீவில் இவ்வாறு நடந்துகொண்ட குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த 2 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றில் நேற்று இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒவ்வொருவருக்கும் 8 ஆயிரத்து 500 ரூபா வீதம் 17 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

# இலங்கை கிரிக்கெட் அணியை ஆஸி. புறக்கணிக்க வேண்டும்

## இங்கிலாந்தின் முன்னாள் அணித் தலைவர்

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணியைப் புறக்கணித்து இலங்கை அரசுக்கு ஆஸ்திரேலியா அரசு பாடம் புகட்ட வேண்டும் என இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் ஆத்தட்டன் கோரியுள்ளார்.

மைக்கல் ஆத்தட்டன், தற்போது கிரிக்கெட்துறையின் எழுத்தாளராக செயற்பட்டு வருகிறார்.

இது தொடர்பில் அவர் ஆஸ்திரேலிய அரசுக்கு எழுதியுள்ள குறிப்பில், இலங்கையில் தமிழர்கள் தொடர்ச்சியாகத் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். இலங்கை அரசு தொடர்சியாக தமிழ் மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த நிலையில் ஆஸ்திரேலிய அரசு இலங்கையை ஆதரிக்கக் கூடாது. இலங்கை கிரிக்கெட் அணி ஒரு சிங்கள அரசியல் அணி.

இலங்கையில் தமிழ் மக்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு தாக்கப்பட்டனர்.

இது போன்ற சம்பவங்கள் பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டன.

முன்னர் ஒரு தடவை இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு வந்திருந்த போது அங்குள்ள தமிழர்கள் இலங்கை அணிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இதனை பிரிட்டன் உட்பட்ட பல நாட்டு தொலைக்காட்சிகள் காண்பித்தன.

இந்தநிலையில் படுகொலை குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள இலங்கை நாடாளுமன்றில் முன்னாள் கிரிக்கட் வீரரும் தற்போது இலங்கை கிரிக்கெட்டில் செல்வாக்கு செலுத்துபவருமான சனத் ஜெயசூரிய உறுப்பினராக உள்ளார்.

அண்மையில் மஹிந்த ராஜபக்ச தலைமையில் திருமணம் செய்துக்கொண்ட பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ், இலங்கை இராணுவத்தில் லெப்டினட் கேணலாக உள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜூன ரணதுங்கவும் அரசியல்வாதியாக உள்ளார்.

இந்தநிலையில் சிறுபான்மை தமிழர்களை புறக்கணித்து பெரும்பான்மையான சிங்களவர்கள் இலங்கையில் செயற்படுகிறார்கள் என்பது தெளிவாகிறது.

இந்த நிலையில் இலங்கை அணியை புறக்கணிப்பதன் மூலம் ஆஸ்திரேலியா இலங்கைக்கு அரசியல் ரீதியாக வலுவான செய்தியை தெரிவிக்கவேண்டும் என்றும் மைக்கல் ஆத்தட்டன் கோரியுள்ளர். (ஐ)

## சடல எச்சங்களை தேடும் பணி பயனின்றி கைவிடப்பட்டது

கொழும்பு, டிசெ.12

தமிழீழ விடுதலைப் புலிகளால் 14 வருடங்களுக்கு முன்னர் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயார் விமானப் பயணிகளின் சடல எச்சங்களைக் கண்டறியும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கௌதாரிமுனைக் கடற்கரையில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் மேற்படி பயணிகளின் சடலங்களைத் தோண்டும் பணிகள் கடந்த மூன்று நாள்களாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் சடலங்கள் எவையும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இதனையடுத்து அந்தப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ஆய்வு ரீதியில் மூன்றாம் கட்டமாக இந்த சடலங்களைத் தோண்டு பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி மேற்படி விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதன்போது குறித்த விமானத்தில் 48 பயணிகளும் 7 விமானப் பணியாளர்களும் உட்பட 55 பேர் பயணித்திருந்தனர். (ஐ)

### நவீல்ட் பாடசாலை ஆசிரியர், மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், டிசெ.12

கைதடி நவீல்ட் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களையும், தரம்-8 தொடக்கம் தரம்-11 வரையான வகுப்பு மாணவர்களையும் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாடசாலையில் ஒன்றுகூடுமாறு பாடசாலை அதிபர் எஸ்.மகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார். (த-4)

### பல்கலை ஆசிரியர் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான விசேட் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கலைப்பீட பொது அறையில் நடைபெறவுள்ளதால் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் அறிவித்துள்ளார். கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களை விடுவிப்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

# பெண்கள் மீதான வன்முறையை எதிர்த்து கவனவீர்ப்புப் பேரணி

கிளிநொச்சியில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிக்கும் 16 நாள் செயற்றிட்டத்தை ஒட்டிக் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பது தொடர்பான 16 நாள் வேலைத் திட்டத்தின் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் டனிஷ் அகதிகள் பேரவை, அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தக் கவனவீர்ப்புப் பேரணி நடைபெற்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் வகையிலான கோஷங்களை எழுப்பியவாறும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் விழிப்புணர்வுச் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமானது. அது கரைச்சிப் பிரதேச செயலகம் வரை சென்று அங்கு விழிப்புணர்வுச் செயலமர்வு நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிறி செல்வம், கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் டனிஷ் அகதிகள் பேரவை, அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளனர். (த-6)

# காணாமற்போன சிறுவன் 52 நாள்களின் பின் மீட்பு

கிளிநொச்சி, டிசெ.12

கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியில் காணாமற்போன சிறுவன் சுமார் 52 நாள்களின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளான். குறித்த சிறுவன் இரும்பு சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோதே மீட்கப்பட்டுள்ளான்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் சிறுவர்கள் காணாமற்போவது தொடர்பாகப் பொலிஸ் நிலையத்திலும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. காணாமற்போகும் சிறுவர்கள் சில நாள்களின் பின்னர் வீடு திரும்பும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

கடந்த ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி விசுவமடுவில் உள்ள தமது உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற 14 வயதுடைய சிறுவன் ஒருவன் பின்னர் வீடு திரும்பவில்லை. ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி அவரது தாயாரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டது. இந்நிலையில் 52 நாள்களின் பின்னர் குறித்த சிறுவன் புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவன் இரும்பு சேகரிப்பில் ஈடுபட்டு வந்ததாகத் தெரியவந்துள்ளது.

இதனைவிட கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் பரந்தன் பகுதியில் இருந்து தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற சிறுவன் வீடு திரும்பவில்லையென கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்திலும் மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது. 3 நாள்களின் பின்னர் அந்தச் சிறுவன் அவனது உறவினர் வீட்டில் தங்கிநின்று பின்னர் வீடு திரும்பியுள்ளான். இதைவிட கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் பரந்தன் சிவபுரம் பகுதியில் 3 சிறுவர்கள் காணாமற்போய் 15 நாள்களின் பின்னர் அவர்கள் வீடுகளுக்குத் திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைவிட கண்டாவளை பிரமந்தனாறு 40 ஆம் வாய்க்கால் பகுதியிலும் இவ்வாறு சிறுவன் ஒருவன் காணாமற்போய் ஒன்றரை மாதங்களாகியும் இன்னமும் வீடு திரும்பவில்லையென நேற்றும் அவரது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகளின் பெருக்கம் 40 வீதத்தால் பெருவீழ்ச்சி!

## சட்டவிரோத மீன்பிடியே காரணமாம்

யாழ்ப்பாணம், டிசெ.12

**குடாக்கடலில் கடலுணவுகளின் பெருக்கம் 40 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது என்று யாழ்.மாவட்டக் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.எமிலியாம் பிள்ளை தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது குடாநாட்டில் கடலுணவுகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதற்குக் காலநிலை வேறுபாடு காரணம் அல்ல.

குடாக் கடலில் தற்போது கடலுணவுகளின் பெருக்கம் மிகவும் குறைந்து கொண்டு செல்கிறது. 40 வீதத்தால் இப்போது கடலுணவுகளின் பெருக்கம் குறைவடைந்துள்ளது.

இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் இழுவைப் படகுகள் வடக்குக் கடலில் உள்ள கடல் வளங்களை அள்ளிச் செல்கின்றன. இதனால் எமது கடல்வளம் அடியோடு அழிக்கப்பட்டு வருகின்றது. இந்தச் செயல் கடந்த பல வருடங்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இந்த அத்துமீறிய சட்டவிரோத மீன்பிடி குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு பலமுறை எடுத்துக் கூறியும் பயன் இல்லை. பல போராட்டங்களையும் நாம் நடத்தியுள்ளோம். எவற்றுக்கும் இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

இந்த நிலை மேலும் தொடர்ந்தால் எதிர்காலத்தில் குடாக்கடலில் மீன்வளம் கேள்விக் குறியான ஒரு நிலையையே அடையும்- என்றார்.

இதேவேளை யாழ். நகரை அண்டிய பிரதான மீன் சந்தைகளில் கடல் உணவுகளின் விலைகள் திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றன.

கொட்டடி, குருநகர், பாஷையூர் சந்தைகளில் கடலுணவுகளின் நேற்றைய விலை வருமாறு:-

நண்டு (ஒரு கிலோ)- 650 ரூபா, மீன் (பெரிது ஒரு கிலோ)-500 ரூபா, மீன் (சிறிது ஒரு கிலோ)-350 ரூபா, கணவாய் (ஒரு கிலோ)- 600 ரூபா, இறால் (ஒரு கிலோ)-650 ரூபா, திருக்கை (ஒரு கிலோ)-300 ரூபா, சுறா மீன் (ஒரு கிலோ)- 1200 ரூபா. (த-17)

## கடற்றொழில் அமைச்சர் யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்,டிசெ.12

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்.வருகிறார்.

யாழ்ப்பாணம் வருகை தரும் அமைச்சர், யாழ்.குருநகர் பகுதியில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளார் என்று மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளதிணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

அத்துடன் குடாநாட்டு மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளையும் அமைச்சர் சந்திக்கவுள்ளார். இதன்போது கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகஆராயப்படவுள்ளது.

தற்போது குடாக் கடலில் நுழைந்து மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளும் இந்திய, தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து இதன்போது அமைச்சரிடம் எடுத்து விளக்குவதற்கு மீனவர் சங்கங்கள் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

## தரம் 6 மாணவர்களுக்கு தலா 2 தென்னங் கன்றுகள்

வடமராட்சி,டிசெ.12

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் ஆறாம் தரத்தில் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் தலா இரண்டு நல்லினத் தென்னங்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

இலங்கை தெங்கு பயிர்ச் செய்கைச் சபையின் யாழ். பிராந்திய நிலையம் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் நேரடியாகச் சென்று வழங்கி வருகின்றது.

ஆறாம் தரத்தில் கற்கும் மாணவர் ஒருவர் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் காலத்தில் இந்த நல்லினத் தென்னங்கன்றுகளிலிருந்து தேங்காய்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இலக்காக வைத்தே மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் முதல் ஆறாம் தர மாணவர்களுக்கு நல்லினத் தென்னங்கன்றுகள் வழங்கும் பணியை தெங்கு பயிர்ச் செய்கைச் சபை ஆரம்பித்தது. இந்த வருடமும் அந்தப் பணி தொடர்ந்தது.

தெங்கு பயிர்ச் செய்கைச் சபைக்குச் சொந்தமான புத்தளம், பளை ஆகிய இடங்களில் உள்ள நாற்று மேடைகளில் இருந்து பெறப்பட்ட தென்னங்கன்றுகளே இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (ம-8)

## ஆயிரம் ரூபா அடுத்தவாரம்

தென்மராட்சி,டிசெ.12

தென்மராட்சி பிரதேசத்தில் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான டிசெம்பர் மாதத்துக்குரிய ஆயிரம் ரூபா கொடுப்பனவு அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளது.

டிசெம்பர் மாத கொடுப்பனவை வழங்குமாறு தேசிய முதியோர் செயலகத்தினர் அறிவித்துள்ளதை அடுத்து பட்டியல்கள் தயாரிக்கும் பணிகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்த வாரம் இந்தக் கொடுப்பனவு அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய மாதங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைகள் இந்த வருட இறுதிக்குள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கொடுப்பனவு பெறுவதற்குரிய அட்டைகள் நவம்பர் மாதக் கொடுப்பனவுடன் முதியோருக்கு கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளன.

பட்டியல் தயாரிக்கும் பணிகள் முழு வீச்சில் இடம்பெற்று வருவதால் அடுத்த வாரம் இந்தக் கொடுப்பனவை பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)



யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளாந்தம் அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சைக்காக விடுதிகளில் அனுமதிக்கப்படுவதால் விடுதிகளில் இடம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் விடுதிகளின் வெளித் தரைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-14)

## மானிப்பாய் – காரைநகர் வீதிக்கு விரைவில் காப்பெற்

மானிப்பாய்-காரைநகர் வீதி ''காப்பெற்'' வீதியாகப் புனரமைக்கப்படவுள்ளது.

இந்தப் பிரதான வீதியை 'காப்பெற்' வீதியாக மாற்றி புனரமைக்கும் பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் வரைக்குமான பகுதி திருத்தப்பட்டுள்ளது.

இந்த வீதியை மேலும் அகலிப்புச் செய்து ''காப்பெற்'' போடப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள இந்த அகலிப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெறும் என்றும் கூறப்பட்டது. தற்காலிகமாக குறித்த வீதி தார் கலவை போட்டு திருத்தப்படவுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-17)

## கடற்றொழிலாளருக்கு டிசெம்பர் மாத மானியம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ். குடாநாட்டு கடற்றொழிலாளர்களுக்கு டிசெம்பர் மாதத்துக்கான மானிய முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன.

தற்போது நவம்பர் மாதத்துக்கான மானிய முத்திரைகளை விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதனுடன் சேர்த்து டிசெம்பர் மாதத்துக்கான முத்திரைகளையும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கடற்றொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு துரித கதியில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

**மருத்துவப் பரிசோதனை**

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கான மருத்துவப் பரிசோதனை முகாம் நண்பகல் 12 மணிக்கு நகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் மருத்துவப் பரிசோதனை முகாமில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டு உத்தியோகத்தர் ஊழியர்களுக்கு இரத்த அமுக்கம், நீரிழிவு உட்பட்ட பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பரிசோதனைகளின் பின்னர் வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் தி.சிறிகரன் 'நீரிழிவு நோயும் அதனைத் தடுக்கும் முறைகளும்' என்னும் தலைப்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்கை நிகழ்த்துவார். (ம-9)

**கௌரவிப்பு**

ஜனசக்தி சனசமூக நிலைய கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு பிற்பகல் 6 மணிக்கு மயிலணி ஜனசக்தி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய அதிபர் செல்வி நவரட்ணம் பிரதா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-14)

**சஞ்சிகை வெளியீடு**

சுகவாழ்வு நிலையத்தால் சிறுவர்களது ஆற்றல்களையும், திறமைகளையும் வெளிக்கொண்டு வரும் முகமாக உருவாக்கப்பட்ட ''தேடும் சிட்டுக்கள்'' சிறுவர் சஞ்சிகை இதழ் 6 இன் வெளியீட்டு நிகழ்வு காலை 9.30 மணியளவில் சுகவாழ்வு நிலையத்தின் இயக்குநர் அருட்பணி மி.செபமாலை பெரேரா தலைமையில் யாழ்.திருமறைக் கலா மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக அமல மரித் தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்பணி ம.போல் நட்சத்திரமும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உளசமூக இணைப்பாளர் கு.கௌதமனும் அமல மரித்தியாகிகள் சபையின் யாழ். மாவட்ட சிறுவர் ஒருங்கிணைப்பாளர் அருட்பணி ப.சத்தியசீலனும் கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி வ.சத்தியேஸ்வரனும் [illegible] (ம-[illegible])

# யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறுவோர் அதிகரிப்பு

## இதற்குப் பெரும் வளம் தேவையாக உள்ளது என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளாந்தம் தொற்று நோய், தொற்றா நோய்களால் சிகிச்சை பெறுபவர்கள் எண்ணிக்கைஅதிகரித்துக்கொண்டே செல்கிறது.

சிகிச்சைக்காக பெருமளவு வளங்கள் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா இவ்வாறு கூறினார்.

தேசிய சுகாதார வாரத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

**தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. இதனால் சிகிச்சைக்காக அதிக எண்ணிக்கையானோர் போதனா வைத்திய சாலைக்கு வந்த வண்ணம் உள்ளனர்.**

தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது; இதனால் சிகிச்சைக்காக அதிக எண்ணிக்கையானோர் போதனா வைத்தியசாலைக்கு வந்த வண்ணம் உள்ளனர். இதன் காரணமாக சிகிச்சைக்கென அதிக வளங்கள் பயன்படுத்த வேண்டியுள்ளது.

எனவே நோய்களின் தாக்கங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியுள்ளது.

ஆரோக்கியமான சமுதாயத்தைக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு சுகாதாரத் துறையினரிடம் இருப்பதால் தேசிய சுகாதார வாரத்தைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்தலாம் எனவும் தெரிவித்தார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்புக்கு முரணாகவே நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தை நிறைவேற்றியது மஹிந்த அரசு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.12

அரசமைப்புக்கு எதிரான முறையிலேயே அடுத்தாண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்துடன், இது விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவையும் கருத்திற் கொள்ளாது அரசு செயற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

மேற்படி நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது நீதிபதி ஆலோசனைக்கு அமையவே நிறைவேற்றப்பட்டது என ஆளுந்தரப்பினர் கூறுகின்றனர். அப்படியெனில், நீதிபதி ஆலோசனைக்கமைய உயர்நீதிமன்ற உத்தரவை மீறிச் செயற்பட முடியுமா என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அடுத்தாண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் கடந்த 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது அரசமைப்புக்கு எதிரான செயலாகும். அத்துடன், இதுவிடயம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவையும் கருத்திற்கொள்ளாமல் அரசு செயற்பட்டுள்ளது.

குறிப்பாக, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கடன் பெறும்போது அதன் நடைமுறைகள், அதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் ஆகியவற்றை நாடாளுமன்றத்திற்குத் தெரிவித்து அதன் அனுமதியைப் பெறவேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஏனெனில், அரசு பெறுகின்ற கடனை நாட்டின் எதிர்கால சந்ததியினரே செலுத்த வேண்டும். தற்போது தனிநபர் கடனானது மூன்று இலட்சம் ரூபாவை எட்டியுள்ளது. இந்தக் கடனானது எமது எதிர்கால சந்ததியினருக்குத்தான் சுமையை ஏற்படுத்தப்போகிறது.

அடுத்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது முழுமையான விவாதங்கள் நடைபெறாமல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டது.

மேற்படி நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது நீதிபதியின் ஆலோசனைக்கமையவே நிறைவேற்றப்பட்டது என சபாநாயகரும், சபை முதல்வரும் தெரிவித்தனர். ஆனால், அதற்கு எந்தவிதமான எழுத்துமூலமான ஆவணங்களையும் காண்பிக்கவில்லை.

நீதிபதியின் ஆலோசனைக்கமைய உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மீறிச் செயற்பட முடியுமா?

அரசிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கின்றபடியால் அது உயர்நீதிமன்றத்தின் உத்தரவையும், அரசமைப்பையும மீறிச் செயற்பட முடியுமா?

எனவே, அடுத்தாண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை தவறானதாகும் - என்றார்.

# நீதியரசர் மீதான தெரிவுக்குழு நடத்திய விசாரணை நீதியற்றது

## குற்றஞ் சாட்டுகிறது சட்டத்தரணிகள் சங்கம்

பிரதம நீதியரசரை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு பக்கச்சார்பானதும், நீதியற்றதுமான விசாரணையை நடத்தியுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம நீதியரசர் மீதான விசாரணையை மேற்கொண்ட தெரிவுக்குழுவை சட்டத்தரணி சங்கத்தினர் விமர்சித்துள்ளனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு அவர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க நியாயமான கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். இந்த வாய்ப்புக்களைத் தெரிவுக் குழு பிரதம நீதியரசருக்கு வழங்க மறுத்துள்ளது. சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய பிரதம நீதியரசருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. அவரிடம் 1000 பக்கங்கள் கொண்ட குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்கள் கொடுக்கப்பட்டு 24 மணிநேரத்தில் பதிலளிக்க வேண்டுமென நீதியரசர் தெரிவுக் குழுவால் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

தெரிவுக்குழு உறுப்பினர்கள் பிரதம நீதியரசருக்கு உரிய மரியாதையை வழங்கத் தவறிவிட்டனர். இதனாலேயே அவர் தெரிவுக்குழுவிலிருந்து வெளிநடப்புச் செய்தார். எனினும் விசாரணை நடந்து 24 மணித்தியாலங்களில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இது சுதந்திரமான நீதி முறைமையின் முதுகெலும்பை முறிக்கும் என்றும் சட்டத்தரணிகள் குற்றம் சாட்டியுள்ளனர். (ஐ-16)

## தடுப்பில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆரம்பித்துள்ளன.

இலங்கையில் மனித உரிமைகள் சீர்கெட்டுச் செல்வது மிகுந்த கவலையளிக்கிறது என கனடாவின் ஆளும் கட்சியின் பரித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பற்றிக் பிரவுன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். தொடர்ந்து கிச்சனர் மத்திய தொகுதி ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் வுட்வேர்த்தும் தனது ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ளார்.

''ஒவ்வொரு மனிதனினதும் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றபோது அது குறித்து குரல் எழுப்புவது ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரது கடமை, என்று வுட்வேர்த் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''தற்போதைய நிகழ்வு இலங்கையில் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து வன்முறை பிரயோகிக்கப்படுவதை வெளிக்காட்டி நிற்கிறது'' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மாணவர் மீதான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தான் மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் கற்றார்கள். இப்படியான அடக்குமுறைகள் மாணவர்களின் கல்வியினை மேலும் பாழாக்கிவிடும். சமுதாயத்தில் மேன்மை நிலையை எட்டமுடியாத சூழல் வலிந்து உருவாக்கப்பட்டால் மாணவர்கள் விரக்திக்குள் தள்ளப்படுவார்கள்.

உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதையும், இயல்புநிலைகள் எதையும் பாதிக்காமல் தங்களுடைய விடுதிகளிலேயே மிக அமைதியாக மாணவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அரசு அடக்க முற்பட்டமையானது இன்று ஒரு பூதாகரமான பிரச்சினையாக உருவாகியிருக்கிறது.

இந்த நிலைமைகளை நீடிக்க விடாமல், மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு அனுமதியளித்து அவர்களை உடனடியாக விடுதலை செய்ய அரசு முன்வர வேண்டும் - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-16)

## அடுத்த...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் பிரதமர் பதவிக்காகப் போட்டி போட்டுக்கொண்டு செயற்படுகின்றனர். இருப்பினும், முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே மறுபடியும் பிரதமராக நியமிக்கப்படலாம் என்றதொரு கருத்தும் நிலவுகின்றது'' - என்றார் அவர்.

## 13 ஐ ஒழிக்க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கோரி அரசுக்குள் உருவாகியுள்ள '13' ஆதரவு அணி தொடர்பில் கருத்து வெளியிடும் போதே ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''அரச கூட்டணியில் பல கட்சிகள் அங்கம்வகிக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறான நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. அதற்கான சுதந்திரம் அவர்களுக்குண்டு.மாகாணசபை முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்ற விடயத்தில் நாம் உறுதியாகவுள்ளோம். எமது ஆணித்தரமான நிலைப்பாடும் இதுதான். எனவே இந்தப் போராட்டத்திலிருந்து நாம் பின்வாங்கப் போவதில்லை.13ஐப் பாதுகாக்க அரசுக்குள் சிலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் இறுதி முடிவு ஜனாதிபதியின் கைகளில்தான் உள்ளது என்பதை அனைவரும் உணரவேண்டும். எதற்காகவும் எமது கொள்கையை நாம் இறுதிவரை மாற்றிக்கொள்ளப்போவதில்லை'' என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்கும் விவகாரத்தில் அரசின் மற்றுமொரு பங்காளிக்கட்சியான தேசிய சுதந்திர முன்னணியும் உறுதியாக உள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அரசுக்குள் இவ்வாறு எதிரும் புதிருமாக கருத்துகள் வெளியாகிவரும் நிலையில், இவ்வாரம் இறுதியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை [illegible] தரப்பு '13' [illegible] தேசித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## 12.12.12....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கொள்வது சிறப்பானதாக இருக்கும் என்று இளைஞர்கள் நம்புகிறார்கள். எனவே, பல நாடுகளிலும் இன்று ஜோடிகள் திருமணம் செய்துகொள்ளத் திட்டமிட்டுள்ளன.

சிங்கப்பூர், கொங்ஹொங், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இந்த ஆர்வம் அதிகமாகக் காணப்படுகிறது. கொங்ஹொங்கில் மட்டும் இன்று 696 பேர் திருமணம் செய்வதற்காக பதிவாளர் அலுவலகத்தில் முன்பதிவு செய்துள்ளனர்.

அதேபோல சிங்கப்பூரிலும் திருமணம் செய்ய விரும்பி 540 பேர் விண்ணப்பம் கொடுத்துள்ளனர். இதேபோல சீனா, ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிலும் திருமணம் செய்ய பலர் முடிவு செய்துள்ளனர். (சி)

## முறைப்பாடுகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று உறுதி செய்யமுடியாத தகவல்கள் கூறுகின்றன. விசாரணைக்கு அழைக்கப்பட்ட ஒரு சிலர் பின்னர் விடுவிக்கப்பட்டதால் கைதானோரின் சரியான எண்ணிக்கை தெரியவரவில்லை.

கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் வரையில் 22 முறைப்பாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதில் மூன்று முறைப்பாடுகள் கிளிநொச்சி பிரதேசத்திலிருந்து கிடைக்கப்பெற்றிருந்தன. மேலும் யாழ். பல்கலைக்கழக மாணவர் கைது தொடர்பிலும் ஒரு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அச்சுவேலிப் பிரதேசத்திலிருந்து கடந்த சனிக்கிழமை மற்றும் நேற்று 3 முறைப்பாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு கிடைத்துள்ளன.இவர்கள் ஞாயிற்றுக்கிழமை கைதானவர்கள் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-5)

## தெரிவுக்குழு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு தெரிவித்திருந்தார்.

தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக தெரிவுக் குழுவின் விசாரணையில் இருந்து வெளிநடப்பு செய்ததைத்தான் ஜனாதிபதி அப்படிக் குறிப்பிட்டுப் பேசினார் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாகவே இந்த சுயாதீன குழுவை நியமிக்கவுள்ளார் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். ''எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் எனது மனசாட்சிக்கு மட்டுமே நான் பதிலளிக்க வேண்டும். அது சரியானதாகவும் இருக்க வேண்டும். நான் இந்த நடவடிக்கையை எனது தேவைக்காகவே எடுக்கின்றேன். [illegible] வேண்டும் என்று புத்தகங்[illegible]டத்திலோ இல்லை'' என்றார் அவர்.

## நந்தாவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எனச் சுன்னாகம் பொலிஸில் உறவினர்கள் முறையிடச் சென்றபோது, அவர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட அந்தத் தம்பதியரைப் பார்ப்பதற்காக நேற்றுமுன்தினம் சென்ற பெண்ணின் தகப்பனும் சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளனர். (த-5-86)

## உண்ணா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அறிவித்துள்ளார். எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை இந்தப் போராட்டம் நடக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-4)

## கராடி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துக்குப் பதிலாக பண்டாக் கரடியின் உருவமடங்கிய சுமார் 167 தபால் முத்திரைகளை இந்த ஜப்பானியர் வைத்திருந்தார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டினர். (உ-16)

## பிரிட்டனில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தைத் தெரிவித்தனர். பிரிட்டிஷ் தமிழர் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் மாலை 4 மணிக்கு ஆரம்பித்தபோது சிறுவர் முதல் முதியவர்கள் வரை சுலோக அட்டைகளை தாங்கியும் பதாகைகளை ஏந்தியும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான கொள்கை வகுப்பாளர்களும் அதிகாரிகளும் தமது வேலை முடிந்து வீடு திரும்பிய போது போராட்டத்தை கூர்ந்து அவதானித்துச் சென்றனர்.

மாலை 5 மணிக்கு பிரிட்டிஷ் தமிழர் பேரவையின் மூத்த உறுப்பினர்கள் பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் தென் ஆசிய மற்றும் இலங்கைக்கான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை அவர்களது அலுவலகத்தில் சென்று சந்தித்தனர். ஈழத் தமிழர் சார்பில் பிரிட்டிஷ் தமிழர் பேரவையால் தயாரிக்கப்பட்ட மனுவைக் கையளித்தனர். தாயகத்தின் நிலைமைகளை விளக்கி, பிரிட்டன் அரசு செயற்படாமல் இருப்பதை வன்மையாகக் கண்டித்து தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

மாலை 6 மணி அளவில் இந்த நிகழ்வு உணர்வுபூர்வமாக நிறைவேறியது. பின்னர் தாயக விடுதலைக்காகத் தொடர்ந்து செயற்படுவோம் என்று மக்கள் உறுதி எடுத்துக் கொண்டனர்.

## நாடு முழுவதும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை தொடரவுள்ளதால் வடமாகாணத்திலுள்ள நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைகள் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் இன்று காலை 9 மணி முதல் 10 மணிவரை சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்பை மேற்கொள்ளும் அதேவேளை, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் முழுநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இன்று ஈடுபடுகின்றனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முக்கிய கூட்டமொன்று புதுக்கடையிலுள்ள அதன் அலுவலகத்தில் நேற்று அவசரமாக நடந்தது. இது விடயம் தொடர்பில் ஆராய்ந்தது. இதன்போதே ஒரு மணித்தியாலம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட முடிவெடுக்கப்பட்டது.

நாட்டின் சகல பாகங்களிலுமுள்ள நீதிபதிகளும் இன்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர் எனக் கூறப்பட்டாலும் அது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றில் தமது விசாரணை அறிக்கையை சபாநாயகரிடம் கையளித்தது.

பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் விசாரிக்கப்பட்ட ஐந்தில் மூன்று குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளியென நிரூபணமாகியது என்று அரசதரப்பு தெரிவுக்குழு உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் விசேட செய்தியாளர் மாநாட்டை நடத்தி அறிவித்தனர்.இந்நிலையில் மேற்படி விசாரணை அறிக்கையை ஏற்கமுடியாது என்றும், அது பக்கச்சார்பான விசாரணை என்றும் எதிர்க்கட்சியினர் மற்றும் நீதித்துறையினர் குறிப்பிட்டனர். (சி-4-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத் திட்டத்தில் அரசியல் தலையீடு இல்லை

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் றிசாத்

மன்னார்,டிசெ.12
இந்தியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்படும் வீடுகளுக்கான பயனாளிகள் தெரிவில், எவ்வித அரசியல் தலையீடுகளும் இடம்பெறவில்லையென அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.


மன்னார் மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் இந்திய நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற வீடுகளுக்கான பயனாளிகள் தெரிவில் முறைகேடு நிலவுவதாகவும், இதில் அரசியல் தலையீடுகளும், அழுத்தங்களும் பிரயோகிக்கப்படுவதாகவும் பரவலான குற்றச்சாட்டுகளை சில பொது அமைப்புகள் அண்மையில் முன்வைத்திருந்தன.

இந்த நிலையில் இந்திய வீட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் நிலவுவதாக சுட்டிக்காட்டி கடந்த செவ்வாய்க்கிழமை பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் மன்னார் நகரில் அடையாள உண்ணாவிரதமொன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சூழ்நிலையிலேயே கைத்தொழில் வாணிப அமைச்சர் றிசாத் பதியுதீன் குறித்த வீட்டுத்திட்டத்தின் பயனாளிகளின் தெரிவு உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதில் எவ்வித முறைகேடுகளும் அரசியல் தலையீடும் இடம்பெறவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய வீட்டுத் திட்டத்தின் முதலாம் கட்டப் பயனாளிகள் தெரிவில் அமைச்சராகிய தனக்குக் கூட அதில் தலையிடுவதற்கோ அல்லது பணிப்புரைகளை விடுப்பதற்கோ எவ்வித அதிகாரமுமில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். மன்னார் மாவட்ட அரச அதிபர் மற்றும் மன்னார் முசலி, நானாட்டான், மடு, மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்கள் ஆகியோர் மிகுந்த பொறுப்புணர்வுடனும், அதீத நேர்மையுடனும் செயற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் விசேட ஊடகவியலாளர் கூட்டமொன்றைக் கடந்த புதன் இரவு மன்னார் மாவட்ட செயலகத்தில் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(க-12)



கிளிநொச்சி மனித உரிமைகளுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வின்போது இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் திருமதி விஜயராணி சதீஸ்குமார் உரையாற்றுகின்றார். நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மெழுகுவர்த்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.
(க-6)

# பயனாளிகள் 110 பேருக்கு தென்னம்பிள்ளைகள்

துணுக்காய், டிசெ.12
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பயனாளிகள் 110 பேருக்கு தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டுள்ளன.

இராணுவத்தின் 10 ஆவது காலாட்படைப் பிரிவினர் இவற்றை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலிநகர் பொதுநோக்கு மண்டபத்தில் தென்னம் பிள்ளைகளை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

பயனாளிகள் 110 பேருக்கு தலா ஐந்து என்ற அடிப்படையில் தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டன.

இங்குள்ள சுமார் 10 கிராமங்களிலிருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தென்னம் பிள்ளைகள் வழங்கும் நிகழ்வுக்கு இராணுவ மேஜர் சம்பத் உதய குமார தலைமை வகித்தார். மாந்தை கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்கான இணைப்பாளர் பொ.பிரிந்தாபன், இராணுவ அதிகாரிகள் பொது மக்களெனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட இரணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.
(க-415)

# பாதுகாப்பற்ற 'மரப்பாலம்' அச்சத்துடன் செல்லும் மக்கள்

## நெடுங்கேணி - சேனைப்புலவு போக்குவரத்திலும் சிரமம்

நெடுங்கேணி,டிசெ.12
மரங்கள் மற்றும் தடிகள் அடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட பாலத்தினூடாக நெடுங்கேணியிலிருந்து சேனைப்புலவு செல்லும் மக்கள் தினமும் உயிராபத்தை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இங்குள்ள பழைய தபால் கந்தோர் வீதியில் அமைந்துள்ள பாலமே இந்த அச்ச நிலைக்கான முக்கிய காரணமாக உள்ளது.

நீண்ட காலமாக இந்தப் பாலம் புனரமைக்கப்படாத நிலையில் மக்கள் தாமாகவே முன்வந்து மரங்களைக் கொண்டு 'மரப்பாலம்' அமைத்துள்ளனர். ஆனால் இது பாதுகாப்பானதாக இல்லாததால் மக்கள் தினமும் உயிராபத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் நெடுங்கேணியிலிருந்து சேனைப்புலவு உமையாள் வித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்களும் இந்த வீதியையே பயன்படுத்தி வருவதால் உயிராபத்துக்களுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த ஆரம்பப் பாடசாலையில் தரம் 5இக்கு உட்பட்ட மாணவர்களே கல்வி கற்று வருவதால் இவர்களின் பெற்றோர்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

மேலும் வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் இந்தப் பாலம் உள்ளதால் போக்குவரத்துச் சிரமங்களும் தோன்றியுள்ளன.

எனவே உயிர்களைக் காவு கொள்ளும் வரை அதிகாரிகள் காத்திருக்காது இந்தப் பாலத்தை உடனடியாகப் புனரமைத்து வழங்குமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
(க-435)

# சுகாதாரக்கேடுகளுடன் கழிவு நீர் வாய்க்கால்



நெடுங்கேணி,டிசெ.12
நெடுங்கேணி பிரதான கடைத் தொகுதியில் அமைந்துள்ள கழிவு வாய்க்கால் சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்தும் வகையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாய்க்காலினுள் கழிவுப் பொருள்கள் நிறைந்து நீர் ஓடிச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதே இதற்கான காரணமாகும்.

இந்தக் கழிவு வாய்க்கால் பிரதான வீதியின் ஓரத்தில் அமைந்துள்ளது. இதனை உடைத்து வேலை செய்தவர்கள் வாய்க்காலினுள் வீழ்ந்த கற்கள், மண் என்பவற்றை அகற்றாததால் இந்த நிலை தோன்றியுள்ளது.

மேலும் கழிவுநீர் தேங்கி நிற்பதால் சுகாதாரக்கேடுகளும் தோன்றியுள்ளன. இங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளதால் டெங்கு போன்ற நோய்கள் பரவுவதற்கான ஏது நிலைகளும் அதிகரித்துள்ளன.

எனவே உரிய அதிகாரிகள் இதில் கவனம் செலுத்துவதுடன் வாய்க்காலில் நிறைந்துள்ள கழிவுகளை அகற்றி நீர் ஓடிச்செல்வதற்கு ஆவன செய்யுமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
(க-435)

## அரச சாராயத்தை கொண்டு சென்றவருக்கு ரூ.35,000 தண்டம்

கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சுமார் ஏழரைப் போத்தல் அரச சாராயத்தை எடுத்துச் சென்ற ஒருவருக்கு 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சுமார் ஏழரைப் போத்தல் அரச சீல் சாராயத்தை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற போது நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இந்த நபர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

குறித்த நபருக்கு 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் மோட்டார் சைக்கிள் தொடர் [illegible]
(க-6)

# வருமா மின்சாரமென காத்திருக்கும் கிளிநொச்சி மேற்கு குடும்பங்கள்

அக்கராயன்,டிசெ.12
கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் வசிக்கும் மக்கள் மின்சாரத்தின் வருகைக்காக காத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்கிய நிகழ்வின் போது இங்கு உரையாற்றிய விருந்தினர்கள் ஓகஸ்ட் மாதத்துக்குள் அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகள் ஒளி வெள்ளத்தினுள் மூழ்கும் என்ற உறுதி மொழியை வழங்கினர். ஆனால் இது வரை எதுவுமே நிகழவில்லை.

**ஸ்கந்தபுரம் பகுதிகள் ஒளி வெள்ளத்தினுள் மூழ்கும் என்ற உறுதி மொழியை வழங்கினர்.**

வன்னேரிக்குளத்தைத் தாண்டி ஜெயபுரம் ஊடாக மின்கம்பங்கள் நடப்பட்டுள்ள போதிலும் அக்கராயன் மருத்துவமனை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஓரிரு கடைகள் தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இதனால் அக்கராயன் மகாவித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை, ஸ்கந்தபுரத்தில் அமைந்துள்ள பாடசாலைகள், வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம், ஜெயபுரம் மகாவித்தியாலயம், வேரவில் இந்து மகாவித்தியாலயம், கிராஞ்சிப் பாடசாலை என்பன பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன.

மேலும் இங்குள்ள ஏனைய மருத்துவமனைகள் மற்றும் கிராமங்கள் மின்சாரம் வழங்கப்படுவதற்கான நாளை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் தெரியவருகின்றது.
(க-18)

# ஒட்டுசுட்டான் பாடசாலையின் பரிசளிப்பு விழா

முல்லைத்தீவு,டிசெ.12
முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி பாடசாலை அதிபர் திருமதி நித்தியகலா வேகாவனம் தலைமையில் இடம் பெற்றது. 2010 ஆம் ஆண்டிலிருந்து தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 100க்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற 20 மாணவர்கள் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வையொட்டி ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.
(க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலோசனைக் கூட்டம்

'கிழக்கு மாகாணத்தின் எதிர்காலத் தேவை' என்னும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாணத்தின் எதிர்காலத் தேவைகள் தொடர்பில் ஆராயும் கூட்டமொன்று நேற்று முன்தினம் திங்கட் கிழமை நடைபெற்றது.

கிழக்கு மாகாண வீதி அபி விருத்தி அமைச்சும் கிழக்கு மாகாண விவசாய அமைச் சும் இணைந்து மேற்படி கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

வீதி அபிவிருத்தி அமைச் சின் கேட்போர் கூடத் தில் நடைபெற்ற மேற்படி கூட் டத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப் பாசனம், வீடமைப்பும் நிர் மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் எம்.எஸ். உதுமா லெப்பை, கிழக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ஹாபிஸ் நசீர் உட்பட அமைச்சுக்களின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். (வ)


## குழந்தையின்மையா? கவலை வேண்டாம்

உயிரணுக்கள் உற்பத்தியின்மை/ குறைவு- முழுமையாக குணமடைய

### உலகிலேயே No:1 வைத்தியம்





**குழந்தையின்மை:** குழந்தையின்மைக்கு ஆண், பெண் இருவரும் காரணமாகின்றார்கள். பெண்கள் 50 சதம் காரணம் என்றால் 40 சதம் ஆண்களே காரணமாகின்றார்கள். 10 சதம் இருவரும் குழந்தை வேண்டாம் என்று இருப்பது. இதில் கணவன்,மனைவி இருவரும் ஒரு நாளைக்கு பலமுறை முழுமையான தாம்பத்திய உறவில் ஈடுபட்டு வந்தாலும் ஆண்களிடமிருந்து வெளியாகும் விந்துவில் 60%க்கும் மேல் உயிரணுக்கள் இருந்தால் மட்டுமே ஒரு பெண்ணை கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆனால் 60%க்கும் குறைவாக இருந்தால் கருத்தரிக்கச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தியின்மை/குறைவு போன்ற பிரச்சினைகளுக்கு 100 சதம் உத்தரவாதத்துடன் குணமடைய சிகிச்சையளிக்கப்படுகின்றது. இது போன்று பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை பிரச்சினை மாதப்பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாக குணமடைந்து குழந்தை பாக்கியம் பெறுவது உறுதி. பல நடிகைகள் எங்களிடம் சிகிச்சை பெற்று அழகான, இயற்கையான, கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த மருந்துகள் அனைத்தும் அரசு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்பே சிகிச்சைக்குத் தரப்படுகின்றன. எனவே 100 சதம் பக்கவிளைவுகள் கிடையாது. சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr. G. ஜெகதீஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009

**தொடர்பு : 0091 9842457673**

**இலங்கையில் தொடர்பு : 075 4154346**

### ஸ்ரீதேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
E-mail: sridevisiddha@gmail.com


## ஏறாவூரில் கான்ஸ்டபிள் உயிரிழப்பு

மட்டக்களப்பு, டிசெ.12

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று மாரடைப்பினால் உயிரிழந்தார்.

ஏறாவூர் பொலிஸ் நிலை யத்தின் போக்குவரத்துப் பிரி வில் கடமையாற்றும் முஸ்தபா முகம்மது ரபீக் என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஏறாவூரில் உள்ள தனது வீட்டில்அவர் கடமைக்குச் செல்வதற்காக தயாராகிக் கொண்டிருக்கும்போது நெஞ்சு வலி ஏற்பட்டது. இந்த நிலை யில் ஏறாவூர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவேளை யில் அவர் வழியில் உயிரிழந்தார் என்று வைத்தியசாலையில் தெரி விக்கப்பட்டுள்ளது. சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான விசாரணையை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (வ)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுநராகக் கடமையாற்றும் இ.ஜனந்தன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி இராஜேந்திர ராவ் விமலாதேவி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலகம், வேலணை
(26631) (6.7.4)


## துன்பம் தீர அருள் வாக்கு

குழந்தைப் பேறு இல்லாதவர்கள், திருமணத்தடை; தோஷம் உள்ளவர்கள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள்வாக்கு கூறப்படும். வெள்ளவத்தை பெர்ணாந்து வீதியில் உள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் 13.12.2012- 15.12.2012 வரை யாழ்ப்பாணத்தில் அருள் வாக்கு கூற உள்ளார்.

தொடர்புகளுக்கு: ஞானவைரவர் ஆலயம், கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
பூசை நேரம்: மு.ப. 10.30 மணி
பி.ப. 4 மணி
T.P 077 80 12226 அம்மா
(26688) (6.7.4)


## வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
## கிளைக்குழு தெரிவுக்கான அறிவித்தல்
## 15.12.2012- சனிக்கிழமை

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20. 2 இன் படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக இக்கிளைகளின் பொதுச்சபை கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பிரிவு 06 இற்கமைய கீழ் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி அணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம் 15.12.2012 சனிக்கிழமை மு.ப. 10.00மணி
02. கூட்டம் நடைபெறும் இடங்கள் -விவரம் பின்வருமாறு

| தொ. இல. | கிளை இல. | கிளைகளின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 83 | புங்குடுதீவு மேற்கு | நண்பர்கள் விளையாட்டுக்கழகம் புங்- மேற்கு |
| 02 | 85 | புங்குடுதீவு கிழக்கு | தில்லைப் பற்று முன்பள்ளி நிலையம் புங்- கிழக்கு |
| 03 | 86 | வேலணை கிழக்கு | உற்பத்தி நிலையம் வேலணை -01 |
| 04 | 88 | வேலணைமேற்கு | திருவள்ளுவர் சன சமூகநிலையம் வேலணை மேற்கு |
| 05 | 89 | வேலணை தெற்கு | தலைமைக் காரியாலயம் வேலணை 01 |
| 06 | 90 | அல்லைப்பிட்டி | சென்.பிலிப்ஸ் கடற்றொழிலாளர் கூ.சங் அல்லைப்பிட்டி-2 |
| 07 | 92ஏ | நயினாதீவு தெற்கு | அண்ணா சன சமூக நிலையம் நயினாதீவு தெற்கு |
| 08 | 92பி | நயினாதீவு வடக்கு | ஸ்ரீ அம்பிகா சன சமூகநிலையம் நயினாதீவு வடக்கு |

இந்த அறிவித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிளையின் பொதுச்சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் ஒழுங்கு விதி பிரிவு 07க்கு அமைய தவிசாளரினால் ஏற்கனவே தனித்தனி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த அறிவித்தலை தமக்கு வழங்கப்பட்ட தனித்தனி அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட தங்களது கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகமளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

மா. குணசிங்கம், கௌரவ செயலாளர்,
வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக கேள்விப்பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தமது நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் மேல் நீதிமன்ற ஆணையாளர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 26.12.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது சீலிடப் பட்ட கடித உறையில் வைத்து நேரடியாக மேல் நீதிமன்ற கணக்குக் கிளையில் கையளித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகச் சுத்திகரிப்புப் பணிக்கான கேள்விப்பத்திரம்- 2013 எனத் தவறாது குறிப்பிடல் வேண்டும்.

ஏனைய நிபந்தனைகள் பின்வருமாறு

* சுத்திகரிப்புப் பணிக்காக ஒரு மேற்பார்வையாளர் உட்பட மொத்தம் 08 பேர் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். அவர்களில் 04 பேர் பெண்களாக இருத்தல் வேண்டும்.
* காலை 7.30 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.
* சுத்திகரிப்பிற்குரிய உபகரணங்கள், ஏனைய மூலப்பொருள்கள் யாவும் தங்களால் விநியோகிக்கப்படல் வேண்டும்.
* சனி, ஞாயிறு, பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்கள் கடமை நாள்களாக கருதப்படும்.
* இது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளருடன் அலுவலக நேரத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

ஜெ.விஸ்வநாதன்,
தவிசாளர்,
மேல் நீதிமன்ற கேள்விச் சபை,
மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
(C/2149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாதகமான பின்விளைவுகளை கேட்டு வாங்கும் போக்கு...!

இலங்கையின் முதலாவது பெண் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுகள், நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடத்திய விசாரணை ஆகியவை தொடர்பான சர்ச்சைகள் நீடிக்கின்றன; எண்ணெய்ச் சட்டி போன்று கொதிக்கிறது என்பதே பொருத்தம். காத்திரமான முடிவுக்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

தெரிவுக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெறுவதற்கு இன்னமும் ஒருமாதம் இருக்கும் நிலையில், உள்நாட்டிலும் அனைத்துலகத்திலும் அரசின் நடவடிக்கை கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. பிரதம நீதியரசரை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, சர்வதேசத் தரம்கொண்டதல்ல என்பதே பெரும்பாலானோரின் கருத்து.

எதிர்க்கட்சியினர் மட்டும் அல்ல, அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கொள்கை உடைய சிரேஷ்ட அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் இதே கருத்தையே கொண்டுள்ளனர். தெரிவுக்குழு விசாரணைக்கு முன்பு சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு அவர்கள் எழுதிய கடிதம் தற்போது வெளியாகி உள்ளது.

பிரதம நீதியரசரை நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் விசாரிப்பதற்கு தாம் இணங்கமுடியாது என்று அவர்கள் தெரிவித்திருந்தனர். அத்துடன் ஓய்வுபெற்ற மூன்று உயர்நீதிமன்ற நீதியரசர்களும் தெரிவுக்குழுவில் இடம்பெற வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி இருந்தனர்.

பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணை இவ்வளவு பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக மாறும் என்று அரசு எதிர்பார்த்திருக்கவில்லை எனலாம். பொதுமக்கள், மதத்தலைவர்கள், சட்டத்தரணிகள், நீதிபதிகள் என்று பல தரப்புகளிடம் இருந்தும் நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணைக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது.

மிகக் குறிப்பாக, நாட்டின் நீதிபதிகளே நீதிகேட்டு வீதிக்கும் வந்து போராடும் நிலைமை நாடு சுதந்திரம் அடைந்த பின்பு முதல்தடவையாக ஏற்பட்டிருப்பது மிகவும் ஆபத்தான ஒன்றாகும்.

பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாடு முழுவதிலும் இன்று, அடையாள பணிப் பகிஷ்கரிப்புக்கு 11, 000 உறுப்பினர்களைக் கொண்ட பலம் வாய்ந்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. வடக்கே யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், பருத்தித்துறை, கிளிநொச்சி உட்பட அனைத்து நீதிமன்றங்களிலும் முழு அளவிலான பணிப் பகிஷ்கரிப்பு ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. வெள்ளிவரை இது தொடரும். சனிக்கிழமை மீண்டும் கூடி அடுத்த நடவடிக்கை குறித்து ஆராயத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு குற்றவியல் பிரேரணை மூலம் பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்தாலும் கூட இப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. அரசு புதிதாக நியமிக்கும் பிரதம நீதியரசரை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்க மறுத்தால், நிலைமை மோசமாகிவிடும். பிரபல்யம் வாய்ந்த சிரேஷ்ட சட்டத்தரணிகளில் ஒருவரான எஸ்.எல். குணசேகர, புதிய பிரதம நீதியரசரை அரசு நியமித்தால் அவரை ஏற்கக்கூடாது என்று சட்டத்தரணிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் விஜயதாச ராஜபக்ஷவோ, புதிய பிரதம நீதியரசர் பதவிக்கு அரசு எவரையாவது நியமிக்கும் பட்சத்தில் அவர் அந்த நியமனத்தை ஏற்கக்கூடாது என்று அறிவுறுத்தி உள்ளார்.

இத்தகைய பொங்கு நிலையில், அரசு புதிய பிரதம நீதியரசர் ஒருவரை நியமித்தாலும் பிரச்சினை தீரப்போவதில்லை என்பதற்கான பல அறிகுறிகள் நாளாந்தம் மேலெழுந்து வருகின்றன. மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்திலும் இந்த விவகாரமும் இலங்கை அரசுக்குப் பிரச்சினையைக் கொடுக்கப்போகிறது. ஆசிய நாட்டவர்களைத் தலைவர்களாகக் கொண்ட சர்வதேச சட்டம் மற்றும் நீதிச்சேவை அமைப்புகள் இலங்கையில் தற்பொழுது இடம்பெறும் நிகழ்வுகளை, மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. இது விடயத்தில், அரசு தான் நினைத்ததை முடிக்கும் வன்மப் போக்கில் செயற்பட்டால் கொமன்வெல்த் அமைப்பின் உறுப்புரிமையை இழக்க நேரிடலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கிடையில், நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையில் பிரச்சினையை உண்டாக்கி இலங்கையை மற்றொரு பாகிஸ்தான் ஆக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டி உள்ளார். சட்டவாக்கமும், நீதித்துறையும், நிறைவேற்றதிகாரமும் இணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தி உள்ளார்.

ஜனாதிபதி எதனைக் கூறினாலும் இந்த நாட்டில் நான்காவது உயர் நிலையில் இருக்கும் பிரதம நீதியரசரை ஒரு சாதாரண தெரிவுக்குழுமுன் நிறுத்தியமை மிகவும் மோசமான நடவடிக்கையே.

ஜனநாயகத்தின் நான்கு பலமான தூண்களில் ஒன்றான நீதித்துறை மீது, அதன் உச்சநிலை அதிகாரியான பிரதம நீதியரசர் மீது, கை வைப்பதற்கு அரசு மேற்கொண்ட முடிவும் அது சார்ந்த விசாரணையும் நாட்டில் பெரும் கொந்தளிப்பை உண்டாக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன. அதன் விளைவுகள் குறித்து மனம் கொள்ளாமல் அரசு செயற்படுமானால், பாதகமான பெறுபேறுகள் மற்றும் பின் விளைவுகளைக் கேட்டு வாங்குவதாகவும் அமையும். அதாவது மக்கள் நலனா, ஆட்சியாளர் நலனா பிரதானம் என்ற நிலை உருவாகும். அது நிச்சயம்.



# பௌத்த பிக்குகளின் அடாவடி

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கண்டனம்

ஹம்பாந்தோட்டை வீரகெட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவமானது இந்த நாட்டில் பௌத்த பிக்குகளே ஆளும் தரப்பினராக எடுத்துக்காட்டுகிறது.

குறித்த தேவாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல் சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,ரெலோ இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஹம்பாந்தோட்டை வீரகெட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை விசேட திருப்பலி இடம்பெற்றுக்கொண்டிருந்த போது பௌத்த பிக்குகள் சுமார் 80 பேர் தலைமையில் வந்த சுமார் ஆயிரம் பேர் அடங்கிய கும்பலொன்று தேவாலயத்தினுள் அத்துமீறி நுழைந்து பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

அவர்கள் ஆலயப் பொருள்களையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது ஆலயத்தினுள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த பலர் காயமடைந்துள்ளனர்.

கடந்த 11 வருடங்களுக்கு மேலாக குறித்த தேவாலயம் அந்த இடத்தில் அமைந்திருந்த போதும் ஆலயத்தின் சகல நடவடிக்கைகளும் பௌத்த பிக்குகளிடம் அனுமதி பெற்றே செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த ஆலயம் மீதான தாக்குதல் உட்பட நாட்டில் பௌத்த பிக்குகளால் பல கிறிஸ்தவ தேவாலயங்கள்,பள்ளிவாசல்கள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவங்களின் மூலம் சிறுபான்மையின மக்களுக்கு இந்த நாட்டில் எந்தவித உரிமைகளும், சுதந்திரமும் இல்லை என்பது தெளிவாகின்றது.

ஹம்பாந்தோட்டை மாவட்டம் ஜனாதிபதியின் மாவட்டமாக காணப்படுகின்ற போதும் அங்குள்ள கிறிஸ்தவ மக்களுக்கும்,அங்குள்ள ஆலயங்களுக்குமான பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

தொடர்ந்தும் பௌத்த பிக்குகள் இவ்வாறான செயலில் ஈடுபடுவதன் மூலம் இந்த நாட்டில் அனைத்து இன மக்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்த முடியாது.

இந்த அடாவடித் தனமான சம்பவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது.

எனவே இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி உடன் தலையிட்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்- என்றுள்ளது.

(ம-12)

### கெற்பேலியில் முன்னைய இடத்தை

# ராணுவம் கையளிக்க மறுத்ததால் கோயில் காணியில் மயானம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

35 வருடகாலமாக மக்களால் பாவிக்கப்பட்டு வந்த கெற்பேலி மயானத்தை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளமையால் அதற்கு அருகிலுள்ள கோயில் காணியில் புதிய மயானத்தை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தெரிவித்தார்.

கெற்பேலி மக்களால் 1983 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டு வந்த மயானத்தை இராணுவத்தினர் படைமுகாம் அமைப்பதற்காக பெற்றுக் கொண்டுள்ளனர். காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் காணியிலேயே மயானம் அமைக்கப்பட்டிருந்தது. இதனால் குறித்த அரச காணியை படையினர் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் இருந்து நேரடியாகப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இதனால் மக்கள் குடிமனைப் பகுதியில் உள்ள இடம் ஒன்றை மயானமாகப் பயன்படுத்துமாறு படையினர் கோரியிருந்தனர். இதனை மக்கள் எதிர்த்த போதும் படையினர் மயானத்தை விடுவிக்க சம்மதிக்கவில்லை.

இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபையின் தலைவர் பொது மக்களுடன் விசேட சந்திப்பு நடத்தினர். இதன் பிரகாரம் படையினர் ஆக்கிரமித்த மயானக் காணிக்கு அண்மையாகவே தனியார் ஒருவரின் கோயில் காணியில் புதிய மயானம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

# கட்டணம் செலுத்தப்படாமையால் பூட்டப்பட்ட குடிதண்ணீர் குழாய்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.12

கட்டணம் செலுத்தாமையால் பாஷையூர் பகுதியில் 6 முதல் 7 வரையான குடிதண்ணீர் விநியோகக் குழாய்கள் பூட்டப்பட்டுள்ளன.

இதை நாங்கள் ஆதரிக்க முடியாது. மக்களுக்கு இலவசமாக குடிதண்ணீர் விநியோகிக்கப்பட வேண்டும் என்று யாழ்.மாநகர சபையின் எதிரணியினரான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏழு உறுப்பினர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

வரவு-செலவுத்திட்ட 2013 இற்கான மதிப்பீடு தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் யாழ்.மாநகர சபையின் எதிரணியினர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இந்த விடயம் கூறப்பட்டது.

குடிதண்ணீருக்கு கட்டணம் அறவிடுவது ஏற்புடையதல்ல. யுனிசெவ் நிறுவனம் இலவசமாக வழங்கியுள்ளது. மாநகரசபையும் முன்னர் மக்களுக்கு இலவசமாகவே குடிதண்ணீரை வழங்கியது.

கட்டணம் வழங்கப்படவில்லை என்பதற்காக விநியோகக் குழாய்களை மூடிவிடுகிறார்கள்.

மக்கள் இது தொடர்பாக குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர்.- என்று இந்தச் சந்திப்பில் மேலும் கூறப்பட்டது. (ம-7)

## டிசெம்பர் 12 இல் பிறந்தோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.12

டிசெம்பர் 12 ஆம் திகதி பிறந்தோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இல்ல மண்டபத்தில் அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் லயன் இ.குழந்தைவடிவேலு, மக்கள் வங்கியின் கைதடி கிளை முகாமையாளர் க.ஸ்ரீதரன், ஹற்றன் நஷனல் வங்கியின் கைதடி கிளை முகாமையாளர் கே.பி.பரணிதரன், இலங்கை வங்கியின் கைதடி கிளை முகாமையாளர் செல்வி நா.சுமங்கலா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

நிகழ்வில் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி பிறந்தவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-17)

# ஏழு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் குப்பிளானில் அபகரிப்பு

### வயோதிபத் தம்பதியினர் மயங்கிய நிலையில்

வலி.வடக்கு,டிசெ.12

குப்பிளான் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் நீரிறைக்கும் இயந்திரம், மூன்று புதிய கையடக்கத் தொலைபேசிகள் என்பனவும் அபகரிக்கப்பட்டுள்ளன என்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு குப்பிளான் சந்திப் பகுதியில் உள்ள குறித்த வீட்டினுள் நுழைந்த திருடர்கள் இவற்றை அபகரித்தும் சென்றுள்ளனர்.

குறித்த தம்பதியினர் மயங்கிய நிலையில் நேற்று இருந்ததை அயலவர்கள் அவதானித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றுப் பகல் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த தம்பதியினரின் பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ளமையால் இவர்கள் தனியே வசித்து வந்துள்ளனர்.

(ம-4-86)

# தேசிய சுகாதார வார நடைபயணம் இன்று

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு விசேட நடைபயணம் இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் ஆரம்பித்து யாழ்.நகர வீதிகளூடாக யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு வரை இடம்பெறவுள்ளது.

உடற்பயிற்சி தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன் ஓர் ஆரோக்கிய நடை பவனியாக தேசிய சுகாதார வாரத்தின் மூன்றாவது தினமான இன்று விழிப்புணர்வு தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ள நிவாரணம் வழங்க சங்கக்கடைகள் இழுத்தடிப்பு

முல்லைத்தீவு, டிசெ.12

முல்லைத்தீவில் வெள்ள நிவாரணம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் இழுத்தடித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இடர் முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாட்டில் அம்பலவன்பொக்கணை, முள்ளியவளை ஆகிய கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிவாரணத்துக்கான முத்திரை வழங்கப்பட்டும் கூட அதனை சங்கக்கடைகளில் பெறமுடியவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

முள்ளியவளை, மாத்தளன் ஆகிய சங்கக் கிளைகளுக்கென ஒரு முகாமையாளரே உள்ளார் என்றும், அவர் கொழும்பு சென்று

**நிவாரணத்துக்கான முத்திரை வழங்கப் பட்டும் கூட அதனை சங்கக் கடைகளில் பெற முடியவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.**

விட்டதால் நிவாரணம் வழங்க முடியாது என்றும் தெரிவிக்கப்படுவதாக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சங்கக் கிளைகளில் நிவாரணப் பொருள்கள் முடிவடைந்து விட்டன என்றும் அவை நேற்று முன்தினம் சங்கக் கிளைகளுக்கு வந்து சேர்ந்துள்ளதால் நிவாரணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# இராணுவத்தில் இணைந்த தமிழ் பெண்களை பெற்றோர் பார்வையிடுவதற்கு அனுமதி மறுப்பு

### பயிற்சிக்காக வேறு இடத்துக்கு அனுப்ப ஏற்பாடு

கிளிநொச்சி, டிசெ. 12

இராணுவத்தில் இணைக்கப்பட்ட பெண்பிள்ளைகளை 3 மாதங்களுக்குப் பார்வையிட முடியாது எனவும் அவர்கள் மேலதிக இராணுவப் பயிற்சிக்காக வேறு இடங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்றும் இராணுவத்தினரால் பெற்றோர்களிடம் தெரிவிக்கப்பட்டதாக அறியவருகிறது. கடந்த ஞாயிற்றுக் கிழமை தமது பிள்ளைகளைப் பார்க்கச் சென்ற பெற்றோர் ஏமாற்றத்துடன் இராணுவத்தினரால் திருப்பியனுப்பப்பட்டனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

**இராணுவத்தில் இணைக்கப்பட்ட பெண் பிள்ளைகள் கிளிநொச்சி, கிருஷ்ணபுரத்தில் இராணுவ முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.**

இராணுவத்தில் இணைக்கப்பட்ட பெண் பிள்ளைகள் கிளிநொச்சி, கிருஷ்ணபுரத்தில் இராணுவ முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களைப் பெற்றோர் ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெற்றோர் பிள்ளைகளைப் பார்வையிடச் சென்றுவந்தனர். இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தமது இராணுவத்தில் சேர்க்கப்பட்ட பிள்ளைகளைப் பார்வையிடச் சென்ற பெற்றோருக்கு ஏமாற்றமே கிடைத்தது.

உங்கள் பிள்ளைகளை மூன்று மாதங்களுக்குப் பார்வையிட முடியாது என்று அங்கு கடமையிலிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் பெற்றோருக்குத் தெரிவித்து அவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

தமது பிள்ளைகள் இராணுவத்தில் இணைக்கப்படும்போது அந்தந்தப் பகுதிகளிலேயே பயிற்சியளிக்கப்படுவர் என்றும், சொந்த இடங்களிலேயே கடமையாற்றுவர் எனவும் முன்னர் தெரிவிக்கப்பட்டதாகவும், தற்போது வேறு இடங்களுக்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டதால் தாம் பயமுற்று இருப்பதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர். (ஐ-426)



கற்சிலைமடு மகாவித்தியாலயத்துக்கு இரு மாடிக்கட்டடம் துரித கதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. (ஐ-500)

### வாசிப்பு மாத பரிசளிப்பு

புதுக்குடியிருப்பு, டிசெ.12

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் ஒட்டுசுட்டான் பொதுநூலகத்தின் வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் பிரதேச சபை செயலாளர் கு.மிதிலைநாதன் தலைமையில் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கா.உதயராஜா கலந்துகொண்டார். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்கள் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

## வீதியில் படுத்துறங்கும் கட்டாக்காலிகளால் அவதி

முள்ளியவளை, டிசெ. 12

முள்ளியவளைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட 'காப்பெற்' வீதியில் இரவுவேளைகளில் கட்டாக்காலி கால்நடைகள் தங்குவதால் வீதிப்போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் வாகனங்களைச் செலுத்த முடியாத அளவுக்கு கால்நடைகள் சுதந்திரமாக வீதியில் படுத்து உறங்குகின்றன. இதனால் அதிக விபத்துக்கள் இடம்பெறுகின்றன. சில சமயங்களில் வாகனச் சாரதிகள் கால்நடைகளை மோதிவிட்டும் சென்றுவிடுகின்றனர். இதனால் இறந்த கால்நடைகள் வீதியோரங்களில் கிடந்து துர்நாற்றம் வீசும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

கால்நடைகளை வளர்ப்போர் இதில் கவனம் செலுத்தாததால், இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-433)

# உறவுகளைத் தேடி அலையும் எமக்கு நீதி பெற்றுத் தாருங்கள்

## மன்னார் மக்கள் ஜனாதிபதிக்கு மனு



மன்னார்,டிசெ.12

நீண்ட காலமாக காணாமற்போன உறவுகளைத் தேடி அலையும் எமக்கு விரைவில் நீதியைப் பெற்றுத் தாருங்கள்.

இவ்வாறு மன்னார் மக்கள் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று முன்தினம் காணாமற்போனோரை கண்டறிய வலியுறுத்தி மன்னாரில் பேரணி நடத்தப்பட்டது.

பேரணியின் இறுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1990 ஆம் ஆண்டு வன்செயல் இந்த நாட்டில் ஆரம்பித்த காலம் முதல் இன்று வரையான 22 வருடகாலத்தில் பெருந்தொகையான தமிழர்கள் இந்த நாட்டில் காணாமற் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் ஆயுதப் படைகளால் கைதுசெய்யப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்டவர்கள், அடையாளம் தெரியாத ஆயுதம் தரித்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டோர், பொலிஸாராலும் ஆயுதப்படையினராலும் விசாரணைக்கென்று அழைக்கப்பட்டதன் பேரில், தாமாக படை முகாம்களுக்கும் பொலிஸுக்கும் சென்றவர்கள் எனப் பலவகைப்பட்டோர் அடங்குகின்றனர்.

மேலும் வன்னிப் போரின் போது வன்னியில் குடியிருந்தவர்களாக அரசு பதிவேடுகளில் காணப்பட்டவர்களின் தொகைக்கும் போரின் இறுதியில் பல முகாம்களில் தடைப்படுத்தி வைக்கப்பட்ட மக்களின் தொகைக்கும் இடையில் காணப்படும் வித்தியாசம் 146,000 பேருக்கும் மேலானதாகும். இந்த 146,000 பேரும் காணாமற் செய்யப்பட்டவர்களுள் அடங்குவர். இவர்களுள் எமது மன்னார் மாவட்டத்தில் காணாமற் செய்யப்பட்ட எமது உறவுகளும் அடங்குகின்றனர்.

இக்கணக்கின்படி எமது மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் எம்மிடமுள்ள கணக்குகளின் விவரம் வருமாறு -

1990 முதல் 2012 வரை காணாமல் ஆக்கப்பட்ட 600 இற்கு மேற்பட்டோர்.

கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் 300 இற்கு மேற்பட்டோர்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டோர் 100 இற்கு மேற்பட்டோர்.

இன்னமும் தடுப்பு முகாம்களில் மீளக்குடியமர அனுமதியின்றி அடைக்கப்பட்டுள்ளோர் 200 இற்கு மேல்.

பதிவு செய்யப்பட்ட வழக்குகள் காரணமாக சிறையிலிருப்போர் 20 இற்கு மேல்.

கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக இவர்களை மீட்கும் முயற்சியாக நாம் பொலிஸ் படைத்தரப்பு, அரச அதிபர்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை ஆணைக்குழுக்கள், ஜனாதிபதி ஆணைக்குழுக்கள், என்பவற்றிற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளும் அவர்களால் அழைக்கப்பட்டு நாம் பல தடவைகளில் முகம்கொடுத்த விசாரணைகளும் ஏராளம். எமது உறவுகளின் இழப்பு குறித்து அரசு எதுவித அக்கறையும் இன்றி உள்ளது.

எம்மால் இழக்கப்பட்ட இந்த உறவுகள் பற்றிய எமது கவலையைத் திசை திருப்பவோ என்னவோ அரசு எம் மீது வேறு பல சுமைகளையும் தொடர்ந்தும் சுமத்தி வருகிறது

★ மீளக்குடியமர்ந்தவர்களுக்கு உரிய நிவாரணமோ வேலை வாய்ப்புக்களோ, வழங்கப்படவில்லை.

★ பல நூற்றுக்கணக்கானோருக்கு அவர்களது சொந்த நிலத்தில் மீள்குடியமர அனுமதி வழங்கப்படாது காடுகளிலும் வெற்றுத் தரிசு நிலங்களிலும் அந்தரிக்க விடப்பட்டுள்ளனர்.

**தமிழ்ப்பகுதிகளில் அதிகரித்த இராணுவ பிரசன்னத்தை ஏற்படுத்தி மக்களது இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டுள்ளது.**

★ காணியுரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதுடன் வளமான நிலங்களும் இராணுவத் தேவைக்கும் தென்பகுதி மக்கள் குடியேற்றத்திற்குமாக கையகப்படுத்தப்பட்டுள்ளன.

★ தமிழ் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி கரையோரங்களில் படையினரின் உதவியுடன் வேற்றிடத்தவர்கள் குடியமர்த்தப்பட்டு தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் சூறையாடப்பட்டுள்ளது.

★ தமிழ்ப்பகுதிகளில் அதிகரித்த இராணுவ பிரசன்னத்தை ஏற்படுத்தி மக்களது இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டுள்ளது.

★ பொது மக்களின் வீடுகளும் வணக்கஸ்தலங்களும் படைத் தரப்பினால் ஆக்கிரமிக்கப்பட்டு யுத்தம் முடிந்த பின்னரும் அகதி வாழ்க்கை வாழும் அவல நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

★ ஒட்டுமொத்தமாக ஓர் இன அழிப்பு மௌன யுத்தம் படைத்தரப்பு மூலம் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்த நாள்களில் சிறியதொரு நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்ட மக்கள் கொத்துச் கொத்தாக குடும்பம் குடும்பமாக அழிக்கப்பட்டபோது அடைந்ததை விட மிக அதிகமான துயரத்தை எமது உறவுகளின் இருப்பையோ, இறப்பையோ அறியாமல் இருப்பதன் மூலம் அனுபவித்து வருகிறோம்.

இந்த துன்பத்தை நீக்க நாட்டின் அதி உயர் அதிகார தலைவராகிய தாங்கள் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி, எமது அவலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு பணிவுடன் இரந்து வேண்டுகின்றோம்.- என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுதடைந்த நிலையில் சேவையாற்றும் தனியார் பஸ்களின் வழி அனுமதி ரத்து

## ஜனவரி முதல் நடைமுறைக்கு

**தனியார் பஸ் களின் உரிமையாளர்கள் இந்த மாத இறுதிக்குள் வாகனங் களைத் திருத்தி நல்ல முறையில் வைத்திருக்க வேண்டும்.**

யாழ்ப்பாணம்,டிசெ.12


பயணிகளின் பயணத்துக்கு தகுந்த முறையில் இல்லாது பழுதடைந்த நிலையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் வாகன வழி அனுமதிப் பத்திரம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இரத்துச் செய்யப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் ஆசனங்கள் சேதமடைந்து இருப்பது, ஜன்னல், கதவுகள், கம்பிகள் என்பன உடைந்த நிலையில் இருப்பது, ரயர்கள் தேய்வடைந்து காணப்படுவது போன்ற காரணங்களால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான பஸ்கள் அடிக்கடி பழுதடைந்து தாமதமான சேவையை வழங்குவது தொடர்பாகப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாடுகளை வழங்கியுள்ளனர்.

பயணிகளின் சௌகரியமான, தாமதமற்ற சேவையை தனியார் பஸ்கள் வழங்க வேண்டும் என்பதற்கமைவாக பழுதடைந்த நிலையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் வழி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. வாகன வழிஅனுமதிப்பத்திரம் பெற்று சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் இந்த மாத இறுதிக்குள் வாகனங்களைத் திருத்தி நல்ல முறையில் வைத்திருக்க வேண்டும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பழுதடைந்த பஸ்களை சோதனையிட்டு அதற்கான வழிஅனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பஸ் உரிமையாளர்கள் இதனைக் கவனத்தில் எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)



யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் 22 ஆம் அணியினர் பாடசாலைகளில் மரம் நடுகையை மேற் கொண்டு வருகின்றனர். இதன் முதற்கட்டமாக கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலயத்தில் மரம்நடுகை செய்தபோது..... (ம)

## கருங்குளவிகள் தாக்கி ஒருவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, டிசெ. 12

சிறுவர்களின் கல்லெறி விளையாட்டால் வீதியால் சென்றவருக்கு அவலநிலை ஏற்பட்டது.

சிறுவர்கள் பனை மரம் ஒன்றில் காணப்பட்ட கருங்குளவிக் கூட்டுக்கு கல்லால் எறிந்துள்ளனர்.

இதன்போது அங்கிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் வீதியில் சென்றவரைத் தாக்கின.

குளவிகளின் தாக்குதல்களுக்கு இலக்கான வரணி வடக்கைச் சேர்ந்த சாணையன் பொன்னுத்துரை (வயது-59) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ம-9)



நல்லூர் பிரதேச செயலகம், முன்பள்ளி மாணவர்களுக்கென யாழ்.வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் புத்தகங்களை வழங்கியது. நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோர் புத்தகப் பொதியை உதவி கல்விப் பணிப்பாளர் ஆர்.விமலனிடம் வழங்குகிறார்கள். (ம-7)

## கட்டுடை சனசமூக நிலையத்தை இரவில் பூட்டி வைக்க கோரிக்கை

### கலாசார சீரழிவுக்கு இடவசதி செய்யலாமா?

வலி.தென்மேற்கு, டிசெ. 12

வலி.தென் மேற்கு பிரதேசத்தில் உள்ள கட்டுடை சனசமூக நிலையம் கட்டுப்பாடின்றிப் பகலிரவாக 24 மணி நேரமும் திறந்திருப்பதால் இரவு நேரங்களில் அங்கு கலாசார சீரழிவுகள் இடம்பெறவாய்ப்புண்டு என பிரதேச சபையின் உதவித் தலைவர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

இரவு நேரங்களில் சனசமூக நிலையத்தைப் பூட்டி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையைக் கோரியுள்ளார்.

தற்பொழுது சனசமூக நிலையம் இயங்கிவரும் இந்தக் கட்டடத்தில் ஆரம்ப காலம் தொட்டு பலவருடங்களாக கிராம முன்னேற்றச் சங்கம் இயங்கி வந்தது.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர்க் காலச் சூழ்நிலை காரணமாக இந்தக் கிராம முன்னேற்றச் சங்கம் ஒரு வீட்டில் இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் கட்டுடை மக்களின் நலன் கருதி வெறிச்சோடிக் கிடந்த இந்தக் கட்டடத்தில் சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இந்தச் சனசமூக நிலையம் கட்டுப்பாடின்றி இரவு பகலாக 24 மணி நேரமும் திறந்திருக்கின்றது.

அமைதிச் சூழ்நிலையில் இருக்கும் இந்தக் கட்டடத்தில் இரவு நேரங்களில் பல விதமான கலாசாரச் சீரழிவுகள் இடம்பெறச் சந்தர்ப்பம் இருப்பதால் இரவு நேரங்களில் நிலையத்தைப் பூட்டி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உதவித் தலைவர், பிரதேச சபையைக் கோரியுள்ளார். (ம-115)

## லைசென்ஸ் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம்

வடமராட்சி, டிசெ. 12

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞர் ஒருவர் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரிடம் அகப்பட்டு 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞர் சிக்கிக் கொண்டார்

இவர் மீது பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சாரதியான இளைஞர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ம-8)

## தனியார் பஸ்களை ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்த அறிவுறுத்து

### மீறும் சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை

**யாழ்.பஸ்தரிப்பிடத்தில் உள்ள நெருக்கடியைத் தவிர்க்கவே இந்த நடவடிக்கை.**

யாழ்ப்பாணம்,டிசெ.12

தனியார் பஸ்களைத் தரித்து நிறுத்துவதற்கு யாழ். பண்ணை பஸ்தரிப்பிடத்தில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஏனைய இடங்களில் தனியார் பஸ்களை தரித்து நிறுத்தும் தனியார் பஸ் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ்.பிராந்திய போக்குவரத்து பொலிஸ் பிரிவு அறிவித்துள்ளது.

யாழ்.நகர் பஸ் தரிப்பிடத்தில் ஏற்படக்கூடிய வாகன நெரிசலைக் கட்டுப் படுத்துவதற்காக பஸ்தரிப்பிடத்திலிருந்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் சேவை நேரம் முடிந்தவுடன் பஸ்களை நிறுத்தி வைப்பதற்காக பண்ணை முற்ற வெளி பஸ் தரிப்பிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே தனியார் பஸ்களை தமது சேவை நேரம் முடிந்து ஓய்வுக்காக ஒதுக்கப்படும் நேரத்தில் கண்ட கண்ட இடங்களில் நிறுத்த வேண்டாம்.

இதனால் யாழ்.நகருக்குள் வாகன நெரிசல் ஏற்படுவதுடன் பாதசாரிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் பயணிகளை நடுவீதிகளில் வைத்து இறக்காமல் ஒதுக்கப்பட்ட இடங்களில் வீதிக் குறியீடுகளை அவதானித்துப் பயணிகளை இறக்க வேண்டும்.

வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் தற்போது இவற்றை அவதானித்து வருவதால் கடுமையான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## வடக்கின் ரயில் பாதை அமைக்கும் பணி மும்முரம்



கொழும்புத்துறை,டிசெ.12

வடபகுதிக்கான ரயில் பாதையை அமைக்கும் நடவடிக்கைகள் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

ஆரம்ப கட்ட பணிகளான தண்டவாளங்களை மூன்று மூன்றாக இணைத்து கனரக மின்ஒட்டு இயந்திரங்கள் மூலம் ஒட்டி ரயில் பாதை அமையவுள்ள பிரதேசங்களில் ஆங்காங்கே அடுக்கி வைக்கப்படுகின்றன.

தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்பட்ட தண்டவாளங்கள் சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சுன்னாகம் போன்ற பகுதிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டு அங்கிருந்து இடைப்பட்ட பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒன்றுடன் ஒன்றாக மின் ஒட்டின் மூலம் பிணைத்து வைக்கும் பணிகளில் ரயில்வே பகுதி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான பணிகள் அரியாலை ஆனந்தன் வடலி வீதிப்பகுதி ரயில் மார்க்கச் சூழலில் தற்போது நடைபெற்று வருகின்றன. (ம-135)

## கட்டடத் தொழிலாளியை தீண்டியது பாம்பு

தென்மராட்சி, டிசெ.12

கற்களை எடுத்த கட்டடத் தொழிலாளியை விஷப்பாம்பு தீண்டியது.

இயக்கச்சியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ஸ்ரீ சத்தியசீலன் பிரகாஸ் (வயது-26) என்பவர் பாம்பால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைகள் தினத்தில் சிறுமிகளுக்கு வீதியில் தர்ம அடி

மனித உரிமைகள் தினமான நேற்று முன்தினம் துணிகள் திருட வந்ததாகக் கூறி 3 சிறுமிகளை வீதியில் நிற்க வைத்து தர்ம அடி கொடுத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் சேலத்தில் மூன்று சிறுமிகள் வீதியில் வைத்து அடித்துத் துன்புறுத் தப்பட்டுள்ளனர்.

துணிகளை திருட வந்ததாகக் கூறி குறித்த 3 சிறுமிகளையும் வீதியில் உள்ள மின்கம்பத்தில் கட்டி வைத்து பொது மக்கள் அடித்து உதைத்தனர். (வ)



டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 47 ஆவது எல்லைப் பாதுகாப்புப் படை தின விழாவில், சிறப்பாகப் பணியாற்றிய மிசோரம் படைப்பிரிவுக்கு 'மகாராணா' சிறப்பு விருதை மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே வழங்கினார்.

## இந்திய துறைமுகங்களில் முதலிட இலங்கை ஆர்வம் காட்டுவதில்லை

### நாடாளுமன்றில் கப்பல் துறை அமைச்சர்

டில்லி, டிசெ.12

இந்திய துறைமுகங்களில் முதலீடு செய்வதில் இலங்கை ஆர்வம் தெரிவிக்கவில்லை என்று கப்பல் துறை அமைச்சர் ஜீ.கே. வாசன் இந்திய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-


இந்தியாவிலுள்ள துறைமுக செயற்திட்டங்களில் முதலீடு செய்வதில் ஆர்வமுள்ளதாக இலங்கை அரசு இந்திய அரசிடம் ஒருபோதும் அறிவிக்கவில்லை. இந்திய துறைமுகங்களை இயன்றளவு அதிகரிப்பதற்கு தனியார் துறை முதலீட்டையே இலங்கை அரசு ஊக்குவிக்கின்றது.

சுமார் 71 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான வெளி இயந்திர படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் மன்னார் மாவட்ட மக்களுக்கு இந்தியா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

தலை மன்னார் - இராமேஸ்வரம் ஆகியவற்றுக்கு இடையிலான படகுச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்- என்றார். (வ)

## இந்திய- சீன எல்லை குறித்த பேச்சில் உடனடித் தீர்வு ஏற்படாது

### வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு



டில்லி, டிசெ.12

இந்தியா, சீனா எல்லைப் பேச்சு சிக்கலானது என்பதால், உடனடித் தீர்வு ஏற்படாது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

எல்லைப் பிரச்சினை தொடர்பாக சீனாவுடன் சாதகமான பேச்சு நடைபெறுகின்றது என்று மொரக்காபாத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியிருந் தார்.

இந்த நிலையில் டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட சல்மான் குர்ஷித் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

எல்லைப் பிரச்சினை தொடர்பான பேச்சில் இரு நாடுகளும் சரியான திசையில் சென்று கொண்டிருக்கின்றன. மொத்தத்தில் மெதுவான முன்னேற்றம் தான் ஏற்படும்.

மேற்படி பேச்சு சிக்கலானது மற்றும் உணர்வு பூர்வமானது என்பதால் உடனடித் தீர்வை எதிர்பார்க்க முடியாது.

மாலைதீவுக்கான வளர்ச்சி நிதியை முடக்கும் திட்டம் எதுவும் இல்லை- என்றார். (வ)


### அணு மற்றும் கதிரியக்கப் பாதுகாப்பு உடன்பாடு உட்பட

# இந்தியா—உக்ரைன் இடையே 5 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

டில்லி, டிசெ.12

அணுப் பாதுகாப்பு மற்றும் கதிரியக்கப் பாது காப்பு உடன்பாடு உட்பட 5 ஒப்பந்தங்கள் இந்தியா- உக்ரைன் இடையே கைச்சாத்தாகியுள்ளன.

இந்தியா வந்துள்ள உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச், பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்தார். இதன் போது இரு தலைவர்களும் பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதம் நடத்தினர். இரு நாடுகளுக்கும் இடையே விரிவான ஒத்துழைப்பை ஏற்படுத்தவும் ஒப்புக்கொண்டனர்.



இந்தப் பேச்சுக்குப் பின் அணுப் பாதுகாப்பு மற்றும் கதிரியக்கப் பாதுகாப்பு ஒப்பந்தத்திலும் இராணுவ ஒத்துழைப்பு, வர்த்தகம், அறிவியல், தொழில்நுட்பம் உட்பட்ட துறைகளில் 4 ஒப்பந்தங்களிலும் இரு நாடுகளும் கைச்சாத்திட்டன.

இது குறித்து பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது:-

உக்ரைனில் துரதிருஷ்டவசமாக நிகழ்ந்த செர்னோபில் அணு உலை விபத்துக் காரணமாக, இந்தச் சிக்கலான விடயத்தைச் சமாளிப்பதற்கான மதிப்புமிக்க கண்ணோட்டம் அந்த நாட்டுக்கு கிடைத்துள்ளது. இரு நாட்டு அணுசக்தி ஒழுங்கு முறை ஆணையங்களுக்கு இடையில் இப்போது கைச்சாத்தாகியுள்ள ஒப்பந்தம் மூலம் அணுப்பாதுகாப்பு மற்றும் கதிரியக்கப் பாதுகாப்பில் எமது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டுள்ளோம். இந்தியாவும் உக்ரைனும் ஏற்கெனவே இராணுவ ஒத்துழைப்புத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. இந்த ஒத்துழைப்பை விரிவாக்க, இன்று செய்து கொள்ளப் பட்டுள்ள இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் வழி வகுக்கும்- என்றுள்ளது.

## அரசு உயர் அதிகாரி வாகனத்தில் தலைகீழாகப் பறந்த தேசிய கொடி

மத்தியப் பிரதேச மாநிலம் சியோனியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள வந்த அரசு உயர் அதிகாரி வாகனத்தில் தேசியக் கொடி தலைகீழாக பறந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

மத்திய அரசின் பாரத் நிர்மான் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு சியோனியில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இதில் கலந்து கொள்ள அந்த மாநில சட்டமன்ற துணை சபாநாயகர் ஹர்வன்ஷ் சிங், அரசு வாகனத்தில் வந்திருந்தார். அதில் தேசியக்கொடி தலை கீழாகப் பறக்க விடப்பட்டிருந்தது பார்ப்பவர்களை அதிர்ச்சிக்குள் ளாக்கியது.

இதைப் பார்த்த பத்திரிகையாளர்கள் சிங்கிடம் கேட்டபோது, இந்த வாகனம் மாவட்ட நிர்வாகத்தால் அனுப்பப்பட்டது.

அதில் தேசியக்கொடி தலைகீழாகப் பறந்ததை நான் கவனிக்கவில்லை. தெரியாமல் தவறு இடம் பெற்றுள்ளது என்றார். உடனடியாக அதிகாரிகளை அழைத்த அவர், கொடியை சரியாகப் பறக்க விடுமாறு உத்தரவிட்டார். (வ)

## மீனவர்களின் பாதுகாப்புக்கு உறுதியளித்தது இந்திய அரசு

டில்லி, டிசெ.12

இந்திய-இலங்கை கடல் எல்லையில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்படும் என்று மத்திய அரசு உறுதி அளித்துள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது, கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லும் தமிழகம் மற்றும் கேரள மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து கேரள நாடாளுமன்ற உறுப்பினர் அனிருதன் கேள்வி எழுப்பினார். இதே கருத்தை முன் மொழிந்த மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ், மீனவர்களின் பாதுகாப்புக்காக மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

கேள்விக்குப் பதிலளித்த பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் ஜிதேந்திர சிங், மீனவர்களின் பாதுகாப்பு குறித்து கடந்த 5 ஆண்டுகளில் 4 முறை இலங்கை அரசிடம் இந்திய அரசு பேச்சு நடத்தியுள்ளதாகக் கூறியுள்ளார். அத்துடன் இந்திய- இலங்கை எல்லையில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு போதுமான பாதுகாப்பு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். (வ)

## பாரதியின் பிறந்ததினம்



மகாகவி பாரதியாரின் பிறந்த தினமான நேற்று அவரது பிறந்த ஊரான எட்டயபுரத்தில் அவரைப் போல வேடமிட்டுக் குழந்தைகள் வீதியெங்கும் வீறு நடைபோட்டு வலம் வந்தார்கள்.

## எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் இரட்டை இலைச் சின்னம்

### உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. வழக்கு

சென்னை, டிசெ.12

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் இரட்டை இலைச் சின்னம் நிறுவுவதற்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சியின் சட்டப் பிரிவுச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மனு தாக்கல் செய்துள்ளார். சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள அ.தி.மு.க. வின் நிறுவுநரும், தமிழக முன்னாள் முதல்வருமான எம்.ஜி.ஆரின் நினைவிடத்தை புதுப்பிக்கும் பணி அரசால் மேற் கொள்ளப் படும் என்று தமிழக அரசு அறிவித்தது. 29.1.2012 அன்று வெளியிடப்பட்ட அரசின் செய்திக் குறிப்பில், எம்.ஜி.ஆர். நினைவிடம் புதுப்பிக்கும் பணி நடைபெறும் என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. அங்கு இரட்டை இலைச் சின்னம் நிறுவப்படும் என்று அப் போது அறிவிக்கப்பட வில்லை.


இரட்டை இலைச் சின்னம் அ.தி.மு.க.வின் தேர்தல் சின்னமாகும். இதனை இந்திய தேர்தல் ஆணையமும் அங்கீகரித்துள்ளது. இந்த நிலையில் அரச இடமான எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் அரசுப் பணத்தில் இரட்டை இலை நிறுவும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. அதி.மு.க. வின் தேர்தல் சின்னத்தை இவ்வாறு அரசுக்குச் சொந்தமான இடமான எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் நிறுவுவது சட்ட விரோதமானதாகும். எனவே இதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று அந்த மனுவில் ஆர்.எஸ். பாரதி கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசமைப்புத் திருத்த வாக்கெடுப்பு முடிவை அறிவிக்கும்வரை

# பொலிஸ் அதிகாரம் இராணுவத்துக்கு

### எகிப்திய ஜனாதிபதி முர்சி அறிவிப்பு



எகிப்திய இராணுவத்தினருக்கு பொலிஸ்துறையின் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எகிப்தில் தற்போது ஏற்பட்டுள்ள இயல்பற்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டே இந்த அதிகாரங்கள் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய குழப்பம் விளைவிக்கும் பொதுமக்களை இராணுத்தினரால் கைது செய்யவும், விசாரணை மேற்கொள்ளவும் முடியும்.

ஜனாதிபதிக்கான அதிகாரங்களை அதிகரிக்கும் தீர்மானத்தை எகிப்திய ஜனாதிபதி மேற்கொண்டிருந்தார். இதையடுத்து எகிப்தில் போராட்டங்கள் வெடித்தன.

இதையடுத்து அந்த அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று முர்சி அறிவித்திருந்தார். எனினும் எதிர்க்கட்சிகளும், அதிருப்தியாளர்களும் அரசமைப்புத் திருத்த யோசனையைக் கைவிட்டு, வாக்கெடுப்பையும் நிறுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ளனர். அதுவரை எதிர்ப்புப் போராட்டங்கள் தொடரும் என்றும் அறிவித்திருந்தனர். ஆனால் முர்சி தரப்பு அறிவிக்கப்பட்ட வாக்கெடுப்பை நிறுத்த சட்டத்தில் இடமில்லை என்று தெரிவித்திருந்தது.

இந்நிலையிலேயே எகிப்து இராணுவத்துக்கு பொலிஸ் துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசமைப்புத் திருத்தத்துக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெற்று முடிவு அறிவிக்கும் வரை இராணுவத்தினருக்கு இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கும் என்று ஜனாதிபதி முர்சி கூறியுள்ளார்.

''இது எகிப்தின் இராணுவ ஆட்சி நோக்கிய பயணத்தின் ஆரம்பம். அரசின் இந்த முடிவால் எகிப்தில் மேலும் நிலைமை மோசமாகும். இது மக்களின் உரிமைகளை மீறும் செயல்''- என்று மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

### கானாவின் ஜனாதிபதியாக மீண்டும் மஹாம



கானா ஜனாதிபதித் தேர்தலில், தற்போது ஜனாதிபதியாகவுள்ள ஜோன் மஹாம மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

''ஜோன் மஹாமவை எதிர்த்து போட்டியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் நானா அகூபோ அட்டோ 47.4 சத வீத வாக்குகளைப் பெற்றுள்ளார். அதே வேளை, ஜோன் மஹாம 50.7 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்'' என்று அந்த நாட்டு தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

### மாலிப் பிரதமர் இராணுவத்தால் கைது



மாலியின் பிரதமர் சேக் மொடிபோ டயரா அந்த நாட்டு இராணுவத்தினரால் கைதுசெய்ப்பட்டுள்ளார்.

நாட்டை விட்டு தப்பியோடுவதற்கு தயாராகிய தாக தெரிவித்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர் பிரான்ஸுக்கு தப்பியோட முற்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மாலியில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவது தொடர்பில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பேச்சு வார்த்தைகளை குழப்புவதற்கு இவர் தீர்மானித்திருந்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### மெக்ஸிக்கோ விமான விபத்து; பிரபல பாடகி ரிவேரா சாவு



மெக்ஸிக்கோவில் நடந்த விமான விபத்தில் பிரபல பாடகி ஜென்னி ரிவேரா உயிரிழந்தார்.

ரிவேரா தொலுகா நகரில் நடைபெறவிருந்த இசை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க சிறிய ஜெட் ரக விமானத்தில் பயணித்தார். அந்த விமானம் எதிர்பாராதவிதமாக விபத்தில் சிக்கி நொறுங்கியது. விபத்தில் பாடகி ஜென்னி ரிவேரா உயிரிழந்தார் என்று மீட்புப் பணியாளர்கள் உறுதி செய்தனர்.

ஜென்னி ரிவேரா (வயது 43). அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் பிறந்தவர். பின்னர் மெக்ஸிக்கோவில் குடியேறினார். மிகவும் பிரபல்யம் பெற்ற பாடகியான இவர் கிராமி உட்பட பல்வேறு விருதுகள் பெற்றவர். இவருடைய பாடல்கள் அடங்கிய 10 கோடிக்கும் மேற்பட்ட இசைத் தட்டுகள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.



ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் களைகட்டத் தொடங்கிவிட்டன. அலாஸ்காவில் ரயில் ஒன்றில் குழந்தைகளை மகிழ்விக்கும் கிறிஸ்மஸ் தாத்தா.

### ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு

#### தென்சூடானில் 10 பேர் சாவு

ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது தென்சூடான் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

உள்ளூராட்சி மன்ற தலைமையக கட்டடத்தை இடமாற்றுவதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதே இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு அளவுக்கு அதிகமான படையினர் பயன்படுத்தப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய முறையில் பயிற்றுவிக்கப்படாத முன்னாள் கெரில்லா போராளிகள் மற்றும் அரச ஆதரவு ஆயுததாரிகளால் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுவதாக மனித உரிமை குழுக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.




திபெத்தில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து திபெத்தியர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

### ஐ.நாவின் கல்வி ஆலோசகராக மலாலாவின் தந்தை


தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த பாகிஸ்தான் சிறுமி மலாலாவின் தந்தை ஜியாவுதீன் யூசுப் ஸாய், ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச கல்விக்கான சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிப்பை ஐக்கிய நாடுகள் சபையின் கல்விக்கான சிறப்புத் தூதர் கோர்டன் பிரௌன் அறிவித்தார்.

''லண்டனில் மருத்துவ சிகிச்சை பெற்றுவரும் மலாலா, கல்விக்கான பிரசாரத்தில் தந்தையுடன் சேர்ந்து பணியாற்றுவார்.

ஆசிரியராக மட்டுமின்றி, பள்ளிகளை மூடும் தலிபானின் நடவடிக்கையை எதிர்த்த ஜியாவுதீன் இந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர்'' என்று கோர்டன் குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள அனைத்து பெண்களும் கல்வி அறிவு பெற்றவர்களாக மாற்ற வேண்டும் என்ற மலாலாவின் திட்டத்தை நிச்சயம் செயல்படுத்த முடியும். அதற்காக அனைவரும் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.



© The Nobel Foundation Photo: Frida Westholm

### அமைதிக்கான நோபல் பரிசு இம்முறை ஐரோப்பிய யூனியனுக்கு

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற விழாவில் இந்த ஆண்டுக்கான அமைதி நோபல் பரிசு ஐரோப்பிய யூனியனுக்கு வழங்கப்பட்டது.

சிட்டி ஹோலில் நடைபெற்ற விழாவில் ஆஸ்திரியா பிரதமர் வெர்னர் பேமேன், போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க், ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கல் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே ஆகியோர் பங்கேற்றனர்.

தனது உறுப்பு நாடுகளின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் ஐரோப்பிய யூனியன் ஆற்றிய பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக நோபல் குழு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனுக்கும், பிரிட்டனுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு வரும் நிலையில் இந்த விழாவில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பங்கேற்கவில்லை.

சுவீடன், ஸ்டாக்ஹோமில் 2012ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது.

இந்த விழாவில் 2012 ஆம் ஆண்டில் மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம், இயற்பியல் மற்றும் இரசாயனம் ஆகிய துறைகளில் சிறப்பு வாய்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த விருதை சுவீடன் மன்னர் 16ஆம் கார்ல் குஸ்டப் வழங்கினார்.

### நிலநடுக்கம்

இந்தோனேஷியாவின் தெற்குக் கடலோரப் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 7.2 ஆகப் பதிவானது.

இந்தத் தகவலை அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்தது. இந்தோனேஷியாவின் வடமேற்கு நகரான சுமால்கி நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் இது பூமிக்குக் கீழ் 155 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் பசிபிக் பிராந்தியத்தில் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

எனினும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து உடனடி தகவல்கள் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக கழுகு 'சிறைபிடிப்பு'



இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக கழுகு ஒன்று சூடானில் சிறைபிடிக்கப்பட்டு உள்ளது.

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் பகைமை நிலவி வருகிறது. இந்தநிலையில் பாலஸ்தீனத்துக்கு சூடான் ஆயுதங்களை விநியோகம் செய்வதாக இஸ்ரேல் குற்றம் சுமத்தி வருகிறது.

இந்தநிலையில் சூடானின் டார்பர் நகரில் பிணம் தின்னி கழுகு பறந்தது. இதை அந்தநாட்டு பாதுகாப்புப் படையினர் பிடித்து வைத்துள்ளனர்.

இந்தக் கழுகின் கால்களில் சூரிய சக்தியால் இயங்கும் சாதனமும், ஜி.பி.எஸ் சாதனம் ஒன்றும் கட்டப்பட்டு இருந்தன. இந்தக் கழுகு மூலம் இஸ்ரேல் உளவு பார்த்துள்ளதாக சூடான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இஸ்ரேல், பறவை இனத்தை பாதுகாக்க அது எங்கெல்லாம் செல்கிறது என்பதை கண்காணிக்கவே, ஜி.பி.எஸ் சாதனம் பொருத்தப்பட்டு உள்ளது. உளவு பார்க்கும் திட்டத்தோடு அந்த சாதனங்கள் இணைக்கப்படவில்லை என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# உலகிலேயே வல்லமைமிக்க கண்டமாக ஆசியா மாறும்

### ஆய்வாளர்கள் கூறுகின்றனர்

2030 ஆம் ஆண்டளவில் உலகின் அதிக வல்லமை படைத்த கண்டமாக ஆசியாக் கண்டம் திகழும் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பலத்தை விஞ்சுமளவுக்கு ஆசிய நாடுகள் முன்னேற்றம் காணும் என்ற அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் இரண்டு தசாப்தங்களில் அமெரிக்கப் பொருளாதாரத்தை புறந்தள்ளி சீனாவின் பொருளாதாரம் முன்னிலை பெறும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சனத்தொகையின் அளவு, உள்நாட்டு உற்பத்தி, புதிய தொழில்நுட்பங்கள், இராணுவ பலம் என அனைத்திலும் ஆசியக் கண்டம் முதலிடம் பெறும் எனக் கூறப்படுகின்றது.

ஐரோப்பிய வலய நாடுகளில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிகள், மேற்குலக நாடுகளில் சடுதியாக வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை போன்றன இதில் செல்வாக்கு செலுத்தும் என கூறப்படுகின்றது.

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் இந்த ஆய்வு அறிக்கை இறுதியாக 2008 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தது.

## கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி ஆப்கன் பொலிஸ் அதிகாரி சாவு



ஆப்கனில் நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் உயிரிழந்தார். நிம்ரோஸ் மாகாணத்தின் தலைமை பொலிஸ் அதிகாரி ஜெனரல் முகமத் மூசா ரசோலியின் வாகனத்தை குறிவைத்து கண்ணி வெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் சிக்கி அவரது வாகனம் சிதறியது. சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

ஆப்கனில் இருந்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் அடுத்த ஆண்டு வெளியேற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தற்போது ஆப்கன் பொலிஸாரே பெருமளவில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஆப்கனில் வன்முறை குறைகிறது

### – அமெரிக்கா

ஆப்கனில் வன்முறைகள் குறைந்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பென்டகன் 70 பக்கங்கள் கொண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் ''ஒட்டு மொத்தமாக வன்முறை தாக்குதல்கள் குறைந்து உள் கட்ட சிறு தாக்குதல்கள் மட்டுமே தற்போது தொடர்கின்றன'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டில் இருந்து 2012 ஒக்ரோபர் முதலாம் திகதி வரையான காலப் பகுதியில் ஆப்கனில் இடம் பெற்ற சிறு உள்கட்ட தாக்குதல்கள் குறித்த விவரங்களும் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

### சுவிஸில் கடும் பனிப் பொழிவு

## 2 தொன் பனிக்கட்டியை சுமந்து வந்தது பஸ்!



சுவிட்ஸர்லாந்தில் தற்போது கடும் பனிப் பொழிவு நிலவுகிறது. வீதிகள் எங்கும் 30 சென்ரிமீற்றர் உயரத்துக்கு பனிக்கட்டி உறைந்து போய்க் காணப்படுகிறது.

இந்தநிலையில் பிரான்ஸில் இருந்து சுற்றுலா பஸ் ஒன்று சுவிஸ் சென் றுள்ளது. பயணத்தின் போது பஸ்ஸின் மேற்குப் பகுதியில் பனிப் பொழிவால் ஒரு மீற்றர் உயரத்துக்கு பனிக்கட்டிகள் உறைந்து போய்விட்டன. இதைக் கவனிக்காத சாரதி பஸ்ஸை ஓட்டி வந்துள்ளார்.

இது ஆபத்தை விளைவிக்கக் கூடியது என்று தெரிவித்து சுவிஸ் பொலிஸார் பஸ் சாரதியைக் கைது செய்துள்ளனர். ''பஸ்ஸின் மேற்புறத்தில் 1 மீற்றர் உயரத்துக்கு பனி உறைந்து போய் காணப்பட்டது. இதன் எடை ஏறத்தாழ 2 தொன்னாகக் காணப்பட்டது. இது மிகவும் ஆபத்தானது. வாகனங்களின் மேற்புறத்தில் பனி உறைந்த நிலையில் பயணம் செய்வதை தடை செய்துள்ளோம். இது குறித்து மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது'' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வழமையாக டிசெம்பர் மாதத்தில் காணப்படும் பனிப்பொழிவு அளவை விட தற்போது பனிப் பொழிவு அதிகம் என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இந்தக் காலநிலை இன்னும் நீடிக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பூச்சியத்துக்கு கீழ் வெப்ப நிலை காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று விமானப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.


UNIVERSITY OF JAFFNA

INVITATION FOR BIDS

**Construction of Arts Block – Stage VI (Examination Hall)**
**University of Jaffna, Thirunelvely, Jaffna.**

1. The Chairman, Department Procurement Committee University of Jaffna, now invites sealed bids from eligible and qualified bidders for "Construction of Arts Block – Stage VI (Examination Hall)" at an estimated to cost of **Rupees Twenty Two Million (Rs 22,000,000.00)**. This shall be a **measure and pay** contract and the construction period is **One Hundred and Eighty (180) Calendar Days.**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C6** or above with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna.** and view the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**

Contact numbers are: Phone.**021 2219201**, Fax: **021 2219201**.

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna.** from the **11th of December, 2012** until **28th of December, 2012** from **9:00 hrs to 15:00 hrs and** upon payment of a non-refundable fee of **Rupees Five thousand (Rs.5,000.00).**
6. Sealed Bids shall be delivered or sent by registered post to **The Chairman, Department Procurement Committee, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 14.00 hrs on the 09th of January, 2013.** Bids will be opened soon after closing, at **14.15 hrs on the 09th of January, 2013** at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **91 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "***Vice Chancellor, Chairman, Procurement Committee, University of Jaffna.***"
   - For a amount of **Rs. 250,000.00**
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at University of Jaffna, Thirunelvely, Jaffna, at 10.30 hrs on 21st December, 2012.

**Vice Chancellor**
**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna.**

(C/2134)(2.6.7)



3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

கோபி ஹாசினி

12.12.2012



**திரு.திருமதி கோபி - ஜன்சிகா** தம்பதிகளின்

செல்வப் புதல்வி **ஹாசினி**

தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று (12.12.2012) புதன்கிழமை வல்வெட்டி "ரூபி" இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அம்மா, அப்பா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், அன்ராமார், அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார், பேரன்மார், பூட்டன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசியுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று நலமுடன் வாழ்க என கூடி வாழ்த்துகின்றார்கள்.

**குடும்பத்தினர்.**

HAPPY BIRTHDAY

"ரூபி இல்லம்", வல்வெட்டி.

(26393)(2.6.7)



# MANAGEMENT TRAINEE

The Chamber of Commerce and Industries of Yarlpanam is looking for young dynamic in individual, who can satisfy the criteria given below to be trained to accept the managerial responsibilities.

**Requirements:**

1) Should be below 30 years of age
2) Posses the diploma certificate in HNDA/HNDM or GCE(A/L) with minimum three years of working experience
3) Should be computer literature and have a working knoweldge in ICT
4) Should have an excellent communication skills in English language
5) Should have valid motorbike riding license
6) Knoweldge in Sinhala language would be an added advantage
7) Should be able to travel extensively if required by the organization
8) Experience in organizing the workshops, training programs, forums... etc
9) To be able to communicate with all stake holders & VIPs.

Please forward your resume with contact details of two non related referees within seven working days to Chairman, Chamber of Commerce and Industries of Yarlpanam, 124, Rasavinthoddam Road, Jaffna.

**Chairman**
CHAMBER OF COMMERCE AND
INDUSTRIES OF YARLPANAM
124, RASAVINTHODDAM ROAD,
JAFFNA.

(C/2148)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(49)

அவருக்காக வேலை செய்ய வேண்டும். ஆகவே, மற்றவர்களைக் கவர்ந்து இழுக்க வேண்டும். தம்பக்கம் இருக்கும்படி செய்ய வேண்டும். எல்லோரும் அவரைக் கவனித்துக் கொண்டேயிருப்பார்கள். புகழ் பெற்றவராகி விடுவார். ஒரு தூண் போன்றவர் என்று அவரை நம்பிச் சிலர் முழுப் பலத்தையும் அவர் மீது போடுவார்கள். அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தியைப் பெற்றிருக்க வேண்டும். சமுதாயத்தில் இவர் பெயர் வேகமாகப் பரவும். இவர் பணம் பண்ணினால் பாராட்டிப் பேசுவார்கள். ஏகப்பட்ட மரியாதை கொடுப்பார்கள். அதே நேரத்தில் நஷ்டம் ஏற்பட்டுத் தமது தொழிலில் மண்ணைக் கவ்வினால், கண்டபடி பேசுவார்கள். கேலி செய்வார்கள். அவரைச் சேர்ந்தவர்கள் கூட வேகமாக அவரை விட்டுப் பிரிவார்கள் ஆகவே, வெற்றியைக் காண சரியான திட்டம் போட்டு செயற்படுத்த வேண்டியது மிக மிக முக்கியம்.



பணம் சேமிக்க நினைப்பவர்களில் மூன்று வகையினர் இருக்கிறார்கள் என்கிறார் ஒரு பிரெஞ்சு மேதை.

முதல் வகையினர் ஒன்றும் வேலை செய்யாதவர்கள். வேலை செய்யாமலே வெற்றியை எதிர் நோக்கிக் காத்திருப்பவர்கள்.

இரண்டாம் வகையினர் எல்லா வேலைகளையும் அவர்களே செய்பவர்கள் மற்றவர்களை நம்பமாட்டார்கள். தன் கையும் மூளையுமே தமக்கு உதவி என்று முழு மனத்துடன் நம்புகிறவர்கள்.

மூன்றாம் வகையினர் தேவைக்கும் அதிகமாக வேலை செய்பவர்கள். இரவு பகலாக உழைப்பவர்கள். எப்போதும் தமது வேலைகளைப் பற்றியே சிந்திப்பவர்கள்.

முதல் வகையினர் தமது வேலையை இழப்பார்கள், தொழிலில் இறங்குபவர்கள், விரைவிலேயே மூடுவிழா கொண்டாடி விடுவார்கள்.

இரண்டாவது வகையினர் ஒருவகையில் தாக்குப் பிடிப்பார்கள். ஓகோவென்று முன்னுக்கு வரமுடியாவிட்டாலும், பரவாயில்லை என்று எண்ணும்படி முன்னேறுவார்கள்.

மூன்றாவது வகையினர் தாம் எல்லோரையும் விட பாராட்டும் படி, வேகமாக முன்னேறிப் பணம் சம்பாதிப்பார்கள். விரைவில் பணக்காரனாகும் வாய்ப்பு இவர்களுக்கு அதிகம் உண்டு. நடந்து போனவைகளைப் பற்றி இவர்கள் எண்ணமாட்டார்கள். இன்றைய தினம் என்ன செய்ய வேண்டும். நாளை எப்படி இருக்க வேண்டும் என்று மட்டுமே சிந்திப்பார்கள். பிறகு செயல்படுவார்கள்.

### நாம் மற்றவர்களின் நம்பிக்கையைப் பெறுவது எப்படி?

நம்மை மற்றவர்கள் நம்ப வேண்டுமா அதற்கு முதல் வழி நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். நம்மை மற்றவர்கள் நம்பினால், நம்மை அவர்கள் மிகவும் விரும்புகிறார்கள் என்று பொருள்.

ஒருவருடைய நம்பிக்கையைப் பெற முதலில் நாம் அவருடைய மொழியில் பேச வேண்டும். தமிழ் தெரியாத ஒருவரிடம் நாம் தமிழிலிலேயே பேசினால் நம் மீது அவருக்கு நம்பிக்கை வராது. பம்பாயிலிருந்து ஒருவர் இலங்கைக்கு வந்திருக்கிறார். அவருக்கு இந்தி, ஆங்கிலம் இரண்டும் தான் தெரியும். வேறுமொழி தெரியாது. நமக்கு இந்தி தெரிந்தால் இந்தியில் பேசலாம். அவர் மகிழ்ச்சியுடன் பழகுவார். இந்தி தெரியாவிட்டால் ஆங்கிலத்தில் பேசலாம். நமக்கு இந்தியும் தெரியாமல், ஆங்கிலமும் தெரியாமல் விழித்தால் அவர் நம்பிக்கையைப் பெற முடியாது.

ஆகையினால் தான் வியாபாரிகள் பெரும்பாலும் பல மொழிகளைப் பேசக் கற்றுக் கொள்கிறார்கள்.

நாம் இந்தியைத் தெரிந்து கொண்டால் இந்தியா முழுவதும், குறிப்பாக வடநாடு முழுவதும் பயணம் செய்ய உதவியாக இருக்கும். இந்தி தெரியாவிட்டால் ஆங்கிலம் தெரிந்திருந்தாலாவது பிழைத்துக் கொள்ளலாம்.

அடுத்தபடியாக அவருடைய வேலை என்ன என்று கேட்டு அதைப் பற்றியே பேச வேண்டும். அவருடைய சுக துக்கங்கள் என்ன என்று கேட்டுத் தெரிந்துகொண்டு அவைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். மகிழ்ச்சியான விடயம் என்றால் சிரிக்க வேண்டும். துன்பமான விடயம் என்றால் நாமும் முகத்தைச் சோகமாக வைத்துக்கொள்ள வேண்டும். அவருடைய நம்பிக்கையை நாமும் வளர்க்க வேண்டும்.

வெளியூரிலிருந்து ஒருவர் வந்துவிட்டார். அவர் தேவை என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும். அவருக்கு உணவு தேவையா? அதைக் கொடுக்க வேண்டும். அப்போது அவருக்கு நம்மீது நம்பிக்கை வரும்.

அவருக்கு உணவு வேண்டாம். ஆனால் அவர் ஒரு பெரிய மனிதர். அவரைப் பற்றி நாம் தெரிந்து கொண்டு பாராட்ட வேண்டும். தெரிந்துகொள்வோம். பாராட்டுவோம். ''நான் கோவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.'' என்றால், ''அப்படியா? உங்கள் பெயரை பத்திரிகையில் அடிக்கடி பார்த்திருக்கிறேன்.

-தமிழ்வாணன் (தொடரும்)

# பாடசாலைகளின் கல்வித்தர உயர்வுக்கு மாணவர் தலைவர்களும் உழைக்க வேண்டும்

## ஒன்று கூடலில் பழைய மாணவன் அறிவுறுத்து

தென்மராட்சி,டிசெ.12

எமது பிரதேசத்தில் கல்வி வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைந்து வருவதாக பலராலும் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. ஏன் இந்த நிலை. வீழ்ச்சிக்கு யார் காரணம் என்று ஆராய்வதை விட ஒவ்வொரு மாணவ தலைவனும் பாடசாலையின் கல்வித் தர உயர்வுக்கு முன்னோடியான செயற்பாடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் த.குகதாஸன் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவ தலைவர்களின் ஒன்றுகூடலும், 'முதன்மை' சஞ்சிகை வெளியீடும் அண்மையில் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே குகதாஸன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு பாடசாலையிலும் பாடத்துடன் தொடர்புடைய ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களின் திறமையினைப் பெற்றுக் கொள்ள மாணவர்கள் விரும்பாத நிலையும் காணப்படுகிறது. இந்த ஆசிரியரை விட திறமையான ஆசிரியர்கள் வெளியில் தனியார் கல்வி நிலையங்களில் உள்ளனர் என்ற சிந்தனை அநேக மாணவர்கள் மத்தியில் உள்ளது. இது தவறான கருத்து. ஒவ்வொரு பாடத்திலும் தகுதியுள்ள ஆசிரியர்களே பாடசாலைகளில் கடமையாற்றுகின்றனர். அவர்களை மாணவர்கள் பயன்படுத்தத் தவறுகின்றனர்.

இந்த நிலையை மாற்ற ஒவ்வொரு பிரிவிலும் மாணவ தலைவர்கள் உள்ளனர். அவர்கள் அந்தப் பிரிவு மாணவர்களை ஒன்றிணைத்து பாடசாலையில் மாலை நேர வகுப்புகளை நடத்தலாம் அல்லது அந்தத் துறைசார் ஆசிரியர்களைப் பாடசாலைக்கு வரவழைத்து மீட்டல் பயிற்சிகளை நடத்தி கல்வி வளர்ச்சிக்கு தேவையானவற்றை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டால் கல்வி வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருக்கும். இந்த விடயத்தில் பாடசாலை நிர்வாகமும் பெற்றோரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு துறையிலும் உள்ள மாணவர்கள் இவ்வாறான செயற்றிட்டங்களை உருவாக்கினால் வீழ்ச்சியடைந்த கல்வித்தரம் ஒரு வருடத்தில் மேலோங்கும். மாணவத் தலைவர்களின் பணி தினமும் காலை, மாலை மாணவர்களை ஒழுங்குபடுத்துவதுடன் மட்டும் இருக்கக்கூடாது. தனது கல்வியுடன் ஏனைய மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை காட்ட வேண்டும்.

தென்மராட்சி கல்வி வலய மாணவர்கள் ஏனைய வலயங்களின் மாணவர்களை விட விளையாட்டுத்துறையில் பெரும் பின்னடைவு நிலையில் உள்ளனர். இதற்கு முழுமையான காரணம் விளையாட்டுக்களுக்குரிய உபகரணங்கள் மற்றும் பயிற்சிகள் இல்லாமை என தெரிவிக்கப்பட்டது.

மாணவ தலைவர்கள் மாணவர்கள் சார்பில் பாடசாலை நிர்வாகத்தின் வழிகாட்டலுடன் ஆலோசனைகளையும் பெற்று உரிய விளையாட்டுத்துறைகளுடன் தொடர்பு கொண்டு பயிற்சிகளைப் பெற முயற்சித்தால் நிச்சயம் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலையின் மாணவர்களும் விளையாட்டுத்துறையில் தேசிய மட்டம் வரை செல்வதுடன் சர்வதேச விளையாட்டுக்களிலும் பங்குபற்ற முடியும்.

மாணவர்களுக்கு உள்ளக கற்றலுடன் வெளிப்புற பங்களிப்புகளும் அவசியமாகிறது.

ஒவ்வொரு பிரிவில் உள்ள உள்ளூராட்சி சபைகளும் பல்வேறு சமூக செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இந்தச் செயற்பாடுகளில் மாணவ தலைவர்களின் தலைமையிலான மாணவர் குழு பங்குபற்ற வேண்டும்.- என்றார். (எ-9)




யாழ். வரணி நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தின் தரம் 6 மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்ட போது, கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை உதயன் பணிமனைக்கு வருகை தந்து பத்திரிகை அச்சிடும் பணிகளைப் பார்வையிட்டனர். (14)

# புலோப்பளை பொது நூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவு

பளை,டிசெ.12

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பிரதேச மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களின் பெயர்கள் வருமாறு:-

**கதை சொல்லல் - பிரிவு -1**

(தரம் 1) ஆ.ஹேசவி (தர்மக்கேணி அ.த.க.பாடசாலை), சு.யதீஸ் (சோரன்பற்று கணேச வித்தி.), கி.நஜிதா (பளை மத்திய கல்லூரி).

**பிரிவு -2**

(தரம் -2) த.நிலாஜினி (கிளி.முகாவில் அ.த.க.பாடசாலை), க.சிறிமதி (கிளி. சோரன்பற்று கணேசா வித்தி.), சி.றம்சிகா (பளை மத்திய கல்லூரி).

**திருக்குறள் மனனம்**

(தரம்-3) சி.தேனியா (தர்மக்கேணி அ.த.க.பாடசாலை), லோ.துவாரகா (பளை மத்திய கல்லூரி), கா.சபீனா (சோரன்பற்று கணேசா வித்தி.).

**ஆங்கில சொல்வதெழுதல்**

(தரம்-4,5) சு.பிரியங்கா (கிளி.முகாவில் அ.த.க.பாடசாலை), கெ.கனிஸ்ரலா (பளை மத்திய கல்லூரி), உ. சுதர்சனா (தர்மக்கேணி அ.த.க.பாடசாலை)

**சித்திரப் போட்டி**

(தரம் -6,7) ச.கேமநாதன் (இயக்கச்சி அ.த.க.பாடசாலை), கெ.திவாகர் (பளை மத்திய கல்லூரி), ஆ.கிசோளினி (கிளி.மாசார் அ.த.க.பாடசாலை)

**பொது அறிவு வினாடி வினாப் போட்டி**

(தரம் -10,11) 1 ஆம் இடம்- பளை மத்திய கல்லூரி, 2 ஆம் இடம் - இயக்கச்சி அ.த.க.பாடசாலை.

**கட்டுரைப் போட்டி**

(தரம்-12,13) 1 ஆம் இடம் - க.கனிசா , 2 ஆம் இடம்- இ.ஜிலானி, 3 ஆம் இடம்- மு.சிவறஞ்சினி (மூவரும் பளை மத்திய கல்லூரி)

(எ-9)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்

அச்சுவேலியைச் சேர்ந்த கனகசபை ஜெகன் சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட



நீதிபதி பி.சிவகுமார் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

யாழ். பல்கலைக் கழகத்தின் நுண்கலைத் துறைப் பட்டதாரியாகவும், மீன் பிடித்துறை டிப்ளோமா படிப்பையும் பூர்த்தி செய்து ஆசிரியர் பணி, காப்புறுதித்துறையில் விற்பனை நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

சிறுவயது முதல் சமூக சேவைப் பணிகளில் செயற்பட்டு வரும் இவர் தற்போது கோப்பாய் பிரதேச செயலகத்தில் பட்டதாரிப் பயிலுநராகக் கடமையாற்றி வருகின்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா ஆலயம் முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலுசந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பழகன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஜா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# எங்களை நாங்களே...

''உங்கள் கிராமம் பின்தங்கிய நிலையில் உள்ளது. உங்களுக்குப் போதிய வசதிகள் எவையும் இல்லை. தொடர்ந்து இப்படியே இருந்தால் கேட்பாரற்றுப் போய்விடுவீர்கள். வாருங்கள் வீதியில் இறங்கிப் போராடுவோம்''. இவ்வாறான புனையப்பட்ட வார்த்தைகளால் ஒரு கிராமத்து மக்கள் நேற்று முன்தினம் வீதிக்குக்கொண்டு வரப்பட்டனர். அவர்கள் தங்களுக்கு எதிராகவே ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மனித உரிமைகள் தினத்தில் இப்படியொரு சம்பவம் கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது. மனித உரிமைகள் தினத்திலே இழந்து போன எங்கள் உரிமைகளுக்காக குரல் கொடுப்போம் என்ற நிலைப்பாட்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய தமிழ்க் கட்சிகள் சில ஒன்றிணைந்து போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள், மாணவர் கைது, அப்பாவி பொது மக்கள் கைது என்பவற்றைக் கண்டிக்கும் முகமாகவும் வடக்கு, கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கெடுபிடிகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இது மட்டுமல்லாமல் இழந்து போன உரிமைகளை மீளப் பெறுவதற்கு தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தப் போவதாகவும் அந்தக் கட்சிகள் அறிவித்திருக்கின்றன. ஆனால் கிளிநொச்சியில் தமிழ் மக்கள் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்களுக்கு முன்பாக தமிழ் மக்களே போராட்டம் ஒன்றை நடத்தியிருக்கின்றனர்.

முற்றிலும் வடிவமைக்கப்பட்ட இந்தப் போராட்டம் ஒருசில தமிழின விரோதிகளாலும் இராணுவப் புலனாய்வாளர்களாலும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. உதவிக்கு இராணுவத்தினர் வந்திருந்தார்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். பன்னங்கண்டி கிராமத்தில் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் குறிப்பிட்ட அளவு குடும்பங்கள் நீண்டகாலமாக வசித்து வருகின்றன. விரும்பியோ விரும்பாமலோ மாரிகாலத்தில் இவர்கள் இடம்பெயர்ந்தே ஆகவேண்டும். இதனால் இவர்களுக்கு மேட்டுக் காணி வழங்க வேண்டும் என நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரச்சினை அடிப்படையாக வைத்தே அந்தப் போராட்டக் குழு உருவாக்கப்பட்டிருந்தது. 'உங்களுக்கு காணி பெற்றுத்தருவதாயின் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்' என்றே அவர்கள் அழைத்து வரப்பட்டிருக்கின்றனர்.

கிளிநொச்சி அரச செயலகத்துக்கு வந்ததும் அங்கு அவர்களுக்கு ஏற்கனவே எழுதித் தயாரிக்கப்பட்டிருந்த சுலோக அட்டைகள், பதாகைகள் வழங்கப்பட்டன. அதில் தமிழ்க் கட்சிகளுக்கும் கரைச்சி பிரதேச சபைக்கும் எதிராக அரை குறைத் தமிழில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

ஏதோ தங்கள் பிள்ளைகளின் படிப்பை இந்தத் தமிழ் அரசியல் வாதிகளே கெடுத்தார்கள் என்றும், தங்களது எதிர் கால வாழ்வை இவர்களே சீர்குலைக்கிறார்கள் என்றும் அந்த மக்கள் போராட்டம் நடத்துவதாகக் காட்டப்பட்டது.

வெட்கம்! எங்களுக்கு எதிராகவே நாங்கள் போராட்டம் நடத்துகின்றோம். சில அற்பர்களின் வார்த்தைகளுக்கு அடிமையாகிறோம். எங்கள் உரிமைகளை நாங்களே இழந்து கொண்டிருக்கின்றோம். சில சலுகைகளுக்காக எங்கள் இனத்தின் அடையாளத்தையே சிதைத்துக் கொண்டிருக்கின் றோம்.

பிள்ளைகளின் படிப்பை உண்மையிலேயே யார் தொலைத்தார்கள். போர் முடிந்து மூன்று வருடங்கள் முடிந்த பின்பும் ஏன் இதனை நாம் சிந்திக்கக் கூடாது. பல்கலையில் முன்னணி மாணவர்களாக இருந்தமைக்காக இன்று நால்வர் சித்திரவதைக் கூடத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் சுதந்திரத்தை யார் பறித்தது. அந்தப் பிள்ளைகள் விடுதலையாக வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்ட போராட்டத்திற்கு எதிராக தமிழ் மக்கள் நாங்களே போராட்டம் நடத்தினால் அடக்குமுறையாளர்கள் ஏன் தங்கள் கைங்கரியங்களை நிறுத்த வேண்டும். அவர்கள் பிள்ளையையும் நுள்ளி தொட்டிலையும் ஆட்டிவைப்பார்கள். வேடிக்கையுடன் நாங்கள் எங்களையே மறந்து வீதிக்கு வந்திருக்கிறோம். வெட்கப்பட வேண்டியது அவர்களல்ல நாங்களே. சித்திரவதைக் கூடத்தில் எங்கள் பிள்ளைகளே வாடி வதங்குகிறார்கள், என்பதை மட்டும் மனதில் இருத்திக்கொள்ளுங்கள்.

# ராஜீவ் படுகொலையில் புதைந்துள்ள உண்மைகள்

பழநெடுமாறன்

'ராஜீவ் படுகொலை - தூக்குக் கயிற்றில் நிஜம்' என்னும் தலைப்பில் நண்பர் திருச்சி வேலுசாமி எழுதியுள்ள நூல் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தப்போகும் நூலாகும்.

ஏற்கனவே தமிழகமெங்கும் பல நூறு கூட்டங்களில் அவர் தெரிவித்த உண்மைகளையே இப்போது நூலாகப் பதிவுசெய்திருக்கிறார்.

ராஜீவ் படுகொலையில் பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. இந்தக் கொலையின் பின்னணியில் இருந்த சதிகாரர்கள் இன்னமும் நாட்டில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நீதி, நேர்மை, உண்மை ஆகியவை முற்றிலுமாக மறைக்கப்பட்டுவிட்டன. ராஜீவ் கொலை வழக்குப் புலன் விசாரணையில் தொடங்கி வழக்கு நடத்தப்பட்ட விதமும், தீர்ப்பு அளிக்கப்பட்ட வரையிலும் பல உண்மைகள் ஆழக் குழித் தோண்டி புதைக்கப்பட்டுள்ளன.

தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களின் கொலை வழக்கு விசாரணையும், முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கொலை வழக்கு விசாரணையும் பகிரங்கமாகத் தான் நடத்தப்பட்டன. ஆனால், ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தடா நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட போது இரகசியமாக நடத்தப்பட்டது. அதுபற்றிய விபரங்கள் நாட்டு மக்களுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டன.

உண்மைக் குற்றவாளிகளை மறைக்கும் நோக்கத்தில்தான் தொடக்கத்திலிருந்து எல்லாமே நடத்தப்பட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் தமிழகத்தில் பரவிவிடாமல் தடுக்கும் கருவியாக ராஜீவ் கொலை வழக்கை டில்லி பயன்படுத்தியது. அதனால்தான் இந்தக் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 26 பேரில் 13 பேர் தமிழ்நாட்டுத் தமிழர்கள் 13 பேர் ஈழத் தமிழர்கள்.

சரிசமமான எண்ணிக்கை என்பது தற்செயலானது அல்ல. ஆழமான உள் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்பட்டது. வளர்ந்து வரும் தமிழ்த் தேசிய உணர்வைச் சிதைப்பதற்காக இந்தச் சதி வகுக்கப்பட்டது. இந்த உள்நோக்கத்துடனே சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக்குழு தனது புலன் விசாரணையை நடத்தியது.

அகில இந்திய ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியசாமி. அகில இந்திய செயலாளராகத் திருச்சி வேலுசாமி பதவி வகித்தார். சுப்பிரமணிய சாமி தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்யும் போதெல்லாம் உடன்பயணம் செய்பவர் வேலுசாமி ஆவார். சு.சாமியின் நம்பிக்கைக் குரிய மிகநெருங்கிய தோழராகத் திகழ்ந்தார்.

1991 மே 21ஆம் தேதி ராஜீவ் படுகொலை செய்யப்பட்ட நாளிலும் அதற்கு முன்பாக 2 நாள்களும் தமிழ்நாட்டில் சுப்பிரமணிய சாமி சுற்றுப் பயணம் செய்தார். அப்போது அவர் நடந்துகொண்ட விதம், பேசிய பேச்சுகள் உடனிருந்த வேலுசாமியின் உள் மனத்தில் சந்தேக அலைகளை எழுப்புகின்றன. அது பற்றி விரிவாக இந்நூலில் அவர் பதிவு செய்திருக்கிறார்.

பிறகு நன்கு விசாரித்து சுப்பிரமணியசாமிக்கு இந்தக் கொலையில் தொடர்பிருப்பதை அறிந்து கொண்ட வேலுசாமி முதலில் திடுக்கிட்டு [illegible] உண்மைக் குற்றவாளிகளை அம்பலப்படுத்த வேண்டும் என முடிவு செய்து ஜெயின் கமிசன் முன் அறிக்கை அளிக்கிறார். சோனியா காந்தியைச் சந்தித்துத் தானறிந்த உண்மைகளைக் கூறுகிறார்.

தனது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் தான் கண்டறிந்த உண்மைகளைத் தமிழ்நாடெங்கும் கூட்டங்கள் போட்டுக் கூறுகிறார்.

இடையில் மிரட்டல்கள், உருட்டல்கள், ஆசை வார்த்தைகளைச் சந்திக்க நேர்ந்த போதிலும் அஞ்சாமல் தனது பணிகளைத் தொடர்கிறார்.

சந்திராசாமி, சுப்பிரமணியசாமி ஆகியோர் மீது பகிரங்கமாக அவர் குற்றம் சாட்டியும்கூட புலன் விசாரணைக் குழுவினர் அவற்றைச் சட்டை செய்யாமல் புலிகளை மட்டுமே மையமாகக் கொண்டே செயல்பட்டனர்.

உலகம் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செயல்பட்ட விதத்தை நூல் நெடுகிலும் வேலுசாமி விவரிக்கிறார். யாருக்கும் அஞ்சாமல் யாரிடமும் விலை போகாமல் அவர் ஆற்றிய பணி பாராட்டுக்குரியது. வேலுசாமி விடுத்த அடுக்கடுக்கான கேள்விகளுக்கு விடை இன்னமும் கிடைத்தபாடில்லை.

அதுமட்டுமல்ல, ராஜீவ் கொலை குறித்த பல கேள்விகளுக்கும் விடை அளிக்கப்படவில்லை. அவற்றுள் சில:

1. ராஜீவ் கொலை குறித்து விசாரிப்பதற்காக நீதிபதி ஜே.எஸ். வர்மா தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை அப்போதைய பிரதமர் சந்திரசேகர் ஆட்சி அமைத்தது. ராஜீவ் காந்திக்குச் செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறை இருந்ததா என்பதைப்பற்றித்தான் இந்தக் கமிசன் விசாரிக்கும் என்றும் இந்தக் கொலைக்கான சதியின் பின்னணி குறித்து கமிசன் ஆராயாது என்றும் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது.

இந்த வரம்புக்குட்பட்டு விசாரணை நடத்திய ஜே.எஸ். வர்மா தனது அறிக்கையை 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசிடம் அளித்தார். ஆனால் ஐந்தாண்டு காலமாக இந்தக் கமிசன் அளித்தப் பரிந்துரைகள் எதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. ஆனால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக இந்தப் பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டிய கட்டாயம் பிரதமர் நரசிம்மராவ் அரசுக்கு ஏற்பட்டது.

சில மூத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கமிசன் செய்த முக்கியமான பரிந்துரை குறிப்பிடத்தக்கதாகும். முன்னாள் அமைச்சரவைச் செயலாளர் விநோத் பாண்டே, உளவுத்துறைத் தலைவர் எம்.கே. நாராயணன், உள்துறைச் செயலாளர் சிரோண்மணி சர்மா பாதுகாப்புச் செயலாளர் ஜி.எஸ். வாஜ்பாய் ஆகியோர் மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னால் இந்த நால்வரும் பதவியிலிருந்து ஓய்வுபெற்றப்பிறகே இவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது.

உடனடியாக அந்த நான்குபேரும் மத்திய நிர்வாக மன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். ஓய்வுபெற்றப்பிறகு அவர்களிடம் விளக்கம் கேட்பது முறையற்றது என அது ஆணையிட்டது. இதன் மூலம் மேற்கண்ட அதிகாரிகள் திட்டமிட்டுப் பாதுகாக்கப்பட்டனர். இதன் பின்னணியில் இருந்த சூத்திரதாரிகள் யார்? இந்தக் கேள்விக்கு இதுவரை விடையளிக்கப்படவில்லை.

2. ராஜீவ் காந்தியின் உயிருக்கு ஆபத்து வரக்கூடும் என்பதை முன் கூட்டியே உணர்ந்து எச்சரிக்கை செய்திருந்தார் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத். கொலை நடப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே யசீர் அரபாத்தை பிரதிநிதி ராஜீவைச் சந்தித்துச் சுட்டிக்காட்டி எச்சரித்தார். ஆனால் புலன் விசாரணைக்குழு யாசீர் அரபாத்தைச் சந்தித்து எந்த அடிப்படையில் அவர் எச்சரிக்கைச் செய்தார் என இறுதிவரை விசாரிக்கவேயில்லை. இது ஏன்?

3. ராஜீவ் கொலை பின்னணிக் குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட நீதிபதி ஜெயின் கமிசன் முன் ஆஜராகும்படி தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கோவை கு.இராமகிருட்டிணன் ஆகியோர் அழைக்கப்பட்டனர். ஆனால், ஜெயின் கமிசன் தனது இடைக்கால அறிக்கையை அளித்தப் பிறகு இவர்களை கமிசன் அழைத்தது என்பது மட்டுமல்ல. இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணை மட்டும் இரகசிய விசாரணையாக நடத்தப்பட்டது. ஏனெனில் இந்த நால்வரும் புலிகளின் ஆதரவாளர்கள் எனவே இவர்கள் கூறும் தகவல்கள் வெளியில் தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக இரகசிய விசாரணை என்று திட்டமிட்டுச் செய்தார்கள்.

4. இந்திராகாந்தி கொலை குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட தக்கர் கமிசன் தனது அறிக்கையில் இந்திரா கொலையில் அவர்களது இல்லத்துக்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பட்டன. இக்கொலையில் இந்திராவின் தனி உதவியாளர் ஆர்.கே. தவான் மீது சந்தேகம் எழுகிறது. இவரையும் விசாரணைக் குட்படுத்த வேண்டும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் தவான் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது ஏன்? இந்திராவின் அலுவலகத்தில் சாதாரண வேலையில் இருந்த ஆர்.கே. தவான், இந்திராவின் மறைவுக்குப் பிறகு காங்கிரஸ் தலைவராக திடீரென உயர்ந்தது எப்படி? சீதாராம் கேசரி காங்கிரஸ் தலைவராக இருந்த போது காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகவும், காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராகவும் இவர் நியமிக்கப்பட்டார்.

1998ஆம் ஆண்டு நடைபெற்றப் பொதுத் தேர்தலில் டில்லி தொகுதி ஒன்றில் போட்டியிடுவதற்குக் காங்கிரஸ் வேட்பாளராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த அளவுக்கு அவர் செல்வாக்குப் பெற்றதற்கு யார் காரணம்? சோனியாவின் தயவினால் தான் இவருக்குப் பெரும் பதவிகள் கிடைத்தன. தனது மாமியாரின் படுகொலையில் சம்பந்தப்பட்டவர் என்று குற்றம் சாட்டப்பட்டவருக்கு சோனியா உதவி செய்ததின் மர்மம் என்ன?

இந்திராவின் இல்லத்திற்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பட்டன என தக்கர் கமிசன் சாட்டிய குற்றச் சாட்டின் பின்னணி என்ன? இந்திரா குடும்பத்தைச் சேர்ந்த சிலரே இக் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது அதன் பொருள். இந்திரா குடும்பத்தில் ராஜீவ் காந்தி சோனியா, சஞ்சய் காந்தியின் மனைவியான மேனகா ஆகிய மூவரும்

(13 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்குப் போகலாம் கைவீசு...!

■ அ.நிருபா
உரும்பிராய்



வருடாவருடம் ஜனவரி மாதமென்றதும் பல பிள்ளைகள் புதிதாக பாடசாலைகளுக்கும், முன்பள்ளிகளுக்கும் செல்வது வழக்கமாகும். பாடசாலையானது மகிழ்ச்சிகரமானதாக இருக்கும் போதே பிள்ளை ஆர்வத்துடன் பாடசாலைக்கு காலடி எடுத்துவைக்க ஆர்வங்கொள்கிறது. பிள்ளை ஆர்வத்தோடு பாடசாலை செல்வதற்கு பெற்றோர் பலவழிகளிலும் தூண்டுதலாக இருக்க முடியும்.

அடுத்த வருடம் பாடசாலைக்கு அடியெடுத்து வைக்கவிருக்கும் பிள்ளைகளின் பெற்றோர் பாடசாலையென்பது, மகிழ்ச்சியை அள்ளித்தரும் இடமென்பதை பிள்ளைகள் மனதில் விதைக்க வேண்டும். இதே போல் பிள்ளை பாடசாலை சந்தோசம் நிறைந்த இடம் என்பதை அனுபவம் மூலம் அறிவதற்கும் பெற்றோர், முதல் வருடத்திலேயே பல்வேறு செயற்பாடுகள் மூலம் களமமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

### மனதளவில் தயார்படுத்தல்

பிள்ளையை பாடசாலையில் சேர்ப்பதற்கு இரண்டொரு மாதங்களுக்கு முன்னதாகவே மனதளவில் பிள்ளையைப் பள்ளி செல்லத் தயார் படுத்துதல் வேண்டும். இதற்கு பெற்றோர் தங்கள் சுவாரசியமான பள்ளியனுபவங்களை பிள்ளையுடன் பகிர்ந்து கொள்ளலாம். சிறுவயதில் தாம் பாடசாலையில் எடுத்த புகைப்படங்களைப் பிள்ளைகளுக்குக் காட்டி, பாடசாலை செல்லலின் அருமையை அந்தப் பிஞ்சுள்ளத்தில் பதிய வைக்க முடியும்.

சிறு பிள்ளைகளுக்கு கதைகள், வண்ண வண்ணப் புத்தகங்கள் என்றால் அலாதி பிரியம். எனவே அவ்வாறான புத்தகங்களை வாங்கி பிள்ளைகள் பயன்படுத்த வழங்குதல் சிறப்பானது. இங்கு குழந்தை புத்தகத்தை வாசிக்க வேண்டுமென்றில்லை. பெற்றோரே படங்களைக் காட்டி புத்தகத்தை வாசித்துக் காட்டலாம். இதன் மூலம் பிள்ளையின் கிரகிப்புத் திறன் மற்றும் சிந்தனையாற்றல் வளர்ச்சியடைவதுடன், புத்தகங்கள் மீதான கரிசனையும் ஏற்பட்டு விடுவதுடன் எதிர்காலத்தில் புத்தகத்தைப் பார்க்கும் போது ஏற்படும் பிரமிப்பும் இல்லாது செய்யப்படுகிறது.

இதே போல் கதைப்புத்தகங்களிலுள்ள கதைகளை வாசித்துக் காட்டி "இதே போல் நிறைய கதைகள் பாடசாலை சென்று நீ அறியப் போகிறாய் என்று கூறியும் ஆர்வப்படுத்தலாம்.

### பாடசாலை தரிசிப்புக்கு வகை செய்தல்

பிள்ளை பாடசாலைக்கு அடியெடுத்து வைப்பதற்கு முன்பாக பிள்ளையின் சகோதரர் பாடசாலையில் படிப்பின் அல்லது அருகிலுள்ள பாடசாலையில் விழாக்கள் இடம்பெறும் போது குறித்த பிள்ளையையும் விழாவுக்கு அழைத்துச் சென்று "பாடசாலை யென்பது மகிழ்ச்சியான இடம்" எனும் எண்ணத்தை அவர்கள் மனதில் விதைக்கலாம்.

பொதுவாக பிள்ளைகள் பாடசாலையெனும் புதிய சூழலில் பெற்றோர் தம்மை நிராதரவாக விட்டுச் செல்கின்றனர் என எண்ணும் போதே அவர்கள் மனப் பயங்கொண்டு அழுதல், முரண்டு பிடித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். இதனைத் தவிர்த்து உற்சாகத்துடன் பள்ளி செல்ல பிள்ளையைத் தயார்படுத்த பிள்ளை அடுத்த ஆண்டில் கல்வி கற்கவுள்ள பாடசாலையை ஓர், இருமுறை சுற்றிக்காட்டி "இங்கு தான் நீ படித்துப் பெரியவனாக / பெரியவளாக வரவுள்ளாய்" என மனதளவில் பாடசாலைச் சூழலுடன் ஒன்றிக்கும் நிலையையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

### ஆசிரியர் மீது நேர்மனப்பாங்கை உருவாக்கல்

பெற்றோர்களில் சிலர் பிள்ளைகளுக்கு உணவூட்டும் போதும் அல்லது தங்களுக்கு குழந்தை பணிய வேண்டுமென நினைக்கும்போதும் அக்கம்பக்கத்திலுள்ள யாரையாவது காட்டியோ அல்லது குறிப்பிட்டு சொல்லியோ பயமுறுத்தி வளர்ப்பது , குழந்தைகளைப் பிறரோடு சேர்ந்து வெளியிடங்களில் விளையாட அனுமதிக்காது வளர்ப்பது 'பூச்சாண்டி வருகிறது' எனக் கூறி வித்தியாசமான விம்பமொன்றை பிள்ளையின் மனதில் வளர்ப்பது போன்றனவும் குழந்தைகள் ஆசிரியர் மீது பயங்கொள்ளக் காரணமாகலாம். எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளை சாப்பிடவில்லையென்றால் "உன் ஆசிரியரிடம் சொல்லுவேன்" என்று ஆசிரியரை ஓர் அராஜகப் பிறவியாக பிள்ளையின் எண்ணத்தில் பதியவைப்பதைத் தவிர்த்தல் வேண்டும். மாறாக "உனது ஆசிரியர் உனக்கு இனிமை நிறைந்த கதைகளைச் சொல்லுவார்" என ஆசிரியரை அன்பு நிறைந்த ஒருவராகப் பிள்ளையின் மனக்கண் முன் நிறுத்துதல் வேண்டும்.

### ஒரு திருவிழா நாள்

பாடசாலைக்கு பிள்ளை காலடியெடுத்து வைக்கும் முதல் நாள் ஒரு திருவிழா நாள். பள்ளிக்கு செல்லும் செயல் ஒரு பெருமைப்படும் செயல் என பிள்ளை எண்ணும் போது உற்சாகத்துடன் பாடசாலை செல்லும்.

### முரண்டு பிடிக்கும் குழந்தைகளுக்கு

சில பிள்ளைகள் பாடசாலை செல்ல முரண்டு பிடித்துச் செல்ல மறுத்து அடம்பிடிப்பதுண்டு. அவர்களைக் கட்டாயப்படுத்தி பாடசாலைக்கு இழுத்துச் செல்லாமல், முடிந்தவரை சமரசம் செய்து பாடசாலை அனுப்புவதற்கு சிந்தித்தல் வேண்டும்.

வகுப்பறைக்கு செல்ல மறுக்கும் குழந்தைக்கு முதல்நாளில் பெற்றோரில் ஒருவர் தங்கள் பிள்ளையின் பாடசாலை வளாகத்திலேயே இருந்து பிள்ளை வகுப்பறை விட்டு வெளியேறும் போது அன்போடு அணைத்து வீட்டுக்கு அழைத்து செல்லலாம். இவ்வாறு வெளியே இருந்து அழைத்து வரும் போது பிள்ளை அடுத்த நாளும் அம்மா தனக்காக வெளியே நிற்பார் என எண்ணி நிதானமாக வகுப்பறைச் செயற்பாட்டில் ஈடுபடுவார். ஓர், இரு நாளில் வகுப்பறைச் சூழலுடன் இயைபாக்கம் பெற்ற பிள்ளை எதிர்வரும் நாள்களில் விருப்போடு பாடசாலைக்கு செல்ல முன்னிற்கும். இதனை விடுத்து பிள்ளையை பயமுறுத்தி பாடசாலையில் விட்டுவருதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பிள்ளைக்கு பாடத்தின் மீதும் பாடசாலை மீதும் வெறுப்பே ஏற்படும்.

இதனைவிட பாடசாலை முதல் நாளில் பிற மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு இனிப்புகள் மற்றும் பலூன்கள் போன்றவற்றை முன்னதாகவே வாங்கி வைத்து "இது உனக்கும் உனது நண்பர்களுக்கும்.." என்று கூறி பிள்ளையிடம் பாடசாலை செல்வதற்கான தூண்டலையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

பாடசாலையில் ஓர், இரு வாரங்களுக்கு பிள்ளையை அறிதல் செயற்பாடு இடம்பெறும். இதன்போது பிள்ளை ஆடல், பாடல், போன்ற மகிழ்வான செயல்களில் ஈடுபட்டு தன்னை எதிர்கால கற்றலுக்கேற்ற ஒரு பிள்ளையாக மாற்றிக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

பெற்றோர் சிறந்த பாடசாலையென்ற எண்ணத்தில் பிள்ளையைத் தொலைதூரத்திலுள்ள பாடசாலைக்கும் அனுப்புவதுண்டு. சிறுபிள்ளைக்கு நேரத்துடன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு, தாமதமாகப் பாடசாலையிலிருந்து திரும்பும் நிலை ஆரோக்கியமான செயற்பாடன்று. எனவே ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளையை அருகிலுள்ள பாடசாலைக்கு அனுப்புதல் சிறப்பானது. நமது நாட்டில் அதிகம் பிரபலமாகாத தரமான பாடசாலைகளும் கிராமப்புறங்களில் உண்டு என்பதை மனங்கொள்ள வேண்டும்.

நமது நாட்டில் பாடத்திட்டங்கள் ஆரம்பக் கட்டத்தில் எப்படியிருந்தாலும் போகப் போக குழந்தைக்கு சவாலாகத் தான் அமைகிறன. எனவே அந்தச் சவால்களைச் சிறந்த முறையில் வெற்றி கொள்ள சிறந்த ஆரம்பத்தைப் பெற்றோர் ஒவ்வொருவரும் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். ★

# ராஜீவ் படுகொலை...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தனர். இந்திரா உயிரோடு இருந்த காலத்திலேயே அவருடைய வெறுப்புக்கு ஆளாகி மேனகா வெளியேற்றப்பட்டார். எஞ்சியுள்ள ராஜீவ் - சோனியா, ஆகிய இருவரோ இருவரில் ஒருவரோ இந்தச் சதியில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்.

அப்படி சம்பந்தப்பட்டவர் யார் என்பது ஆர்.கே. தவானுக்கு முழுமையாக தெரிந்திருக்க வேண்டும். அல்லது இந்தச் சூழ்ச்சியில் அவருக்கும் பங்கு இருக்க வேண்டும்? கொலைச் சதியில் குற்றம் சாட்டப்பட்டவர் அதிலிருந்து மீளுவதற்கும் காங்கிரஸ் கட்சியில் பெரும் பதவிகளை அடுக்கடுக்காக வழங்கியும் உதவவேண்டிய கட்டாயம் என்ன? உதவாவிட்டால் சூழ்ச்சிகள் அம்பலமாகி விடும் என்ற அச்சம் காரணமா? இந்தக் கேள்விகளுக்கு இதுவரையில் விடை இல்லை.

5. பிரதமர் நரசிம்மராவின் அலுவலகத்திலிருந்து முக்கியமான கோப்புகள் மறைக்கப்பட்டு அழிக்கப்பட்டன என புதுடில்லியில் இருந்து வெளிவரும் 'அவுட் லுக்' வார ஏடு (24-11-97) ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியது. காணாமற்போன கோப்புகளில் என்ன இருந்தது?

ராஜீவ் கொலை நடந்த அன்று சந்திர சாமியும், சுப்பிரமணிய சாமியும் எங்கே போனார்கள் என்ன செய்தார்கள் என்ற விவரங்கள் இருந்தன. கொலையாளிகளுக்குத் தேவையானப் பணத்தைச் சந்திராசாமியே கொடுத்தார் என்பதற்கான ஆவணங்கள் இருந்தன என அவுட் லுக் ஏடு குற்றம் சாட்டியது. இதற்கு அரசுத் தரப்பில் இது வரை எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை. இது ஏன்?

6. திருப்பெரும்புதூர் கூட்டத்துக்கு ராஜீவ் காந்தியைக் கட்டாயப்படுத்தி வரவழைத்த மரகதம் சந்திரசேகர் குறித்து பல முறைப்பாடுகள் எழுந்தன. எத்தகைய சூழலில் ராஜீவை இக்கூட்டத்துக்கு அவர் வரவழைத்தார் என்பது குறித்தோ அல்லது இந்தப் படுகொலை குறித்தோ மரகதம் சந்திரசேகரிடம் இதுவரை சிறப்புப் புலனாய்வுக்குழு விசாரணை நடத்தாதது ஏன்?

7. இலங்கை அதிபராக இருந்த பிரேமதாசவுக்கு ராஜீவ் கொலையில் பங்கு இருக்கலாம் என்ற குற்றச்சாட்டு எழுந்த போது இந்த கோணத்தில் புலன் விசாரணை நடத்தப்படாதது ஏன் என்ற கேள்வி எழுகிறது. சிங்களத் தலைவர்களான காமினி திசநாயகா, அதுலத் முதலி, விக்கிரமசிங்க போன்றவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் பிரேமதாஸா இருந்தார் என்பது பின்னர் நிரூபிக்கப்பட்டது.

இந்தியப் படையைத் திரும்பப் பெறுவதற்கு ராஜீவ் மறுத்தக் காரணத்தினால் கடுங்கோபம் அடைந்திருந்த பிரேமதாஸா ஏன் இந்தக் கொலையைச் செய்திருக்கக் கூடாது என்ற கேள்விக்குரிய பதிலை புலன் விசாரணைக்குழு அறிவதற்கு எத்தகைய முயற்சியும் செய்யாதது ஏன்?

8. ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட சி.பி.ஐ. அதிகாரியான ரகுமார் என்பவர் 'லண்டன் வழியாக இந்தியா திரும்பும் போது லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் இந்த வழக்கு தொடர்பான கோப்புகள் அடங்கிய அடைவைத் தொலைத்துவிட்டதாக அந்த விமான நிலைய காவல்நிலையத்தில் ஒரு புகாரைப் பதிவு செய்துவிட்டு இந்தியா திரும்பிவிட்டார்.

முக்கியக் கோப்புகளை தொலைத்த அந்த அதிகாரிமீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? காணாமல்போன கோப்புகளை திரும்பப்பெற ஏன் மேற்கொண்டு முயற்சிகள் எடுக்கப்படவில்லை? இந்தக் கேள்விகளுக்கு இதுவரை விடையில்லை.

இதுபோன்ற பல உண்மையான சந்தேகங்களுக்கு அரசு தரப்பிலிருந்தோ அல்லது சி.பி.ஐ. தரப்பிலிருந்தோ எத்தகைய விளக்கமும் அளிக்கப்படவில்லை. புலன் விசாரணையின் தொடக்கக் கட்டத்திலிருந்தே விடுதலைப் புலிகள்தான் இந்தக் கொலையைச் செய்தவர்கள் என தீர்மானித்துக் கொண்டு அந்த அடிப்படையில் விசாரணையும் பிறகு வழக்கும் நடத்தப்பட்டனவே தவிர உண்மையை அறியும் நோக்கத்தில் நடத்தப்படவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் தடா நீதிமன்றத்தில் அவர்களது வழக்கறிஞர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு சரியான பதில் கூறமுடியாமல் சி.பி.ஐ. தரப்பு திணறிய விவரங்கள் வெளிவராமல் மறைக்கப்பட்டன. இதற்காகத்தான் இந்த விசாரணை இரகசியமாக நடத்தப்பட்டது.

26 பேர்களின் வழக்கை உச்சநீதிமன்றம் எடுத்துச்சென்று நடத்திய குழுவின் தலைவர் என்ற முறையில் நான் இதைக் கூறுகிறேன். தடாச்சட்டத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது செல்லாது என எங்கள் தரப்பு வழக்கறிஞர் என்.நடராசன் வாதாடியபோது 3 நீதிபதிகளும் திகைப்புடன் அவர் கூறியதற்குச் செவிமடுத்தார்கள்.

சி.பி.ஐ. தரப்போ பதறியது. இறுதியாக எங்கள் வழக்கறிஞரின் வாதம் வென்றது. தடாச்சட்டத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது செல்லாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் 19 பேரை குற்றம் அற்றவர்கள் என விடுதலை செய்தது.

அப்படியானால் தடாசட்டத்தின் அடிப்படையில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் செல்லாதது தானே. அப்படிப் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில்தானே மூவர் இன்னமும் தூக்கு மேடையின் நிழலில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மேலே நான் குறிப்பிட்ட கேள்விகளுக்குரிய விடைகள் முழுமையாக வெளிவந்தால் இந்த மூவரும் இன்னும் ஆயுள் தண்டனை பெற்றிருக்கின்ற நான்கு பேரும் குற்றம் அற்றவர்களாக வெளிவரத்தானே செய்வார்கள்.

சி.பி.ஐ. புலன்விசாரணைக் குழுவின் தலைமை அதிகாரியாக செயல்பட்ட ரகோத்தமன் எழுதிய நூலில் புலன்விசாரணை உண்மையாகவும் முழுமையாகவும் நடைபெறவில்லை என ஒப்புக்கொண்டுள்ளாரே? அதற்கு முன்னாள் அதே புலன் விசாரணைக் குழுவில் ஆய்வாளராக பணியாற்றிய மோகன்ராஜ் பல உண்மைகள் மறைக்கப்பட்டுவிட்டன எனப் பகிரங்கமாகக் குற்றம்சாட்டிவிட்டு தனது பதவியில் இருந்து விலகினாரே? ஏன்? அடுக்கடுக்கான இந்த வினாக்களுக்கு இதுவரை விடை இல்லை.

சந்திரசாமிக்கும், சுப்பிரமணியசாமிக்கும் ராஜீவ் படுகொலையில் நிச்சயமாகப் பங்கு உண்டு என்பதை பல்லாண்டு காலமாக ஆதாரப்பூர்வமாக எடுத்துக் காட்டி வரும் நண்பர் வேலுசாமியின் இந்த நூல் திறவாத விழிகளையும் திறக்க வைக்கும். சிந்திக்காதவர்களையும் சிந்திக்கவைக்கும் என நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அவன் மாதிரி இல்லையே....!

''எனக்கு அவனைப் பார்த்தால் பொறாமையாக இருக்கின்றது என்றார் ஒருவர்.

ஏன் என்று கேட்டேன்.

''எப்பொழுது பார்த்தாலும் அவன் சிரித்துக்கொண்டு இருக்கிறான்.. என்னால் அதுபோல இருக்க முடியவில்லையே!'' என்றார்.

மனிதனுடைய இந்தத் தன்மைக்கு பெரியவர்கள் என்ன விளக்கம் சொல்கிறார்கள் என்றால்...

எமக்கு எம்முடைய உள்பக்கம் தெரியும். அதே மாதிரி எமக்கு அடுத்தவர்களுடைய வெளிப்பக்கம் மட்டும் தான் தெரியும்.

இதுதான் பொறாமையை ஏற்படுத்துவது.

அடுத்தவர்களுக்கும் இதே நிலைதான். அதனாலே தான் அவர்களும் எம்மைப் பார்த்துப் பொறாமை கொள்கிறார்கள்.

அடுத்தவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது என்பதுதான் பொறாமை.. எம்மை எப்பொழுதும் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குத்தான் சிறுவயதிலிருந்தே பழக்கப்படுத்தியிருக்கிறார்கள். அத்துடன் விளைவு இப்பொழுது யாரைப் பார்த்தாலும் பொறாமையாக உள்ளது.

அவரை மாதிரி என்னால் ஓட முடியவில்லையே, பாட முடியவில்லையே என்று நினைத்து அவதிப்படுகின்றோம்.

ஒருவர் நன்றாகச் சாப்பிட்டால் அவரை மாதிரி என்னாலே சாப்பிட முடியவில்லையே என்று நினைக்கின்றோம்.

நண்பர் ஒருவர் வேடிக்கையாகக் கூறினார்.

''மாடு வைக்கோலைத் தின்றுகொண்டிருந்தால் கூட மனிதன் அதைப் பார்த்துப் பொறாமைப்படுகின்றான் ஐயா!'' என்றார்.

எங்களாலே அந்த மாதிரி வைக்கோலை உண்ணுவதற்கு முடியவில்லை என்ற கவலை.

தினமும் நாங்கள் எத்தனையோ மனிதரைச் சந்திக்க வேண்டியுள்ளது, பழக வேண்டியுள்ளது.

பார்ப்பவர்களையெல்லாம் எங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தால்.. எங்களால் நிம்மதியாக இருக்க முடியாது.

ஒப்பிட்டுப் பார்க்கின்ற குணத்தை ஒருநாள் அடியோடு விட்டுப் பாருங்கள்..

நீங்கள் நீங்களாக இருப்பீர்கள்.. அழுக்காறு ஓடிப் போய்விடும்.

நாங்கள் வேறு யாராகவும் இருக்க வேண்டிய அவசியமே இல்லை என்கிறார் ஓஷோ.

நல்ல வேளையாக மனிதன் மிருகங்களுடனும் - தாவரங்களுடனும் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. அப்படிப் பார்க்க ஆரம்பித்தால் நிலைமை இன்னமும் மோசமாகிவிடும்.

இப்போது கூறியது போல.. மாட்டைப் பார்த்துவிட்டு அது மாதிரி எங்களாலே அசை போட முடியவில்லையே என்று கவலைப்பட்டால்.. என்ன ஆகும்?

தென்னை மரத்தைப் பார்த்து.. நாங்களும் அவ்வளவு உயரமாக இருந்தால் எவ்வளவு நல்லது.. மரத்தில் ஏறாமலேயே தேங்காயைப் பறித்து விடலாம் என்று நினைப்பதா?

அப்படி வளர்ந்தால் வீட்டுக்குள்ளே எப்படி நுழைவது என்று யோசித்துப் பாருங்கள். அதிலே உள்ள கஷ்டம் புரியும்.

இந்த உலகத்திலே ஒருவர் மாதிரி இன்னுமொருவர் இல்லை. ஒவ்வொருவரிடமும் ஒரு தனித்தன்மை இருக்கின்றது.

யாரையும் யாருடனும் ஒப்பிட முடியாது.

இந்த உண்மையைச் சரியாக விளங்கிக் கொண்டால் போதும். பொறாமைப்பட வேண்டிய தேவையே இருக்காது.

படைப்பைப் பொறுத்தவரைக்கும் போலி என்று எதுவுமே இருக்காது. எல்லாமே உண்மை தான்.

உன்னை மாதிரி இந்த உலகத்தில் இதுவரைக்கும் யாரும் இருந்தது இல்லை. இருக்கப் போவதும் இல்லை.

இக்கரைக்கு அக்கரை பச்சையாகத்தான் தெரியும்.

அக்கரையிலே நின்று பார்க்கிறவர்களுக்கு இக்கரை பச்சையாகத்தான் தெரியும் என்கின்ற உண்மையைப் புரிந்து கொண்டால் போதுமானது.



பொறாமைக்கு விடை கொடுத்து விடலாம்.

இன்றைக்கு மனிதனுக்குள்ளே பொறாமை இருந்து கொண்டு என்னவெல்லாம் செய்கின்றது!


அடுத்தவன் கஷ்டப்பட்டால் எமக்கு அது சந்தோசமாக உள்ளது.

அடுத்தவன் சந்தோஷப்பட்டால் அது எமக்கு கஷ்டமாக உள்ளது.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# தையல் பயிற்சி நிலையத்தினூடாக சேவையாற்றும் புற்றளை ச.ச. நிலையம்

(கடந்தவாரத் தொடர்ச்சி....)



**கர்ணன்**

புலோலி தமிழ் இளைஞர் கழகத்தால் செயற்படுத்தப்பட்டு வந்த நூல் நிலையம் திறனுடன் இயக்கும் செயற் கருவியாகவும், இளைஞர்களின் அறிவு வளர்ச்சியின் ஆக்கத்துக்கு செயலுருவாக செம்மை தரும் அருங்கலைக் கூடமாகவும் விளங்கியது. இதற்குக் காரணம் அப்போதைய வட மாகாண அரச அதிபராக இருந்த வேர்ணன் அபய சேகராவின் இறுதி வரை, சளையாத ஒத்தாசையும், அவருடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ரி. துரையப்பா மற்றும் யாழ்ப்பாண மருத்துவமனை வைத்திய அதிகாரியாக இருந்த பிலியேல், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதிபரும், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை முதுமாணிப் பட்டதாரியுமான திருவாட்டி லலிதா ஆர்ணோல்ட் ஆகியோரின் அனுசரணையும் ஆகும். மேலும் அன்றைய ஆட்சி மன்றம் ஆங்கிலப் பாடத்தினை கட்டாயபாடமாகப் பிரகடனப்படுத்தியிருந்த வேளையில் புற்றளை கிராம இளைஞர் மத்தியில் ஆங்கில அறிவை நாடகம் மூலம் வளப்படுத்தும் நோக்கில் பெர்ணாட்ஷாவின் '' போரும் காதலும்'' என்னும் நாடகத்தை நடத்திக் காண்பித்தமை இந்தக் கிராமத்தவர்களின் திறனுக்கும், எண்ணிய கருமத்தின் திண்மைக்கும் ஒரு சிறந்த சான்றாகும். ஆங்கில மொழியில் புலமை கொண்டு உற்சாகமும், உயர்வும் கொண்டோர் பல்கலைக்கழகத்தில் அங்கம் வகித்தமையும் அக்கால கட்டத்தில் கழகத்தின் செயற்பாடுகளுக்கு கிராமிய மக்கள் வழங்கிய ஆதரவும் அனுசரணையும் ஐயமின்றி வெளிப்படுகிறது.

கழக சனசமூக நூல் நிலையத்தில் பல பெறுமதியான நூல்கள் இருப்பதையும், நூல் நிலையம் அருங்கலைப் பணியில் சிறப்புற நோக்குவதையும், புலோலியூர் அறிஞர் கந்தமுருகேசனார் கேள்வியுற்றார். மிக அக மகிழ்வோடு தானும் ஓர் அங்கத்தவராகச் சேர்ந்து கொண்டு, தனது கைவசம் இருந்த அரிய பல புத்தகங்களையும் நூல் நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்க முன் வந்தார்.

நிர்வாக சபையில் தொடர்ந்து தனி மனிதர்கள் மாறினாலும் கழகத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அங்கத்தவர்களிடமிருந்த சிரத்தை, முயற்சி, பேரூக்கம் எள்ளளவும் குறைந்து விடவில்லை என்பதை பொறுப்பேற்ற கழகத் தலைவர்களான த. பொன்ன்னையா, ஈ. சந்திரசேகரம், மற்றும் செயலாளர்களான மு.அன்னத்துரை, க.சிவக்கொழுந்து ஆகியோர் சான்று படுத்தியிருந்தனர்.

> **மந்திகை உப தபால் நிலையம் 1970 களில் புலோலி உப தபால் நிலையமாகவும் தபால்களை நேரடியாகச் சேகரித்து விநியோகிக்கும் நிலையமாகவும் தரத்தில் உயர்வு பெற்று இன்றும் செயற்பட்டு வருகின்றது.**

புற்றளை சாரதா பீட வித்தியாலயத்தில் நடைபெற்று வந்த தமிழ் இளைஞர் கழகத்தின் கூட்டங்கள் காலக்கிராமத்தில் சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்தில் நடைபெறத் தொடங்கின. கழகத்தின் நிதிநிலை மேம்பட உழைத்த பிந்திய தலைவர்களான க.வேலுப்பிள்ளை, வீ. கந்தையா மற்றும் செயலாளர்களான வீர. கணபதிப்பிள்ளை, க. மண்டலாய் ஆகியோர் கழகத்தின் உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தனர்.

சுண்ணாம்புச் சுவர்களிலான கட்டடம் பழுதடைந்த நிலையில் இருந்தபொழுது அவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. நூல் நிலையப் புத்தகங்களை அங்கத்தவர்கள் வெளியே எடுத்துச் சென்று பயன்படுத்தி விட்டு, இருவாரங்களில் மீள ஒப்படைக்கும் புதிய நடைமுறை ஆரம்பிக்கப் பட்டதன் மூலம், அங்கத்தவர்கள் மத்தியில் மட்டுமல்லாமல் ஊர் மக்கள் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றது.

இதனால் அங்கத்தவர்கள் மாத்திரம் அன்றி அவர்கள் ஊடாக ஊரில் வாழ்ந்த அனைவருக்கும் வாசிப்புப் பழக்கம் உருவானது என்றால் மிகையாகாது. பத்திரிகைகள் மட்டுமன்றி செய்திகளை அறிந்து கொள்ள வானொலி வசதியையும் ஏற்படுத்தி, அறிவு வளர்ச்சியுடன் பொழுதுபோக்கு அம்சங்களையும் அந்தக்காலத்தில் ஊர் மக்கள் மத்தியில் கழகத்தினர் மேற்கொண்டிருந்தமை மிகவும் பாராட்டப்படக்கூடிய செயல்களாகும்.

நூல் நிலையம், சன சமூக நிலையம் ஆகியவற்றின் வளர்ச்சியில் மட்டும் புலோலி தமிழ் இளைஞர் கழகம் கவனம் செலுத்தவில்லை. புலோலி என்னும் முழுக்கிராமத்தின் வளர்ச்சியும் உச்ச நிலைக்கு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் ஓர் இலக்காகக் கொண்டு செயற்பட்டமையையும் கழகம் மேற்கொண்ட சில நடவடிக்கைகளிலிருந்து உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

மந்திகை உப தபாற்கந்தோர் என இருந்த தபால் நிலையத்தை புலோலி உப தபால் நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்தல், நேரடியாகத் தபால்களைச் சேகரித்து பொதி செய்து அனுப்பல், புலோலிப் பகுதிக்குரிய தபால்களை ஒரே பொதியாக பெற்று இங்கேயே தரம் பிரித்து விநியோகிக்கும் தபால் நிலையமாக மாற்றியமைத்தல் போன்ற நடவடிக்கை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதனால் மந்திகை உப தபால் நிலையம் 1970 களில் புலோலி உப தபால் நிலையமாகவும் தபால்களை நேரடியாகச் சேகரித்து விநியோகிக்கும் நிலையமாகவும் தரத்தில் உயர்வு பெற்று இன்றும் செயற்பட்டு வருகின்றது. அது மாத்திரமின்றி தையல் பயிற்சி நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டமை, புத்தகங்கள் இரவல் வழங்கி அறிவு விருத்தி ஏற்பட வழி சமைத்தமை. தொழிற்படாமல் முடங்கிக்கிடந்த கிராம முன்னேற்றச் சங்கத்துக்கு புத்துயிர் அளித்து அரசு நல்ல பல காரியங்களைச் செய்வதற்கு உறுதுணையாக இருந்தமை போன்ற நடவடிக்கைகளையும் முக்கிய அம்சங்களாகக் குறிப்பிடலாம்.

தொடர்ந்து வந்த கழகத்தின் தலைவர்கள், செயலாளர்கள் உட்பட நிர்வாக சபையினர் கழகத்தின் நன் மதிப்பினையும் நன் நோக்கினையும் தக்க வைப்பதில் தங்களாலான அதி உச்ச செயற்பாட்டை வழங்கி வந்தனர். 1978 ஆம் ஆண்டளவில் ஆசிரியர் சோ. அம்பலவாணர் தலைமையில் நிர்வாகசபை மிகவும் முன் மாதிரியான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

புலோலி இளைஞர் கழகத்தின் சார்பாக வெளிவந்த '' புத்தொளி'' என்ற மாதாந்த கையெழுத்துச் சஞ்சிகையை சனசமூக நிலையமே வெளியிட வேண்டும் என்ற தீர்மானமே அதுவாகும். புலோலியூர் ஆ. இரத்தினவேலோனை ஆசிரியராகக் கொண்ட இந்தச் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் கழகத்தின் தலைவராக இருந்த க.அம்பலவாணர், பிரபல எழுத்தாளர் அமரர் புலோலியூர் தம்பையா ஆகியோர் அங்கம் வகித்தனர்.

மேற்படி ஆசிரியர் குழுவின் செயற்பாட்டால் புத்தொளி கையெழுத்துச் சஞ்சிகைக்கு இளைஞர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு ஏற்பட்டது. ''புத்தொளி'' சஞ்சிகை மூலம் பல இளைஞர்கள் ஆக்கங்களை வழங்கியது மட்டுமன்றி ஆக்கங்கள் மூலம் தமது பல்வேறு துறை சார்ந்த புலமைகளையும் வெளிக் கொணர்ந்தார்கள். இளம் சமுதாயத்தின் எழுத்தாக்கங்களுக்கு ' புத்தொளி'' சஞ்சிகை உற்சாகத்தை அளித்ததுடன் புலோலிப் பகுதியில் பல எழுத்தாளர்களை உருவாக்க வழி சமைத்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவாவில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாதது துரதிர்ஷ்டவசமானது

## அமைச்சர் செந்தில் தொண்டமான் கருத்து

பதுளை, டிசெ.12

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஊவா மாகாண சபையில் ஓர் அரசியல் பிரதிநிதித்துவம் கூட இல்லாமல் இருப்பது துரதிஷ்டமான நிலையாகும். எனினும் இக்குறையை நிவர்த்தி செய்ய என்னால் இயலுமான முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றேன் என்று ஊவா மாகாண தோட்ட உட்கட்டமைப்பு இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

பதுளை மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டு வரும் கட்டட நிர்மாணப் பணிகளை பார்வையிட்டதன் பின்னர் அங்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையகத்தில் கடந்த காலங்களில் அரசியல் ரீதியாக தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையே சில முரண்பாடுகள் தோன்றினாலும் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் சிறுபான்மையினமாக வாழும் தமிழ் முஸ்லிம்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் அன்பர்களுக்காக என்னுடைய கதவுகள் எப்பொழுதும் திறந்தே இருக்கும். சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கூட அமைச்சில் என்னைச் சந்திக்கலாம். முஸ்லிம்களுடைய விவகாரங்கள் தொடர்பாக இணைப்புச் செயலாளர் ஒருவரைக்கூட நான் நியமித்துள்ளேன். அவர் ஊடாக தங்கள் தேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். பதுளையிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக அதிபர்களுக்கான கூட்டம் ஒன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தேன். அதிபர்களின் பரிந்துரைகளின்படி தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளுக்கு ஐம்பதாயிரும் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (வ)

## தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு ஊடகவியலாளருக்கு நுளம்புவலை

### சமூக சேவையாளர்களும் கௌரவிப்பு



அட்டாளைச்சேனை,டிசெ.12

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு தேசிய ஐக்கிய ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தால், ஊடகவியலாளர்களுக்கு நுளம்புவலை வழங்கலும் சமூக சேவையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை நடைபெற்றது.

அட்டாளைச்சேனை எம்.பி.சீ.எஸ். மண்டபத்தில் தேசிய ஐக்கிய ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் முஹம்மட் இஸ்மாயில் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டுவருகின்ற அம்பாறை மாவட்ட சிவில் பாதுகாப்பு பிரிவின் கேணல் சரத் தென்னக்கோன், அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், சர்வோதய மாவட்ட இணைப் பாளர் எம்.எம்.பைஸால் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (வ)



திருகோணமலை நகரசபைத் தலைவர் க. செல்வராஜாவின் அனுசரணையுடன் ரமேஷ் தர்சனுடைய ஏற்பாட்டில் நார்ஸ் குறும் திரைப்பட வெளியீட்டு விழா திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (40)

## போலி வைத்தியர் மட்டக்களப்பில் கைது

மட்டக்களப்பு,டிசெ.12

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் போலி வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகளிர் விசேட வைத்தியர் என்று தன்னைக் கூறிக்கொண்டு நடமாடிய போலி வைத்தியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் உள்ள நபர்கள் மற்றும் அரச சேவையாளர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களுக்கு வைத்திய ஆலோசனையும் குறித்த போலி வைத்தியரால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## இளைஞர், யுவதிகளுக்கு தொழில் உபகரணங்கள்




மட்டக்களப்பு, டிசெ.12

மட்டக்களப்பில் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சியை நிறைவு செய்த இளைஞர் யுவதிகளுக்கான சான்றிதழ் மற்றும் தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. ஜேர்மன் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் மேற்படி தொழிற் பயிற்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜேர்மன் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தொழிற் பயிற்சியினூடாக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் எனும் செயற்றிட்டத்தின் சிரேஷ்ட ஆலோசகர் குமுதினி றோசா, ஜேர்மன் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் இலங்கையிலுள்ள நிதி மற்றும் நிர்வாக பணிப்பாளர் வொப் பொஸ்பிளக், மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்டச் செயலாளர் வி.வாசுதேவன் உட்பட ஜேர்மன் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள், அதன் விரிவு ரையாளர்கள் கலந்துகொண்டனர்.

மேற்படி பயிற்சிநெறியில், மேசன் மற்றும் தச்சு வேலை போன்ற தொழில்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. (வ)

## களுவாஞ்சிக்குடியில் இரு இந்தியர்கள் கைது

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பகுதியில் வைத்து பெண் உட்பட இரு இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கை வந்து களுவாஞ்சிக்குடி பகுதியில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய ஆண் மற்றும் பெண் ஆகிய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு இந்தியர்களையும் கைது செய்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் விசாரணைகளுக்கென அவர்களை களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

## காலநிலை மாற்றம் தொடர்பிலான விசேட செயலமர்வு மட்டக்களப்பில்

### மாணவர்களுக்கு கண்காட்சி விரிவுரைகள்

மட்டக்களப்பு, டிசெ.12

மட்டக்களப்பு மாநகர சபை பிரிவில் காலநிலை மாற்றம் மற்றும் இசைவாக்கம் தொடர்பிலான விசேட செயலமர்வு ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமான யு.என்.ஹபிடட் நிறுவனம் மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகம், மட்டக்களப்பு மாநகர சபை என்பன இணைந்து மேற்படி செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தன.

மட்டக்களப்பு மாநகர சபை பிரிவில் மேற்கொண்டு வரும் இலங்கை கரையோர நகரப் பகுதிகளில் காலநிலை மாற்றத்துக்கு மீள்தன்மை கொள்வதற்கான செயற்றிட்டம் எனும் திட்டத்தின் கீழ் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது.

மேற்படி செயலமர்வை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ் ஆரம்பித்து வைத்தார்.

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் கே.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர முதல்வர்



திருமதி சிவகீதா பிரபா கரன், மொறட்டுவ பல்கலைக்கழக கட்டட கலைப் பிரி வின் பீடாதிபதி பேராசிரியர் பி.கே.எஸ்.மஹாநாம, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.பிறேம் குமார் மற்றும் மட்டக்களப்பு கோட்டக் கல்விப் பணிப் பாளர் டேவிட், மட்டக்களப்பு வரியிறுப்பாளர் சங்கத்தின் தலைவர் எம்.மாமாங்கராஜா உட்பட பலர் கலந்து கொண் டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபை பிரிவில் கால நிலை மாற்றம் மற்றும் இசைவாக்கம் தொடர்பில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் மேம்படுத்துவதற்கான கண்காட்சி நிகழ்ச்சியொன்றும் நடைபெற்றதுடன் அவர்களுக்கான விரிவுரைகளும் நடைபெற்றன.

இதேவேளை, ஏற்கனவே குறித்த செயற்றிட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மேற்படி செயற்றிட்டமானது மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் நீர் கொழும்பு மாநகர சபை பிரிவுகளில் இடம் பெற்று வருவதாக மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் கே.சிவநாதன் தெரிவித்தார். (வ)

## கிழக்கு மாகாண அமைச்சரின் பொதுமக்கள் தொடர்பாளராக மஜீத்

கிழக்கு மாகாண விவசாய மற்றும் கால் நடைகள் அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் பொது மக்கள் தொடர்பு உத்தி யோகத்தராக முழக்கம் மஜீத் என்று அழைக்கப்படும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் அஹமட்லெப்பை மஜீத் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த டிசெம்பர் முதலாம் திகதி முதல் நடை முறைக்கு வரும் வகையில் கிழக்கு மாகாண அமைச்சரின் பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தராக முழக்கம் மஜீத் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி, சிறுகைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவராகவும் உயர்பீட உறுப்பினராகவும் பதவி வகிக்கும் முழக்கம் மஜீத், இணைந்த வட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமாவார். (வ)

## மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு

மீள்குடியேற்ற பிரதேசமான வவுணதீவு, பாவற்கொடிச்சேனையில் இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்தார்.

26 வயதுடைய இளைஞரே மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துப்போகும். வெளியூரிலிருந்து நல்ல செய்திவரும். தாயாரின் உடல் நலம் சீராகும். புதிய நட்பு மலரும். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார். அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும்.

**இடபம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைத் தேடி வந்து சிலர் உதவிகேட்பார்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**மிதுனம்:** அதிகாரபூர்வமாக செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**கடகம்:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**சிங்கம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**கன்னி:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலை பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

நாளை

கார்த்திகை -28 வியாழக்கிழமை 13.12.2012
திதி: அமாவாசை பி.ப 02.58 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.இ 07.02 வரை
சுபநேரம்: 07.51 - 09.21 வரை
ராகுகாலம்: 01.51 - 03.21 வரை

**துலாம்:** வேலைச்சுமையால் சோர்வாகக் காணப்படுவீர்கள். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக்கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் சிலர் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். பழைய பிரச்சினைகளுக்கு சுமூகமான தீர்வு காண்பது நல்லது. உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் வரும்.

**தனுசு:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதிற்குப் பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். தாயின் உடல் நலம் சீராகும். மனநிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

**மகரம்:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். சகோதர வகையில் நன்மை பிறக்கும். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகளை விரைந்து வசூலிப்பீர்கள்.

**கும்பம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**மீனம்:** சிக்கனமாக இருக்கவேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச் சுமை குறையும். எதிர்பார்புகள் தடையின்றி முடியும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 9 | | | 3 | | 6 |
| 8 | 7 | | | 3 | 6 | | | 5 |
| 3 | | | | | 1 | | 2 | 8 |
| 9 | 5 | 6 | | 7 | | 8 | | |
| | | | | | | | | |
| | | 1 | | 6 | | 9 | 5 | 3 |
| 2 | 8 | | 5 | | | | | 9 |
| 6 | | | 3 | 4 | | | 8 | 1 |
| 1 | | 5 | | | 9 | | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 3 | 2 | 4 | 1 | 8 | 6 | 9 |
| 8 | 9 | 6 | 7 | 5 | 3 | 2 | 1 | 4 |
| 4 | 1 | 2 | 9 | 8 | 6 | 3 | 5 | 7 |
| 5 | 6 | 4 | 8 | 3 | 9 | 1 | 7 | 2 |
| 1 | 7 | 8 | 4 | 6 | 2 | 5 | 9 | 3 |
| 2 | 3 | 9 | 5 | 1 | 7 | 6 | 4 | 8 |
| 3 | 4 | 5 | 1 | 9 | 8 | 7 | 2 | 6 |
| 6 | 2 | 1 | 3 | 7 | 4 | 9 | 8 | 5 |
| 9 | 8 | 7 | 6 | 2 | 5 | 4 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. மாணவர்களை உடன் விடுதலை செய்க

## ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு,டிசெ.12

யாழ். பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியுள்ள ஜே.வி.பி., ஏகாதிபத்திய தலையீடுகளுக்கு வழிசமைக்கின்ற அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக அனைவரும் அணிதிரள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

ஜே.வி.பியின் அரசியற் குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 26ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர் சபையின் செயலாளர் தர்ஷானந்தும் இன்னும் சில மாணவர்களும் பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு கடும் காயங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர் என ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களோடு மேலும் 11 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அரச படைகளால் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்படுவதையும் அவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள கடுமையான தாக்குதலையும் மிக வன்மையாகக் கண்டிப்பதுடன், மாணவர்களை உடன் விடுதலை செய்யுமாறும் வலியுறுத்துகின்றோம்.

ஜனநாயகத்துக்கு மாறாக பழிவாங்கும் நோக்கத் துடன் அரசால் மேற்கொள்ளப்படும் இவ்வாறானதடுத்து வைத்தல், தாக்கப்படுதலானது பிரிவினையை வளர்ப்பதுடன் இலங்கைக்கு எதி ராக ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டை அதிகரிக்கச் செய்யும் செயலாகவே அமையும்.

மீண்டும் பிரிவினையை உயிர்ப்பிக்கின்ற அதேவேளை ஏகாதிபத்தியவாதிகளுக்கு சாதக நிலையை ஏற்படுத்துகின்ற அரசின் செயற்பாட்டை தோற்கடிப்பது எம் அனைவரினதும் கடமையாகும்.

ஏகாதிபத்தியச் செயற்பாடுகளுக்கு வழிசமைக்கின்ற அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக அணிதிரளுமாறு இலங்கை வாழ் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். எந்த வடிவத்திலான பிரிவினைக்கும் இடமளிக்க வேண்டாமென தமிழ், சிங்கள, முஸ்லிம், பேர்கர், மலே ஆகியோரிடம் சகோதரத்துவத்துடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



கொழும்பு, கொம்பனித் தெருவிலுள்ள ரயில் திணைக்களத்துக்கு சொந்தமான ஒரு ஏக்கர் காணியில் பல மாடி வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம மற்றும் கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த)

# ஈழத்தமிழர் பிரச்சினைக்கான தீர்வு பிராந்திய உறுதிப்பாட்டுக்கு அவசியம்

## இந்திய நிபுணர் அரவிந்த் குப்தா

கொழும்பு,டிசெ.12

இலங்கையில் மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரப் பகிர்வும், தமிழர்களின் அபிலாசைகளுக்கு இணக்கமான தீர்வும், பிராந்தியத்தின் நீண்டகால உறுதித்தன்மைக்கு மிகவும் முக்கியமானவை. இந்தியாவின் வெளி விவகாரக் கொள்கை வகுப்பு நிபுணர் கலாநிதி அரவிந்த் குப்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் போக்குகள் என்ற தலைப்பில் உரையாற்றிய, அரவிந்த் குப்தாவிடம், 13வது திருத்தச்சட்டம் தொடர்பான இந்தியாவின் பார்வை குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டது. அப்போதே அவர் இவ் வாறு பதிலளித்துள்ளார்.

புதுடில்லியில் பாதுகாப்புக் கற்கைகள் மற்றும் ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றும் அரவிந்த் குப்தா, தமிழர் பிரதேசங்களுக்கு கூடுதல் தன்னாட்சி உரிமை வழங்குவது குறித்த இந்தியாவின் கருத்துக் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில்-

குறிப்பிட்ட விடயங்களுக்குள் மூழ்காமல், ஒத்துழைப்புத் தொடர வேண்டும் என்றுதான் இப்போது சொல்கிறேன். இலங்கையில் மட்டுமன்றி, இந்தியாவிலும் உள்ள பொது மக்களின் உணர்வுகளை நாம் மனதில் கொள்ள வேண்டும். முடிவுகளை எடுக்கும்போது அனைத்துத் தரப்பினரையும் பங்காளர்களாக இணைக்கவேண்டும்-

வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கும்போது பொதுமக்கள் மற்றும் ஊடகங்களின் கருத்துகளை நிராகரிக்க முடியாது - என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த-சி)

# துமிந்தவை கைது செய்யாவிட்டால் கொலன்னாவை போர்க்களமாகும்

## பாரதவின் மகள் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.12

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நாடு திரும்பும்போது அவர் விமான நிலையத்தில் கைது செய்யப்படாதுவிடின், கொலன்னாவைப் பகுதி போர்க்களமாக மாறும் என மறைந்த பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிரூணிக்கா பிரேமச்சந்திர எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஆசி வேண்டி அண்மையில் நடத்தப்பட்ட போதி பூஜை பற்றி அவர் தெரிவிக்கையில், குற்றச்செயல் வழக்கு ஒன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு ஆசி வேண்டி நடத்தப்பட்ட முதலாவது பூஜை இதுவாகத்தான் இருக்க முடியும் எனவும் கூறினார்.

ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவராக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# மீண்டும் நாகபாம்புடன் இணைந்த நடனப் பெண்

கொழும்பு,டிசெ 12

கொள்ளுப்பிட்டி இரவுக் களியாட்ட விடுதியில் பெண் ஒருவர் பாம்புடன் நடனமாடியபோது அவரிடமிருந்து பிரிக்கப்பட்ட பாம்பு மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு இணங்க நாக பாம்பு அந்தப்பெண்ணிடம் நேற்று வழங்கப்பட்டுள்ளது. கொள்ளுப்பிட்டி இரவுக் களியாட்ட விடுதியில் நாக பாம்புடன் நடனமாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பாம்புடன் குறித்த பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் மீது வழக்கு தொடரப்பட்ட அதேவேளை பாம்பு தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் விடப்பட்டது.



இந்நிலையில் கடந்த 6ஆம் திகதி பாம்பை அந்த பெண்ணிடமே ஒப்படைக்குமாறு கொழும்பு புறக்கோட்டை நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (த)

# சிரியாவில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்க நடவடிக்கை

சிரியாவில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது

சிரியத் தலைநகர் டமஸ்கஸில் 20 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் சிக்கியுள்ளனர். கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படையினருக்கும் இடையிலான மோதல்கள் உக்கிரமடைந்துள்ள காரணத்தால் பிரதான விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இலங்கையர்கள் தொடர்பில் கடமையாற்ற வேண்டிய சிரியாவுக்கான இலங்கை அதிகாரியைக் காண வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# மத்திய கிழக்கில் பணிக்குசெல்வோருக்கு விசேட தொலைபேசி இணைப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றச் செல்வோருக்கு விசேட தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட உள்ளன.

> வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வோருக்கு விசேட செல்லிடப்பேசி இணைப்புக்களை வழங்கும் ஆசியாவின் முதல் நாடாக இலங்கை திகழ்கின்றது

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கையர்களுக்கு விசேட செல்லிடப்பேசி இணைப்பு ஒன்றை வழங்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதல் கட்டத்தில், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவூதி அரேபியாவுக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்வோர் நன்மை அடையவுள்ளனர்.

வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வோர் குடும்ப உறவினர்களுடன் நெருங்கிய உறவைப் பேணவும், தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை தாமதமின்றி வெளிப்படுத்தவும் இந்த புதிய திட்டம் வழியமைக்கும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வோருக்கு விசேட செல்லிடப் பேசி இணைப்புக்களை வழங்கும் ஆசியாவின் முதல் நாடாக இலங்கை திகழ்கின்றது என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் வீட்டுப் பணிப்பெண்களாக தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்வோர் கூடுதல் நன்மை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.தே.க செயற்குழு இன்று கூடுகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் 54ஆவது மாநாடு நிறைவுற்ற பின்னர் இடம்பெறும் முதலாவது செயற்குழுக் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.க தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய பதவிகளுக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன்போது கட்சியின் பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர், தவிசாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு தகுதியானோர் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பதவிகளுக்கு கட்சித் தலைவர் ரணில் [illegible] பிரேரிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# மூன்று நாடுகளுக்கு புதிய தூதர்கள் நியமனம்

கொழும்பு, டிசெ.12

நேபாளம், ஈராக் மற்றும் கியூபா ஆகிய நாடுகளுக்கான புதிய தூதர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நேபாளத்தின் புதிய தூதராக டபிள்யூ.எம்.செனவிரத்னவும் ஈராக்கின் தூதராக சுமித் நாகந்தலவும் கியூபாவின் புதிய தூதராக சரத் திஸாநாயக்கப்பட்டுள்ளனர். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதர்கள் எதிர்வரும் நாள்களில் அந்தந்த நாடுகளுக்குச் சென்று தமது கடமைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

மேலும், பஹ்ரேனுக்கும் புதிய தூதுவர் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் தியாகராஜா

(இளைப்பாறிய ஆசிரியர்
யா/ ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கு, புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தியாகராஜா (10.12.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

9ஆம் கட்டைபடி,
(சிவன் கோயிலடி
புத்தூர் மேற்கு, புத்தூர்)

(26693)

தகவல் :
பிள்ளைகள்

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பூலோகம்
17.03.1921

வைகுந்தம்
15.12.2009

## அமரர் நாகநாதன் மனோன்மணி அம்மா

திதி: அபரபக்க சதுர்த்தசி

தாயைத்தா விழந்தார்க்குத் தரணியிலே அமைதியுண்டோ!
ஓயாது உன் நினைவு உள்ளத்தை வாட்டுதம்மா!
எத்தனை பிறவிகள் - நாம் எடுத்திட்ட போதிலுமே
என்றைக்கும் எம் அன்னை நீயாக வரவேண்டும்
இத்தரையின் மீதில் - நாம் உனையிழந்து தவிக்கின்றோம்.
இறைவனிடம் சொல்லி விட்டு எங்களிடம் வந்து விடம்மா.

பிரம்பபடி,
கொக்குவில் .

அன்னையின் பிரிவில் வாடும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# எயிட்ஸ் விழிப்புணர்வு போட்டியில் பரிசு பெற்றோர் விவரம்

தென்மராட்சி,டிசெ.12

சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நடத்தப்பட்ட எயிட்ஸ் விழிப்புணர்வு வினாவிடைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. நேற்றுமுன்தினம் குலுக்கல் மூலம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றியாளர் விவரம்:-

முதலாம் பரிசு-5 ஆயிரம் ரூபா, இராசநாயகம் தரணிகா-கோப்பாய் மத்தி, இரண்டாம் பரிசு-3 ஆயிரம் ரூபா, யோகேந்திரம் சுகசினி-தவசிகுளம் மிருசுவில், மூன்றாம் பரிசு-2 ஆயிரம் ரூபா, கந்தசாமி கீதாஞ்சலி-வீரசிங்கம் வீதி, சாவகச்சேரி,

தலா 500 ரூபா கொண்ட பத்து ஆறுதல் பரிசுகள், சண்முகம் சிவர்ணா-வரணி வடக்கு, கமலகுமார் சிவேந்தினி-சரசாலை வடக்கு, குகநாதன் சுபரஜனி-சரசாலை வடக்கு, தி.தீபதர்சிகா-வீரபத்திரர் கோயிலடி, நாவற்குழி, சந்திரலிங்கம் கிறிஸ்ரியா-கைதடி தெற்கு, ச.தனுஷியா-கைதடி மேற்கு, பத்மராசா ஜகீதா-வரணி வடக்கு, டினேஸ்குமார் ஜான்சினி-நாவற்குழி, த.மேரி டொன்சியா-கைதடி நாவற்குழி, இராசகுலேந்திரன் குறோசிகா-வேவில் கெர்டிகாமம்.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று மு.ப 10 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வழங்கப்படும்.(3-9)

# பால்குடப் பவனி

கோண்டாவில் சபரீச ஐயப்பன் கோவில் வருடாந்த மகரஜோதி மஹோற்சவப் பெருவிழாவின் ஆறாம் நாள் திருவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும். 108 பால் குடங்களுடன் ஐயப்பன் சுவாமி உரும் பிராய் பர்வதபத்தினி அம்மன் கோயிலிலிருந்து பலாலி வீதிவழியாகஐயப்பன்கோவிலை வந்தடையும்.

பால்குட பவனியில் பங்குபற்றவுள்ள அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)


# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த உத்தராடம் நட்சத்திரம், 5அடி 10 " கிரக பாவம் 16 . 4 இல் செவ்வாய் டுபாயில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 021 4908329,
(26684)(6.7.4) 077 2086 824


# கண்ணீர் அஞ்சலி

## பெ (f) லீஷியா மனோநிதி நியூட்டன் ஜெனநாதன்

(உத்தியோகத்தர்,
நவீல்ட் பாடசாலை,
கைதடி)



இறுதிவரை இணையாய் துணையாயிருப்பாய்
என்று எண்ணியிருந்தோம் - உறவுகள் பதைபதைக்க
உணர்வுகள் துடிதுடிக்கப் பாதியில் பரிதவிக்க விட்டுப் புறப்பட்டீரோ....
உம் நினைவுகளைச் சுமந்து செல்லும் தென்றல் உம்
உயிர் மூச்சுப்பட்டு தூய்மையாகும்
உம்மால் செதுக்கப்பட்ட சமூகம் மலர்ந்து கொண்டே இருக்கிறது....!
என்றும் தூயவளே... நீர் காலமெல்லாம் கலங்கரை
விளக்காய் எம் இதயங்களில் வாழ்வீர்....

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலய முகாமையாளரும், முகாமையாளர்களும்,
உத்தியோகத்தர்களும், தேசிய சேமிப்பு வங்கி,வட வலயம்.

(26669)(2.6.7)

# மரண அறிவித்தல்



## திருமதி விமலாதேவி இராஜேந்திர ராவ்

செம்மணி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி இராஜேந்திரராவ் நேற்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.20 மணிக்கு காலமானார்.

அன்னார் இராஜேந்திர ராவ் (ஓய்வு நிலை உத்தியோகத்தர் - கச்சேரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சீதாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜனந்தன் (வேலணை பிரதேச செயலகம்), ஜயானந்தி (மக்கள் வங்கி - யா/ பல்கலைக்கழகக்கிளை) ஆகியோரின் பாசமிகு தாயும், மோசெஸ் பத்மலால் (வட மாகாண கல்வி அமைச்சு) அவர்களின் அன்பு மாமியும், தர்ணிகா, லிதுர்ஷிகன் ஆகியோரின் பேர்த்தியும், நவரட்ணம், சந்திராதேவி, இந்திராதேவி, தனபாலசிங்கம், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், இராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுசிலாதேவி, வத்சலா, கௌசலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.12.2012) புதன்கிழமை அவ்ரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 23/1,
வெயிலுகந்த பிள்ளையார் கோயில் ஒழுங்கை,
செம்மணி வீதி, நல்லூர்.

(26691) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்



## கார்த்திகேசு பஞ்சலிங்கம்

(பிரதம மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்ப உத்தியோகத்தர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தை, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பஞ்சலிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை, மகரகம புற்றுநோய் வைத்தியசாலைகளில் சேவையாற்றி ஓய்வுபெற்று தற்போது பொலநறுவை (A.J.Ward) வைத்தியசாலையில் சேவையாற்றியவர்) 09.12.2012 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சண்முகநாதன், திருமதி சேனாதிராசா பாக்கியம், அருமைநாதன், மகாலிங்கம் மற்றும் பரமநாதன் (மலேசியா), நாகலிங்கம், நவரத்தினம் (லண்டன்), திருமதி ஜெயரஞ்சிதன் செல்வலட்சுமி ஆகியோரின் அருமைமிகு சகோதரரும், திருமதி சண்முகநாதன் இரத்தினேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சேனாதிராசா, திருமதி பரமநாதன் சுசீலா (மலேசியா), காலஞ்சென்ற திருமதி அருமைநாதன் தவம் (மலேசியா), திருமதி மகாலிங்கம் இந்திராணி (ஆஸ்திரேலியா), திருமதி நாகலிங்கம் வள்ளிநாயகி, காலஞ்சென்ற நாகலிங்கம் ஜெயரஞ்சிதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்கரத்தையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (13.12.2012) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(26692) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## பெ/(f) லீஷியா மனோநிதி நியூட்டன் ஜெனநாதன்

(உத்தியோகத்தர், நவீல்ட் பாடசாலை, கைதடி)



பெருங்குளம் சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல.22, சந்தனமாதா கோயில் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோநிதி நியூட்டன் ஜெனநாதன் 08.12.2012 சனிக்கிழமை அதிகாலை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி E.T.செல்லையா தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கிறிஸ்லொகஸ் தம்பதியரின் அன்புமருமகளும் நியூட்டன் ஜெனநாதனின் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி) அன்பு மனைவியும் திருமதி ஆளீன் வெஸ்லியோசப் (ஆஸ்திரேலியா), அலோய் நிரேஷ்ஆகியோரின் அன்புத்தாயும், வெஸ்லி வதனோஜனின் (ஆஸ்திரேலியா) அன்பு மாமியும், திருநேசன் (ஜயந்தினி), திருக்குமார் (அமிர்த்தி), மனோகரி (ரவீந்திரன்), றோகான் (சுதர்மினி), றொகானா(தயாபரன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,வினோதானந்தன் (அன்னராணி),மனோகரன் (அருந்தவராணி), நவீனராஜன், ஜஸ்மின் (ராஜன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (12.12.2012) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கம் பரி.யோவான்(சுண்டுக்குளி) சேமக்காலையில் இடம்பெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

22, சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(26682)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# பிரிட்டனில் கொமன்வெல்த் அலுவலகம் முன் ஈழத்தமிழர்கள் திரண்டு சென்று ஆர்ப்பாட்டம்

## ஐ.நா. சபை மாணவர் மீதான தாக்குதலைக் கண்டித்து




இலங்கை அரசின் தமிழ் மக்கள் மீதான இனப்படு கொலையை தடுப்பதற்கு தவறிய ஐ.நா. சபையைக் கண்டித்தும் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் மீதான இலங்கை இராணுவத்தின் தொடர்ச்சியான அரசியல் நோக்கம் கொண்ட தாக்குதல்களைக் கண்டித்தும் பிரிட்டிஷ் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்ட நிகழ்வில் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டு தமது கண்டனத்தை தெரிவித்தனர்.

பிரித்தானிய தமிழர் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் மாலை 4 மணிக்கு ஆரம்பித்த போது சிறுவர் முதல் முதியவர்கள் வரை ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டு நூற்றுக்கணக்கான சுலோக அட்டைகளை தாங்கியும் பதாகைகளை ஏந்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனை வெளிநாட்டு மற்றும் பொது நலவாய அலுவலகத்தில் பணியாற்றும் நூற்றுக் கணக்கான கொள்கை வகுப்பாளர்களும் அதிகாரிகளும் தமது வேலை முடிந்து வீடு திரும்பியபோது அவதானித்த வண்ணம் சென்றனர்.

இதேவேளை, மாலை 5 மணிக்கு பிரித்தானிய தமிழர் பேரவையின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பிரிட்டிஷ் வெளிநாட்டு மற்றும் பொது நலவாய அலுவலகத்தின் தென் ஆசிய மற்றும் இலங்கைக்கான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை அவர்களது அலுவலகத்தில் சந்தித்து ஈழ தமிழர் சார்பில் பிரித்தானிய தமிழர் பேரவையினால் தயாரிக்கப்பட்ட மனுவை கையளித்து இன்றைய தாயகத்தின் நிலைமைகளை விளக்கி பிரிட்டிஷ் அரசு செயற்படாமல் இருப்பதை வன்மையாகக் கண்டித்து தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். (3)



மூளாய் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் நூலகத்துக்கு அலுமாரி ஒன்றினை வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம் பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில் இந்த உதவி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் கனகசபாபதி, வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி.நா.ஐங்கரன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். (3-130)

## சீருடைகள் வழங்கப்படவில்லை

கொடிகாமம்,டிசெ.12

சாவகச்சேரி பிரதேச சபையில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்களுக்கான இந்த வருடத்துக்குரிய சீருடைகள் இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (3-9)

# வெவ்வேறு சம்பவங்களில் இருவர் காயம்

தென்மராட்சி, டிசெ.12

ஓடிக்கொண்டிருந்த வாகனங்களை நிறுத்தமுன்னர் குதித்த இருவர் காயமடைந்த சம்பவங்கள் கடந்த சனிக்கிழமை மந்துவில் மற்றும் நுணாவில் பகுதிகளில் இடம்பெற்றன.

மந்துவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து வந்த சின்னத்துரை மகேந்திரதேவி (வயது-51) என்பவர் நாய் துரத்தி வந்ததனால் பதற்றமடைந்து பாய்ந்ததில் காயமடைந்தார்.

நுணாவில் பகுதியில் ஓட்டோவில் பயணித்த இளைஞர் ஓட்டோ நிறுத்த முன்னர் இறங்கிய போது தூக்கி வீசப்பட்டதில் தலை மற்றும் கையில் காயங்கள் ஏற்பட்டன.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (3-9)

# நாளையும் நாளை மறுதினமும் மின்தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்துவதால் நாளை வியாழக்கிழமையும், நாளை மறுதினம் வெள்ளிக் கிழமையும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

நாளை வியாழக்கிழமை பி.ப. 2மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, சுன்னாகம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணல் பிரதேசம் கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், மற்றும் பட்டணப் பகுதி நீங்கலான யாழ்.மாநகர சபை பகுதி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மாவட்ட மின் பொறியியலாளர் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (3)

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லையா பொன்னுத்துரை

திதி: அமாவாசை

பிறப்பு 15.11.1919

இறப்பு 22.11.1995



அன்பான உறவொன்று ஆண்டவனடி சென்றதே!
பண்பான உயிரொன்று பரமனடி சென்றதே!
எங்குதான் சென்றீர்கள் எம் உறவுகளைத் தவிக்கவிட்டு
ஓடி வந்திடுங்கள் உங்கள் உறவுகளை அரவணைக்க

இல. 10, பாரதிலேன்,
நல்லூர் றோட்,
கச்சேரி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
குடும்பம்.

(26686)(45.6.7)

## விற்பனைக்கு

அயன் கேற் 13' 8¼', 12' 8¼' அகலம், உயரம் கொண்ட 2 கேற்றுகள் உண்டு. மேலும் பல அளவுகளில்கேற்றுகள், மரக் கதவுகள், நிலைகள் எம்மிடம் உண்டு. தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:0712362490

(26556) (6.7)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி- சுன்னாகம்

சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான கேள்வி கோரல்-2013

கல்லூரியின் சிற்றுண்டிச் சாலையை 2013ஆம்-ஆண்டு ஒரு வருடம் நடத்துவதற்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. மேலதிக விவரம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவு திகதி 23.12.2012

(ச/2150) (6.7.4)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

Raveens EMC Karaveddy

எமது நிறுவனத்தில் ஆரம்பகாலம் தொடக்கம் ஆங்கில இலக்கிய பாடத்தைப் (Eng.Lit) போதித்து வருபவரும் வடமராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய (ஆங்கிலம்)

S. சுந்தரமூர்த்தி

அவர்கள் இன்று (12.12.2012) புதன்கிழமை தமது சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் நீண்டகாலம் சுகமாக வாழ்ந்து அவரது கற்பித்தல் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.



ப.ஈஸ்வரநாதன்
B.Sc (Agric) Hons
(நிர்வாகி)

சிங்கத்தின் வீடு,
கரவெட்டி.

Best Wishes

(26607) (45.6.7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் சீனிவாசகம் பொன்னுத்துரை



தோற்றம் 10.11.1935
மறைவு 02.11.2012

தோற்றமும் மறைவும்
இயற்கை வகுத்த நியதியென்றாலும்
இன்பமும் துன்பமும்
வாழ்வின் மேடையில்
அரங்கேறும் நாடகமானாலும்
பார்த்து பழகிய கண்களும்
பேசிப் பழகிய வாயும்
கேட்டு மகிழ்ந்த காதுகளும்
நினைவுகள் பதித்த உறுதியான
நெஞ்சும் கொண்ட அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம். (26672)(9.14)

என்றும் உங்கள்
நினைவுகளுடன் மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தாவடி வடக்கு,
கொக்குவில்
(பாகுதேவன் புலம்)

## A/L CHEMISTRY HALL

ஆசிரியர் சு. சுரேஸ்குமார் B.Sc.(Hons)
2013 paper class (3000MCQ)
2014 Physical Chemistry

2015 - O/L க்கு பின் 22.12.2012 இல் ஆரம்பம்

K .K .S. வீதி, கொக்குவில்.
G.P.S.வீதி, கல்வியங்காடு.

(26630)(6.7.4) நிர்வாகம்

## பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகள் பரீட்சையில் திறமைசாலிகளாக திகழ்வதற்கு...

படிப்பது எப்படி?

எனும் நூல்

பல கற்றல் நுட்ப வழிகாட்டல்களுடன் பூபாலசிங்கம், அன்னை, சிதம்பர பிள்ளை புத்தக சாலைகளில் கிடைக்கின்றது.

விலை 350/-

தொடர்பு: 0775558028

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுதுமலை வடக்கைச் சேர்ந்த பாலேந்திரன் - சிவகாம்பிகை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன்

பாலேந்திரன் குமரன்

அவர்கள் 03.12.2012 இல் London Metropolitan University இல் Business Information Technology (B.Sc. Hons) பட்டம் பெற்றமையிட்டு பாராட்டி வாழ்த்துகிறோம். இவர் யா/ உடுவில் மகளிர் கல்லூரி, யா/ பரியோவான் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, தம்பி ஸ்ரீபிரணவன், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார்.

சுதுமலை வடக்கு.

(26687)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இதுவரை யாரும் வழங்காத நத்தார் கொடுப்பனவு

YAMAHA

உங்கள் புதிய கனவினை நனவாக்க இன்றே அழையுங்கள்
நீங்கள் விரும்பி எடுக்கும் புதிய யமகா FAZER, FZ-S, FZ மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 18000.00 விலைக் கழிவினைப் பெற்றிடுங்கள்.
இச்சலுகை டிசெம்பர் 31 வரை மட்டுமே.
நிபந்தனைக்குட்பட்டது.

FOLLOW US ON: f

(C2974)(2.6)

**டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ்**
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், குஞ்சர்கடை சந்தி, நெல்லியடி.
T.P.:- 021 222 4040/ 0776623824. T.P.:-0779893343



**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## கோழிக் குஞ்சு விநியோகம்



BAIRAHA No.1 புறோயிலர் குஞ்சுகள் 14.12.2012 விநியோகிக்கப்படும், பதிவுகளை மேற்கொள்ளவும்.
* ராஜ்வ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை
T.P. NO - 0776090926
* கதிர் வேலான் கிளிநொச்சி,
T.P. NO - 0772046803
* ஜென்சி பாம், 1ஆம் கட்டை, பகுத்தித்துறை.
T.P NO - 0773541771

(28824)



# AVNOR COMPLEX

NEW AVNOR COMPLEX

SPACES ARE AVAILABLE FOR RENT

CONTACT NO:- 0773798116
0789138451







Avnor Complex ன் கீழ்த்தள பின் பகுதியினை (4200sq.ft) பாவனையில் கொடுத்தும் முகமாக (12.12.12) சுபநேரம் 12 மணியளவில் திறப்புவிழா நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

(26638)(2.6.)

269,பலாலி றோட், யாழ்ப்பாணம்.



## தேவை

பகல் பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
தொடர்பு:077 8418344


## கண்ணீர் பூக்கள்



எமது நவீலட் பாடசாலையின் (பிரதம அலுவலகச் செயலாளர்)
**பெ(F) லீஷியா மனோநிதி நீயூட்டன் ஜெனநாதன்** அவர்கள்
கடந்த (08.12.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், பணியாளர்கள்
கைதடி நவீல்ட் பாடசாலை,
கைதடி.


# Midea Electro Mart

## நத்தார்/புத்தாண்டு தினங்களை முன்னிட்டு விஷேட விலைக்கழிவுடன்

# Midea PC Show Room

LG Authorized Dealer for **Abans** Ltd.



Samsunk 22" LED T.V. With DVD Player Free
Rs.34,900/=
1Year warranty

Samsunk 32" LED T.V. With DVD Player Free
Rs.63,900/=
1Year warranty



Sharp TV BG 32"
Rs.39,900/=
1Year warranty

LG.Wf 761 Washing Machine
- Free Items Dual sim Touch Phone Free



LG 252 Door Cooling Fridge
- Free Items
* Grinder * Silver Kettle
* Rice Cooker
* Standfan
* Re chargable light

**Desktop pc**

| COMPUTER | INTEL DUAL CORE | INTEL DUAL CORE | INTEL CORE i3 |
|---|---|---|---|
| Processor | Intel Dual core 2.60GHZ | Intel Dual core 2.60GHZ | Inter Core I3 3.3GHZ |
| Mother board | Intel Board DH61 | Intel Board DH61 | Intel Board DH61 |
| Memory | 2GB DDR3 1333MHz | 2GB DDR3 1333MHz | 2GB DDR3 1333MHz |
| Hart disk | 500GB SATA-7200RPM | 500 GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM |
| Disk drive | DVD Writer | DVD Writer | DVD Writer |
| Casing | ATX 500W | ATX 500W | ATX 500W |
| Monitor | Monitor 15.6" LED | Monitor 19" LED | Monitor 19" LED |
| Key board | Optical mouse USB | Optical mouse USB | Optical mouse USB |
| Mouse | Multimedia key board | Multimedia key board | Multimedia key board |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker |
| Price | price =45900 | price=48900 | price= 56900 |

அனைத்து Sony TV களுக்கும் விசேட விலைக்கழிவும் இரண்டு வருட உத்தரவாதமும்



LG 282 Door Cooling Fridge - Free Items
* Grinder
* Silver Kettle
* Rice Cooker
* Standfan
* Re chargable light

**Laptops**

| HP Mini | Dell 3520 | HP pavilion G6 | HP pavilion G4 | HP pavilion G6 |
|---|---|---|---|---|
| Atom 1.6 GHz | Intel Dual core 2.5GHz | Intel core i3 2.2 GHz | Intel core i3 2.2 GHz | IntelCorei5-2.50 GHz |
| Free Dos | Ubuntu | Free Dos | Free Dos | Free Dos |
| RAM 2GB DDRIII | RAM 2GB DDRIII | RAM 2GB DDRIII | RAM 2GB DDRIII | 4GBDDR3RAM |
| Intel Graphics | Intel HD Graphics | Intel HD Graphics | Intel HD Graphics | Intel® HD Graphics |
| H.D 320GB | H.D 320GB | H.D 320 GB | H.D 500 GB | 500 GB HDD |
| LED 10. HD LED | LED 15.6" HD | LED 15.6" HD LED | LED 14" HD LED | LED 15.6. HD LED |
| Wifi, BlueTooth | DVD super multi | DVD Writter | DVD Writter | DVD Writer |
| webCamera Mic | Wifi, BlueTooth webCamera With Mic | Wifi, BlueTooth webCamera With Mic | Wifi, BlueTooth webCamera With Mic | Wifi, BlueTooth webCamera With Mic |
| Energy Star power | Energy Star power | Energy Star power | Energy Star power | Energy Star power |
| Price=47900 | Price=57900 | Price=69900 | Price=68900 | Price=87900 |



LG 191 Single Door Fridge Free - Dual sim Touch Phone



LG.32 LED TV with Free LG Home theater Prize 72,900/

Terms & Contdition 3Years Manufacturer's warranty

**Laptop** கொள்வனவு செய்பவர்களுக்கு **HSDPA 7.2Mbps Dongle FREE**

**No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA. Tel: 021-2224566 Fax: 021-2221646**
**www.mideamart.com | e-mail:midea21@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளை
முகாமையாளர் நியூட்டன் ஜெனநாதன் அவர்களின்
அன்பு மனைவி
**திருமதி. பெலிசியா மனோநிதி ஜெனநாதன்**
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**AP KITCHEN LAPTOP**
நிறுவனத்தினர்
இல. 368/1, காலி வீதி, கொழும்பு- 06.
124D, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 28 * 03 * 1932



மறைவு 13 * 11 * 2012

### அமரர் காசியர் சபாபதி

கடந்த 13.11.2012 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் காசியர் சபாபதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.12.2012) புதன்கிழமை புனித கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (14.12.2012) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோணைப்புல வைரவர்
கோயிலடி, மல்லாகம்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### இராமலிங்கம் அன்னம்மா

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் அன்னம்மா நேற்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் (புங்குடுதீவு நகைக் கடை உரிமையாளர்) அன்பு மனைவியும், மகேஸ்வரி, புவனேஸ்வரி, லட்சுமணன், இராசரட்ணம், இராஜேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் தாயும், மகாரட்ணம், முத்துலிங்கம், லலிதா, இராஜேஸ்வரி, குருகுலசிங்கம், ஏகாம்பரநாதன் ஆகியோரின் மாமியும், விக்னேஸ்வரன், முரளிதரன், சதீஸ்குமார், சிவகௌரி, பாலரூபன், கிருஸ்ணரூபன், தயானந்தரூபன், ஜெகஜீவரூபன், கீர்த்திகா, சுரேக்கா, சஞ்சயன், ஸ்ரீதர்சன், நிலோஜன் ஆகியோரின் பேர்த்தியும், சாயீசன், ஆகாஷன், மயூரி, ஹாசினி, கனிஸ்ரா, கஜன், காயத்திரி, நிஷானி, மானிஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2012) புதன்கிழமை பி.ப.2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மயானத்தில் சடலங்களை தோண்டி அவயவங்கள் திருட்டு

### கல்முனையில் சம்பவம்

கல்முனை, டிசெ.12

இந்து மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த சடலங்களைத் தோண்டியெடுத்து அதிலிருந்து அவயவங்கள் எடுத்துச்செல்லப் பட்டுள்ள சம்பவமொன்று கல்முனையில் இடம்பெற்றுள்ளது.

கல்முனை பாண்டிருப்பு இந்து மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த பல சடலங்களைத் தோண்டி எடுத்த இனந்தெரியாதோர் அந்த சடலங்களிலிருந்து அவயவங்களை எடுத்துச் சென் றுள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்

பாண்டிருப்பு அன்பு வெளிபுரம் கடற்கரை வீதியில் உள்ள இந்து மயானத்தின் ஊடாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை சென்ற பொதுமக்கள், புதைகுழிகள் தோண்டப்பட்டிருப்பதைக் கண்டு அது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த மயானத்துக்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பில் ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த சவப்பெட்டிகளில் 4 சவப்பெட்டிகள் தோண்டி எடுக்கப்பட்டு அந்தச் சவப்பெட்டிகளை உடைத்து அவற்றினுள் இருந்த சடலங்களை வெளியே எடுத்து அவயவங்களை எடுத்து விட்டு சடலங்கள் மீண்டும் அரை குறையாக புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். சூனியம் செய்வதற்காகவும் சதிவேலைகளுக்காகவும் சடலங்களின் மண்டை ஓடுகளை மந்திரவாதிகள் தோண்டி எடுத்திருக்கலாம் என்று பிரதேசமக்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பான விசாரணைகளை கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் மண்டை ஒடு ஒன்றில் சூனியம் செய்து ஒருவரது வீட்டின் முற்றத்தில் புதைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(வ)

## பிரத்தியேக வகுப்புகள்

* யாழ்.நகரின் மத்தியில் தரம் 6முதல் 11வரை..
* விஞ்ஞானம், கணிதம், வரலாறு, வர்த்தகம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படும்.
* தனியாகவோ / குழுவாகவோ கற்பிக்கப்படும்
* மிகக்குறைந்த கட்டணம் மாணவரின் வசதிக்கேற்ப..
* திறமை குறைந்த மாணவர்களுக்கு விசேடமாக கற்பிக்கப்படும். c/26697

மேலதிக விவரங்களுக்கு :- 0715749705

## புதிய ஞானோதயா

தனியார் கல்விநிலையம்
சங்கத்தானை, சாவகச்சேரி.
(18031)(14)

| | | |
|---|---|---|
| கணக்கியல் | -R.சுகிர்தன் | B.Com |
| பொருளியல் | - K.பிரதீபன் | B.B.A |
| வணிகக்கல்வி | - S.பிரதீபன் | M.Com |

யாழ்.மண்ணில் பிரசித்தி பெற்ற ஆசிரியர்குழாம்

ஆரம்பம் : 15.12.2012
நேரம் : பிற்பகல் 4 மணி

## வாகனம் விற்பனைக்கு

மகேந்திரா மக்கிசிமோ படி வாகனம் 2000 கி.மீ. ஓடிய நிலையில் விற்பனைக்கு உண்டு.
0777066487 யாழ்ப்பாணம். (26694)(7)

## வீடு வாடகைக்கு

நாள் வாடகைக்கு நான்கு (04) அறைகள் கொண்ட வீடு (ஓர் அறை குளிரூட்டப்பட்டுள்ளது) வாடகைக்கு உண்டு.
(26695)(14) தொடர்பு :0773086894

## தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு தச்சு வேலை செய்யக்கூடியவர்கள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
(சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)
(26700)(14) தொடர்பு -0777076415

## NORTHERN CENTRAL HOSPITALS(PVT)LTD

**Vacancies for Nurses**

Vacancies exist for qualified / experienced Nurses to work in a modern multispecialty hospital. Those interested are requested to send their application to reach the undermentioned address on or before 24[TH] December 2012. Application must be accompanied by the following documents:

1. Complete bio data with two non related referees.
2. Copies of Educational certificate
3. Photocopy of NIC
4. Photocopy of Birth Certificate
5. Passport size photograph
6. Letter from Grama Sevaka
7. Service letter from the present employer

Director, Human Resources
Northern Central Hospitals ( Pvt ) Ltd
342, Palaly Road
Jaffna

பெருமைமிகு தொழிலொன்றின் தொழில் வல்லுனர்
ஆகுவதற்கு
உங்களுக்கும் ஓர் சந்தர்ப்பம்
சிங்கப்பூரில் கல்வியுடன் 6 மாத பயிற்சிகாலத்தின் போதே மாதத்திற்கு ரூ.100,000க்கு மேற்பட்ட சம்பள கொடுப்பனவுகள்

**Carrington Overseas Students Services**
Head Office : No. 04, Sudarshana Mawatha, Nawala (Near Kirimandala Mw)
TP: 0112877654,0112873807,0725050447,0725051444,0779213632,0725050440
Branch Office :No.253/1/2, Chilaw Road, Periyamulla, Negambo. TP: 0312231303,0722226637,0773470404

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



### ஸ்ரீமதி காமாட்சியம்மா

நந்தன வருஷம் கார்த்திகைத் திங்கள் 18ஆம் நாள் (03.12.2012) திங்கட்கிழமை சிவபதம் எய்திய திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீபூதநாதசிவன் தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு அமரர் சிவஸ்ரீ இராமலிங்கக் குருக்களின் அன்புத் துணைவியார் ஸ்ரீமதி காமாட்சியம்மா அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் இடம்பெறும்.

தசாகம் (12.12.2012) புதன் மு.ப 10.00 மணி
ஏகோதிஷ்டமாசிகம் (13.12.2012) வியாழன் மு.ப 10.00 மணி
சபிண்டிகரணம் (14.12.2012) வெள்ளி மு.ப.10.00 மணி
கிருஹயக்ஞம் (15.12.2012) சனி 10.00 மணி

மேற்படி கிரியைகளிலும், 16.12.2012 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

59, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (26696)(9.14)

தகவல்:
இராம சண்முகதாசக் குருக்கள்,
இராம சண்முகானந்தக்குருக்கள்
இராம பசுபதீஸ்வரசர்மா

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச சபையில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் **திருமதி. சிவபாக்கியம் நளினி தர்மசீலன்** அவர்களின் பாசமிகு தந்தை.

### சின்னத்தம்பி யோகர்

(ஓய்வுபெற்ற பேருந்து சாலைப் பரிசோதகர்)

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர், உத்தியோகத்தர்கள்
சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கம்
C/2843)(7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னையா பாலசுந்தரலிங்கம்

(ஓய்வு பெற்ற தபாலதிபரும், முன்னாள் புலோலி ப.நோ.கூ.சங்க கிளைக்குழு உறுப்பினரும்)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், மாயக்கை தம்பசிட்டியை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா பாலசுந்தரலிங்கம் நேற்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா (ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரும், பிரபலசோதிடரும்)- இராசரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சரசுவதியின் அன்புக் கணவரும், இரத்தினகுமார், இரதிவதனி (சோதிடர்), மதிவதனி, மன் மதி (UK), மன்மதகுமார் (தபால் அலுவலர் குடத்தனை), மதனகுமார் (இலங்கை வங்கி, அச்சுவேலி) ஆகியோரின் அன்புத்தந்தையும், நடராஜலிங்கம் (ஓய்வு பெற்ற யாழ். மாவட்ட பிரதேச முகாமையாளர் இலங்கை வங்கி), திலகவதி, விமலாதேவி (முகாமைத்துவ உதவியாளர் தெங்குப்பயிர்ச்செய்கைச்சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிறேமா காலஞ்சென்ற கிருஷ்ணானந்தன் (ஓய்வு பெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி நெல்லியடி), சிவச்சந்திரன் (ஓய்வு பெற்ற பிராந்திய முகாமையாளர் தெங்குப் பயிர்ச்செய்கைச்சபை) ஆகியோரின் மைத்துனரும், யசோதினி, வரதராஜா (UK) ஆகியோரின் மாமனும், தேனுசன், பிரகலாதன், பிரபல்ஜா, மோகனவர்மன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.12.2012) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று கருகம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாயக்கை, தம்பசிட்டி.
021 2263733

(25015)(-8.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மட்டக்களப்பில் மீள்குடியமர்ந்தோருக்கு வீட்டுத்தோட்டப் பொருள்கள் வழங்கல்

மட்டக்களப்பு, டிசெ.12

மட்டக்களப்பு மாவட்டத்தின் மீள் குடியமர்த்தப் பட்ட பகுதிகளில், தெரிவு செய்யப்பட்ட குடும் பங்களுக்கு வீட்டுத் தோட்டச் செய் கைக் கான பயிர்கள், விதைகள், இயற்கை உரங் கள், பயிர் செய்வதற் குரிய உபகரணங் கள் வழங்கப்பட் டன.

இலங்கைச் செஞ் சிலுவைச் சங்கத் தின் மட்டக் களப்பு கிளையால், சங்கத் தின் திண்மக்கழிவு முகாமைத்துவம் மற் றும் வீட்டுத் தோட் டச் செயற்றிட்டத் தின் கீழ் நேற்று முன் தினம் திங்கட்கி ழமை இவை வழங் கப்பட்டன.

காந்திநகர், பாவற் கொடிச் சேனை, சின் னவத்தை, கொடு வாமடு, தந்தாமலை ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப் பட்ட குடும்பங்க ளுக்கே வீட்டுத் தோட்டச் செய்கைக் கான பொருள்கள் வழங்கப்பட்டன. அத்துடன், குறித்த கிராமங்களி லுள்ள பாடசாலைகளுக்கும் பயிர்ச்செய்கைக்கான பொருள்கள் வழங் கப்பட்டன.

மேற்படி நிகழ் வில், இலங்கைச் செஞ்சிலுவைச் சங் கத் தின் மட்டக் களப்பு மாவட்ட கிளைத் தலைவர் த.வசந்தராஜா, கிளை நிறைவேற்று அதிகாரி வி.பிறே மகுமார், திட்ட உத் தியோகத்தர் எஸ்.யோகநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.11.2012 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

அமரர் **வேலாயுதம் இராசம்மா**

அவர்களின் வீட்டுக்கிரியைகள் நாளை (13.12.2012) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி, கச்சேரியடி,
யாழ்ப்பாணம். (26704)(9.14) **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது வங்கியின் உத்தியோகத்தரான திருமதி மோசஸ் பத்மலால் ஜெயானந்தி அவர்களின் அன்புத் தாய்

திருமதி
**விமலாதேவி இராஜேந்திரராவ்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர் ,உத்தியோகத்தர், மக்கள்வங்கி, பல்கலைக்கழகக்குடும்பம்,யாழ்ப்பாணம். (26701)(14)

# மரண அறிவித்தல்

## சிவகற்புக்கரசி அரியரட்ணம் (கற்பு)



காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் மற்றும் லில்லி அவென்யு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகற்புக்கரசி அரியரட்ணம் நேற்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் நூவான்வெல நாகமுத்து கந்தசாமி -சிவகலை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற ஆறுமுகம் வேலுப்பிள்ளை (பிறண்டியர்)- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், வேலுப்பிள்ளை அரியரட்ணத்தின் (பட்டயக் கணக்காளர் V.அரியரட்ணம் கம்பனி, கொழும்பு- யாழ்ப்பாணம் உரிமையாளர், வேலுப்பிள்ளை அன் சன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், ராஜமோகன் (Civil Engineer, Managing Director Pera Enginering Constrution (PVT) LTD), ஜெயமோகன் (Managing Director Accounting Systems Management Consultants (PVT) LTD) ஆகியோரின் அன்புத் தாயும், சங்கீர்த்தாவின் அன்பு மாமியும், அனுஷ்காவின் பேர்த்தியும் ஆவார். அன்னார் சிவகாந்தராஜா (ராசன்) ஸ்ரீவர்ணகுலசூரியா, காலஞ்சென்ற சிவநேர்மைக்கரசி (சிவா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலா, நாகேஸ்வரி, வள்ளிநாயகி, காலஞ்சென்ற விஜயலக்சுமி, நகுலாம்பிகை, பரமேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், பொன்னம்பலம், காலஞ்சென்ற முருகேசு, லோகநாதன் ஆகியோரின் சகலியும், அமல்நாத், காயத்திரி ஆகியோரின் அருமை பெரியம்மாவும், ஸ்ரீநாத், அனுஷா, மீரா, மிதுஷா ஆகியோரின் மாமியும் ஆவ்வார்.

அன்னாரின் பூதவுடல் கனத்தை ஜெயரத்தனா மலர்ச்சாலையில் இன்று (12.12.2012) புதன்கிழமை காலை 9.00 மணியிலிருந்து 5.00 மணிரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (13.12.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**50- 6/1, லில்லி அவென்யு,**
**வெள்ளவத்தை.**

(சி/2548)(9.14)

**தகவல்:கணவர்,**
**பிள்ளைகள், மருமகள்.**
T.P- 011 2580066

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வாகனங்களுக்கு இலங்கையில் வரி அதிகரிப்பு

## அதிர்ச்சியில் தொழில்துறையினர்

இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் வாகனங்களுக்கு இலங்கையில் சுங்க வரி பன்மடங்காக உயர்த்தியிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய ஓட்டோமொபைல் தொழில் துறையினர் தெரிவித்தனர்.

இந்திய ஓட்டோமொபைல் தொழில் துறைக்கு, இலங்கை மிக முக்கியமான வாடிக்கையாளர் நாடு ஆகும். கடந்த ஆண்டு மட்டும் 100 மில்லியன் டொலர் அளவுக்கு இந்திய கார் மற்றும் பிற வாகனங்கள் இலங்கைக்கு ஏற்றுமதியாகியுள்ளன.

இந்த நிலையில், இலங்கை சுங்க வரியை திடீரென உயர்த்தியிருப்பது, இந்திய ஓட்டோமொபைல் உற்பத்தியாளர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பயணிகள் கார் மீதான சுங்க வரியை 73 சதவீதமும், மூன்று சக்கர வாகனங்கள் மீதான வரியை 45 சதவீதமும் உயர்த்தியது. அத்துடன், வர்த்தகப் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் மீதான வரியும் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

**கடந்த ஆண்டு மட்டும் 100 மில்லியன் டொலர் அளவுக்கு இந்திய கார் மற்றும் பிற வாகனங்கள் இலங்கைக்கு ஏற்றுமதியாகியுள்ளன.**

இதுகுறித்து இந்திய ஓட்டோமொபைல் உற்பத்தியாளர் சங்கத்தின் பிரதிநிதி சுகோதோ சென் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஏப்ரல் மாதம் பயணிகள் கார் மீதான இறக்குமதி சுங்க வரியை இலங்கை அரசு திடீரென உயர்த்தியது. பின்னர் கடந்த நவம்பர் மாதம் வர்த்தக வாகனங்கள் உள்ளிட்ட பிற வாகனங்கள் மீதான வரியையும் உயர்த்தி விட்டது.

இதனால் வாகன ஏற்றுமதியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், இந்திய வாகனங்களை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில், ஜனவரியில் இலங்கையில் நடத்தத் திட்மிட்டிருந்த ஓட்டோமொபைல் கண்காட்சியும் ஒத்திவைக்கப்பட்டது.

மேலும், இலங்கையானது தடையற்ற வர்த்தக உடன்பாட்டில் ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் வாகனங்களைச் சேர்த்துள்ளது. ஆனால் இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்தார்.

குறித்த பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்த முயற்சிகள் இடம்பெற்று வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.(வ)

### கவனிப்பார் இன்றி கட்டையாப்பு வீதி

யாழ்ப்பாணம்,டிசெ.12

குடமியன் பகுதியில் உள்ள கட்டையாப்பு வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

குடமியன், நாவற்காடு, மிருசுவில் வடக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கொடிகாமம் நகர்ப் பகுதிக்குச் செல்வதற்கு குறித்த வீதியை பிரதான வீதியாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்த முடியாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

வீதி சேதமடைந்து காணப்படுவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன், வியாபாரிகள், விற்பனைப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த வீதியை புணரமைத்து பொதுமக்களின் போக்குவரத்து இடர்பாட்டைத் தீர்க்குமாறு குடமியன் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-14)

### இலங்கை ஆயுதப்படைகளுக்கு பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும்



டில்லி, டிசெ.12

இலங்கை பாதுகாப்பு படையினருக்கு குறுகிய மற்றும் நீண்ட கால இரணுவப் பயிற்சிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் நேற்று முன்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் தவிர்ந்த பயிற்சிகள் இதனடிப்படையில் இலங்கை இராணுவத்தினருக்கு வழங்குவதாக, நாடாளுமன்றத்துக்கு அவர் எழுத்து மூலம் அறிவித்தார்.

இலங்கை உட்பட ஏனைய அயல் நாடுகளுக்கு இவ்வாறான இராணுவ உதவிகள் வழங்க்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (வ)

### மகாத்மா காந்தியின் காணொலி சீனாவில்

சீன அரசியல் பற்றிய சினிமாவில் இந்தியாவின் தேசத் தந்தை மகாத்மா காந்தி பற்றிய காட்சிகள் முதன்முதலாக இடம் பெற்றுள்ளன.

கம்யூனிஸ்ட் நாடான சீனாவில் 'பேக் டு 1942' என்ற பெயரில் அரசியல் திரைப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 1942 ஆம் ஆண்டு இராணுவத் தலைவராக இருந்த சியாங் கைஷெக்கின் நடவடிக்கைகள், அதன்பின்பு வந்த சீன கம்யூனிஸ்ட் தலைவர் மாவோ ஆகியோர் பற்றிய காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

சீனாவில் மாவோ செல்வாக்கு பெற்று பெரும் தலைவராக உருவானபோது, அவரது கம்யூனிஸ்ட் படைகள் சியாங்கை நாட் டில் இருந்து துரத்தின.

அதன்பின்னர் அவர் தைவானுக்கு தப்பிச் சென்றார். அதன்பின்பு தைவானில் சியாங்கும் அவரது மகனும் ஆட்சி நடத்தினர்.

சீனாவில் 1940 களில் வறுமை, பட்டினி, கலவரம், போர் ஏற்பட்டபோது ஹெனான் மாகாணத்தில் 3 லட்சம் பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதுபோன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண இராணுவ அதிகாரிகள் சிலர் சியாங்குக்கு யோசனை தெரிவித்துள்ளனர். இந்தியாவில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

அதற்குத் தீர்வு காண மகாத்மா காந்தி உண்ணாவிரதம் இருந்தார். அவருடைய பேச்சுக்கு மதிப்பளித்து இரு தரப்பினரும் போரை நிறுத்தினர்.

இதற்கு காந்தியின் அகிம்சைப் போராட்டம்தான் காரணம் என்று கூறியுள்ளனர். இதையடுத்து, இந்தியப் பயணம் மேற்கொள்ளவும், அப்போது காந்தியை சந்திக்க விரும்புவதாகவும் சியாங் தெரிவித்தார். இது போன்ற காட்சிகள் இந்த சினிமாவில் இடம்பெற்றுள்ளன.

சீன சினிமாவில் முதன் முறையாக இந்திய தலைவரைப் பற்றிய காட்சிகள் இடம்பெற்றுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. குறித்த திரைப் படத்துக்கு அரசும் ஆதரவு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

### இராமேஸ்வரம் மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் விரட்டி அடித்துள்ளனர். இதனால் மீனவர்கள் அனைவரும் கரை திரும்பி விட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன்தினம் காலை 516 விசைப்படகுகளில் 2500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கச்சதீவு அருகே மீன் பிடிக்கச் சென்றனர். அப்போது ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர், கற்கள் மற்றும் போத்தல் கொண்டு மீனவர்களைத் தாக்கியுள்ளனர். மேலும் மீனவர்களின் வலைகளை அறுத்து எறிந்துள்ளனர். (வ)

### பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் கலைவிழா

சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் கலை விழா எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி சிவன்கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைகழக புவியியல்துறை பேராசிரியர் ந.கோபாலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மாரட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம், யாழ்.பிராந்திய பல் வைத்தியர் ச.பாலகுமார், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சின்னத்துரை, முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா, யாழ்.சிறுவர் நீதிமன்ற நிலையப் பொறுப்பு நன்னடத்தை அலுவலர் சி.சிவகரன், சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட பிரதிச் செயலாளர் மருத்துவர் லயன் சி.அருளானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிலையத்தில் கற்று அடுத்த வருடம் பாடசாலைகளில் தரம் 1 இல் இணையவுள்ள 48 மாணவர்கள் கௌரவிப்பும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-9)

### உள்ளூராட்சிசபை உத்தியோகத்தரது விடுமுறைகள் ரத்து

யாழ்ப்பாணம்,டிசெ.12

வடமாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் அனைத்து தர உத்தியோகத்தர்களின் விடுமுறைகளும் இந்த வருட இறுதிவரை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் இதனை அறிவித்துள்ளார்.

வருட இறுதி வேலைகள் மேற்கொள்வதற்கும் நிதியாண்டு வேலைகளை முடிவுறுத்தும் வகையிலும் உத்தியோகத்தர்களின் விடுமுறைகளை இரத்துச் செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

இதேவேளை, பயிற்சி நெறிகளை மேற்கொள்வோர் பயிற்சியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு கடமை விடுமுறை வழங்கலாம் எனவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம-9)

### சுவிஸ் நாட்டிலும் அகதித் தஞ்சம் மறுப்பு தமிழர்கள் பலர் பொலிஸாரால் கைது

சுவிஸ் நாட்டில் அகதி கோரிக்கை நிராகரிக்கப்பட்ட மூன்று தமிழர்கள் கடந்த வியாழக்கிழமையன்று அதிகாலை அவர்களது வீட்டில் வைத்து பொலிஸ்ாரால் அழைத்துச்செல்லப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதே போன்று அகதி தஞ்சம் மறுக்கப்பட்ட தமிழர்கள் பலர் சுவிஸ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைத்துள்ளதாக மேலும் தெரியவருவதோடு, இவ்வாறு தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்கள் சுயமாகவே நாட்டிற்கு திரும்பும் விதமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளது.

பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளால் திருப்பி அனுப்பப்படும் அகதிகள் தொடர்பான செய்திகள் அவ்வப்போது வெளிவருகின்ற போதும் சுவிஸ் அரசாங்கத்தாலும் பல தமிழர்கள் கடந்த சில மாதங்களாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இதேபோன்று தற்போதும் பல நூறு தமிழர்கள் வதிவிட உரிமை மறுக்கப்பட்டு முகாம்களில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். (3)

### டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

இலங்கைதிறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் எதிர் வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். பிராந்திய அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (ம-14)

### இந்திய மீனவர்கள் 40 பேர் விடுதலை

திருகோணமலை,டிசெ.12

இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசித்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 40 இந்திய மீனவர்களும் நேற்றுமுன்தினம் திருகோணமலை நீதிவான் ஏ.எம்.எம்.அஸ்கர் முன்னிலையில் முன்னிலைபடுத்தப்பட்ட பின்னர் நிபந்தனையற்ற பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இனிமேல் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என நீதிவான் எச்சரித்து அவர்களை விடுதலை செய்தார்.

கடந்த 4 ஆம் திகதி கைது செய்யப்பட்ட குறித்த மீனவர்களை, அவர்களின் படகுகள் உள்ளிட்ட ஏனைய உபகரணங்களுடன் இலங்கை கடல் எல்லையில் இருந்து அனுப்பி வைக்குமாறு, நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (3)

Original HERO HONDA Pleasure




மேலும் விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது
~~199900/=~~
~~194900/=~~
190,000/= மட்டுமே

S.S மோட்டோர்ஸில் மட்டுமே

தொ ர்பு- 021 492 3685, 077 509 5469

(சி/2152)(9.14)

S.S. மோட்டோர்ஸ் இல. 154, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இந்துவுக்கு கிடைத்தது முதல் வெற்றி



யாழ்ப்பாணம்,டிசெ.12

பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் பிரிவு III இற்கான கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 7 இலக்குகளால் வெற்றியீட்டியுள்ளது.

இந்த வருடமே கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளுக்குள் காலடி எடுத்து வைத்த கிளிநொச்சி இந்துவுக்கு இதுவே முதலாவது வெற்றியாகப் பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தப் போட்டியில் வவுனியா கலைமகள் வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர்.

இதன் அடிப்படையில் தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடக் களம் இறங்கியது வவுனியா கலைமகள் வித்தியாலய அணி. ஆனால் சொந்த மைதானத்தில் தனது பந்துவீச்சுப் பலத்தை நிரூபித்தது கிளிநொச்சி இந்து. அந்த அணியின் டினேஸும், கபிராஜும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் போல, அனல் கக்கும் பந்துவீச்சில் இறங்கினர். அவர்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது வவுனியா கலைமகள் அணி. கண்மூடித் திறப்பதற்குள் அந்த அணி இலக்குளை இழந்தது. எப்படி அடித்த போதும் ஓட்ட எண்ணிக்கையும் உயரவில்லை. பந்துவீச்சில் மட்டுமல்லாது களத்தடுப்பிலும் தமது வித்தையைக் காட்ட கிளிநொச்சி இந்து அணி தவறவில்லை. இதனால் வவுனியா கலைமகள் அணி 27 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 27 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

அந்த அணி சார்பாக அதிகபட்ச தனிநபர் ஓட்டமாக சுஜிதரன் ஒரு பவுண்டரி அடங்கலாக 9 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையோர் மிகச்சொற்ப ஓட்டங்களுடனும் அநேகர் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் ஆட்டமிழந்திருந்தனர்.

பந்துவீச்சில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி சார்பில் வி.டினேஸ் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 4 ஓட்டங்களைக்கொடுத்து 5 இலக்குகளையும், கபிராஜ் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இதன் பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது வவுனியா கலைமகள் அணி. சொந்த மைதானத்தில் ஓட்டங்களை குவித்து மிகப்பெரிய வெற்றி இலக்கை நிர்ணயிக்கலாம் என்ற நினைப்பில் களமிறங்கியது கிளிநொச்சி இந்து அணி. ஆனால் அந்த நினைப்பை தவிடுபொடியாக்கி பந்துவீச்சில் தூள் பறத்தினர் கலைமகள் அணி வீரர்கள். குறிப்பாக அந்த அணியின் ஜெனுஷனும், அனோஷனும் அபாரமாகப் பந்துவீசி, எதிரணியின் இலக்குகளை கொய்தனர். இதனால் கிளிநொச்சி இந்துவின் துடுப்பாட்ட வீரர்களும் மைதானத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை. வருவதும், ஆட்டமிழந்து செல்வதுமாக அணி வகுப்பு நடத்திக்கொண்டிருந்தனர். பிறையாளனின் துடுப்பாட்டத்தின் உதவியால் அந்த அணி கலைமகள் அணியை விடவும் முன்னிலைபெற முடிந்தது. ஏனைய வீரர்கள் ஏமாற்றினர். இறுதியில் 24 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 36 ஓட்டங்களையே கிளிநொச்சி இந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் பெறமுடிந்தது.

இதில் எஸ்.பிறையாளன் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 21 ஓட்டங்களைத் தமது அணி சார்பில் பெற்ற அதிகூடிய தனிநபர் ஓட்டமாகப் பதிவு செய்தார்.

பந்துவீச்சில் வவுனியா கலைமகள் வித்தியாலய அணி சார்பில் ஜெனுஷன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 4 இலக்குகளையும் அனோஷன் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 3 இலக்குகளையும், சனிதரன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும், கபிஷன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய வவுனியா கலைமகள் வித்தியாலய அணி முன்னரைப் போல் இலக்குகளை அடுத்தடுத்து இழந்தபோதும் ஓட்டக்குவிப்பில் வேகத்தைக் காட்டியது. குறிப்பாக அந்த அணியின் சஞ்சிதரன் கிளிநொச்சி இந்துவின் பந்துகளை வெளுத்துக் கட்டினார். அவரின் அதிரடியால் கௌரவமான இலக்கை கலைமகள் அணி எட்டமுடிந்தது. இறுதியில் வவுனியா கலைமகள் வித்தியாலயம் 23 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் சஞ்சிதரன் 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 37 ஓட்டங்களையும், சஜித்தன் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 13 ஓட்டங்களையும், தனுஷன் ஒரு பவுண்டரி அடங்கலாக 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சார்பில் நிதர்சன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 4 இலக்குகளையும், டினேஸ் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

62 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 26 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து வெற்றிக்கோட்டைத் தொட்டது.

அந்த அணி சார்பில் பிறையாளன் ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டம் இழக்காமல் 23 ஓட்டங்களையும், கௌசிகன் 2 பவுண்டரிகள் அடங்கலாக 13 ஓட்டங்களையும், அனுஷன் ஒரு பவுண்டரி அடங்கலாக ஆட்டம் இழக்காமல் 6 ஓட்டங்களையும், கபில்ராஜ் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வவுனியா கலைமகள் வித்தியாலய அணி சார்பில் ஜெனுஷன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு இலக்கினையும், சுனேஷன் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.12

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் கழத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**மாலை 6 மணி**

ஈஸ்வரன் விளையாட்டுக் கழகம் எதிர் ஏ.பி.சி விளையாட்டுக் கழகம்

* * *

பிறிமா வெற்றிக் கிண்ணத்துக்காக மாகாணங்களுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு அணிகளுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை மாத்தளை பேர்னட் அளுத்விகாரை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

வடமாகாண அணி எதிர் தென்மாகாண அணி (ங-23)

## வலைப்பந்து இறுதிக்கு முன்னேறிய அணிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.12

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான வடமாகாண அமைச்சுகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்களில் பிரதம செயலர் கொத்தணி அணியும், உட்கட்டமைச்சு அணியும், வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரம் இந்த அரையிறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் பிரதம செயலர் கொத்தணி அணியை எதிர்த்துக் கல்வி அமைச்சு அணி மோதிக் கொண்டது.

இதில் பிரதம செயலர் கொத்தணி அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 18:10 என்ற புள்ளி அடிப்படையில் கல்வி அமைச்சு அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

இரண்டாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து உட்கட்டமைப்பு அமைச்சு அணி மோதிக்கொண்டது.

பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் இரு அணிகளும் மாறிமாறி புள்ளிகளைப் பெற்றவண்ணம் இருந்தன. இதனால் இறுதிவரை எந்த அணி வெல்லப்போகிறது என்பதை கணிக்கமுடியாமல் இருந்தது. ஆயினும் இறுதிக் கட்டத்தில் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்திய உட்கட்டமைப்பு அமைச்சு அணி புள்ளிகளை அதிரடியாகக் குவித்து முன்னிலை பெறத் தொடங்கியது. ஆட்ட நேர நிறைவில் உட்கட்டமைப்பு அமைச்சு அணி 18:14 என்ற புள்ளி அடிப்படையில் உள்ளூராட்சி அமைச்சு அணியை வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ங-23)

## வென்றது '786'

யாழ்ப்பாணம், டிசெ.12

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும், முன்னாள் வீரர்களான சாந்தன் , யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் 11பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

இதில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் '786' விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியும், '786' விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன. அசத்தலாக ஆடிய '786' விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (ங-23)

## மரதன் ஓட்டம் வெள்ளியன்று

யாழ்ப்பாணம்,டிசெ.12

உள்ளூராட்சி வாரத்தையொட்டி ஊர்காவற்றுறை பிரதேச சபை நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேசசபை தலைமை அலுவலக முன்றலில் இந்த மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீரர்களும்,வீராங்கனைகளும் தமது பதிவுகளை ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ங-23)



ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான வட மாகாண அமைச்சு அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்ட கல்வி அமைச்சு அணியினர், விருந்தினர்களுடன். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்புச் சம்பியன்கள் நாங்கள்தான்

## மீண்டும் நிருபித்த கரீபியன்கள்



பங்களாதேஷ் அணிக்கு எதிரான 'ரி-20' ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


பங்களாதேஷ் சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரே ஒரு சர்வதேச 'ரி-20' ஆட்டத்தில் விளையாடியது. நேற்றுமுன்தினம் டாக்காவில் நடந்த இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் டரன் சமி, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு கிறிஸ் கெய்ல் (6) ஏமாற்றினார். மற்றொரு தொடக்க வீரர் டுவைன் ஸ்மித் (24) சோபிக்கவில்லை. பின்னர் இணைந்த சாமுவேல்ஸ், டரன் பிராவோ ஜோடி பொறுப்பாக ஆடியது. பங்களாதேஷ் பந்துவீச்சை வெளுத்துவாங்கிய சாமுவேல்ஸ் அரைசதம் அடித்தார். மூன்றாவது இலக்குக்கு 66 ஓட்டங்கள் சேர்த்த போது பிராவோ (41) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பொலார்ட் (15) நிலைக்கவில்லை.

மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளுக்கு 197 ஓட்டங்களைக் குவித்தது. சாமுவேல்ஸ் 43 பந்துகளில் 85 ஓட்டங்கள் (9 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள்), சிம்மன்ஸ் (18) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்து வீச்சில் பங்களாதேஷ் சார்பில் ஹுசைன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

சவாலான இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு அனாமுல் ஹக், தமிம் இக்பால் ஜோடி சுமாரான தொடக்கம் கொடுத்தது. முதல் இலக்குக்கு 47 ஓட்டங்கள் சேர்த்த போது ஹக் (22) ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த தமிம் இக்பால், மஹமதுல்லா ஜோடி பொறுப்பாக ஆடியது. மேற்கிந்தியத்தீவுகளின் பந்துவீச்சை பதம்பார்த்த இவர்கள் இருவரும் அரைசதம் அடித்தனர். கடைசி பந்துப் பரிமாற்றத்தில் 37 ஓட்டங்கள் தேவைப்பட்டநிலையில் 18 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த பங்களாதேஷ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்குக்கு 179 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது. தமிம் இக்பால் (88), மஹமதுல்லா (64) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை மேற்கிந்தியத்தீவுகளின் சாமுவேல்ஸ் பெற்றார். (5)

# தொடர் தோல்வியால் இந்திய வீரர்கள் வருந்தவில்லை



இந்திய அணியின் அண்மைக்கால தோல்விகளையடுத்து இந்திய வீரர்கள் மீதான விமர்சனங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்திய வீரர்களின் மனப்பாங்கு சரியான வகையில் காணப்படவில்லை என்று இந்திய அணியின் முன்னாள் தலைவரும், துடுப்பாட்ட ஜாம்பவானுமாகிய சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி 7 இலக்குகளால் தோல்வியடைந்துள்ளதோடு, 4 போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்ற போதிலும், அடுத்த 2 போட்டிகளிலும் தோல்வியடைந்து 1-2 என்ற கணக்கில் பின்னிலையில் காணப்படுகிறது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள சுனில் கவாஸ்கர், தன்னைப் பொறுத்தவரை பிரதம தேர்வாளர் சன்டிப் பட்டில் இந்திய அணியைச் சந்தித்து வீரர்களுடன் கலந்துரையாடியிருக்க வேண்டும் எனவும், மோசமான ஆட்டப் பிரயோகங்களின் காரணமாகவே அவர்கள் ஆட்டமிழந்தார்கள் என்பதை நினைவுபடுத்த வேண்டும் எனவும், அத்தோடு பந்துவீச்சாளர்களுடனும் கலந்துரையாட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியுடனான தோல்வி இந்திய வீரர்களைக் கடுமையாகக் காயப்படுத்தியிருக்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், ஆனால் கவலைதரும் விடயமாக, அவர்கள் சிரித்தவாறு அங்குமிங்கும் சென்றதையும், மகிழ்ச்சியாக உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்ததையும் காணமுடிந்ததாகவும், எதுவும் நடக்காததுபோல் அவர்கள் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த மனப்பாங்கு மிகப்பிழையானது எனவும் அவர் தெரிவித்தார். (5)

# தனியொரு பந்துவீச்சாளரை நம்பியில்லை இலங்கை



இலங்கை அணியின் பந்துவீச்சு வரிசைக்கு ரங்கன ஹேரத் மிக முக்கியமான வீரராகக் காணப்படுகின்ற போதிலும் அவரை மாத்திரம் நம்பி இலங்கை அணியின் பந்துவீச்சு வியூகங்கள் காணப்படவில்லை என்று இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போஸ்ட் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு வைத்து 3 டெஸ்ட் போட்டிகளிலும், 5 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளிலும், 2 'ரி-20' சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபெறவுள்ளது.

இந்தத் தொடரில் இலங்கை அணியின் பிரதான பந்துவீச்சாளராக சுழற்பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத்தே கருதப்படுகிறார். அவர் இந்த ஆண்டில் 55 'டெஸ்ட்' இலக்குகளை வீழ்த்தியுள்ளதோடு, அண்மையில் நடைபெற்று முடிந்த நியூசிலாந்துக்கெதிரான தொடரின் தொடர் நாயகனாகவும் தெரிவாகியிருந்தார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த கிரஹம் போஸ்ட், இலங்கை அணியின் பந்துவீச்சு அணி இணைந்து செயற்பட வேண்டியிருக்கும் எனத் தாங்கள் கருதுவதாகத் தெரிவித்தார். இலங்கை அணியின் பந்துவீச்சு எந்தவொரு தனி நபரையும் முழுமையாகச் சார்ந்திருக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

ரங்கன ஹேரத் இந்த ஆண்டில் மிகச் சிறப்பாகப் பந்து வீசியிருந்தார் எனவும், இந்த ஆண்டில் அதிக வெற்றிகரமானவராகக் காணப்பட்டார் எனவும் அவர் இலங்கை அணியின் பந்துவீச்சில் முக்கியமானவராகக் காணப்படுகிறார் எனவும் போஸ்ட் தெரிவித்தார்.

எனினும் அவரைத் தாண்டி இலங்கை அணியின் ஏனைய பந்துவீச்சாளர்களும் இணைந்து செயற்பட வேண்டியிருக்கும் எனவும் போஸ்ட் தெரிவித்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சுத் திட்டங்கள் தனியான ஒரு பந்துவீச்சாளரை மையப்படுத்தியிருக்காது எனத் தெரிவித்த அவர், பந்துவீச்சுத் திட்டங்கள் அனைத்தும் [illegible] காணப்படும் எனத் தெரிவித்தார். (5)

# காசு வந்தது ஆட்டம் போனது

## இந்திய வீரர்கள் மீது டிராவிட் பாய்ச்சல்



கொல்கத்தா டெஸ்டில் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் சரணடைந்த இந்திய வீரர்களை கடுமையாக விமர்சித்துள்ளார் டிராவிட்.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் தற்போது நடக்கிறது. முதல் மூன்று டெஸ்ட் போட்டி முடிவில், இந்திய அணி 1-2 என்று பின்தங்கியுள்ளது. சொந்தமண்ணில் இந்திய அணியின் தோல்வி குறித்து இந்திய அணி முன்னாள் வீரர் டிராவிட் கூறியது:

மும்பை டெஸ்டில் வீழ்ந்த இந்திய அணி, கொல்கத்தாவில் எதிர்ப்பு இன்றி சரணடைந்தது. வீரர்களின் திறமை குறித்து மக்கள் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர். அவர்களுக்கு இதெல்லாம் குறித்து கவலையில்லை. ஐ.பி.எல்., தொடர் மூலம் அதிகளவு வருமானம் கிடைக்கிறது என்று பேசத் தொடங்கி விட்டனர். உண்மையில் வீரர்களிடம் திறமை ஆற்றல் இல்லை. இது தான் எனது பெரிய கவலையாக உள்ளது.

இதற்கு முக்கிய காரணம், உள்ளூர் போட்டியின் தரம் போதியளவு இல்லை. சர்வதேச கிரிக்கெட்டுக்கு வரும் போது அவர்களால் சிறப்பாக ஜொலிக்க முடியவில்லை.

'ஏ' அணிகளை அதிகமாக வெளிநாடு அனுப்ப வேண்டும். அக்கடமி முறையை கொண்டு வர வேண்டும்.

இங்கிலாந்து அணியின் அக்கடமி அணிகள், ஒவ்வொரு குளிர் காலத்திலும், பல நாடுகளுக்குச் சென்று விளையாடுகின்றனர். இதுதான் அந்த அணியின் வெற்றிக்குக் காரணம்.

இந்திய அணியின் சமீபத்திய தோல்வி பலரையும் வெறுப்படையச் செய்துள்ளது. தோற்ற விதம் அப்படி. மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் இந்தியா தான் நாணயச்சுழற்சியில் வென்றது. மும்பை, இந்திய வீரர்களுக்கு சாதகமாக இருந்தது. கொல்கத்தா துடுப்பாட்டத்துக்கு உதவியது. அப்படி இருந்தும் இந்திய வீரர்கள் சிறிதளவு கூடப் போராடவில்லை.

நமது பலம், சுழற் பந்து வீச்சு தான். அஷ்வின், பிரக்யான் ஓஜா இணைந்து எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியவில்லை. களத்தடுப்பிலும் இந்திய அணி மோசமாக உள்ளது. வீரர்களின் உடற் தகுதி ஏமாற்றம் தரும் வகையில் உள்ளது. இதற்கு மன்னிப்பே கிடையாது. களத்தடுப்பில் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

சச்சின், கங்குலி, கும்ளே, சேவாக் இணைந்திருந்த போது, பல்வேறு வெற்றிகளைப் பெற்றது. கங்குலி, கும்ளே ஓய்வுக்குப் பின், இது போன்ற வீரர்கள் கொண்ட அணியாக மாற்றும் முயற்சி இப்போது நடக்கிறது. இதற்கு திறமை, நுட்பம், டெஸ்ட் போட்டியில் விளையாட வேண்டும் என்ற இயற்கையான விருப்பம் உள்ளவர்களைச் சேர்க்க வேண்டும்.

அடுத்து நாக்புரில் என்ன நடக்கும் என்று தெரியாது. ஒருவேளை தொடர்ந்து வெற்றிகள் பெற்று, மீண்டும் முதலிடத்தை அடைய விரும்பினால், இந்தத் தொடரின் மூலம் இந்திய அணி பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.

# மெஸ்சி புதிய சாதனை



ஆர்ஜென்டீனா அணியின் முன்னணி உதைபந்து வீரரான லயனல் மெஸ்சி, பார்சிலோனா கழக அணிக்காக விளையாடி வருகிறார்.

நேற்று முன்தினம் நடந்த ரியல்பெடிஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் மெஸ்சி 2 கோல்கள் அடித்தார். இதன் மூலம் அவர் புதிய சாதனை படைத்தார்.


2 கோல்கள் அடித்ததன் மூலம் மெஸ்சி இந்த ஆண்டில் மொத்தம் 86 கோல்கள் அடித்துள்ளார்.

இதற்கு முன்பு ஜேர்மனி வீரர் ஜெரால்ட் முல்லர் 1972 ஆம் ஆண்டு 85 கோல்கள் அடித்ததே சாதனையாக இருந்தது.

மெஸ்சி பார்சிலோனா அணிக்காக ஆடி 74 கோல்களையும், ஆர்ஜென்டீனா அணிக்காக 12 கோல்களையும் இந்த ஆண்டு அடித்துள்ளார். இதன் மூலம் இந்த ஆண்டுக்கான சிறந்த உதைபந்தாட்ட வீரர் விருதை நான்காவது முறையாக வெல்வதற்கு உறுதி செய்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனி நீக்கப்பட வேண்டும்



இந்திய டெஸ்ட் அணியின் தலைமைத்துவத்திலிருந்தும், அணியிலிருந்தும் மகேந்திரசிங் டோனி நீக்கப்பட வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் தேர்வாளர் மொஹிந்தர் அமர்நாத் தெரிவித்துள்ளார். அணியில் இடம்பெறுவதற்கான பெறுபேறுகளை டோனி வெளிப்படுத்தியிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் டோனிக்கு எதிரானவனல்லன் எனத் தெரிவித்த மொஹிந்தர் அமர்நாத், ஆனால் இந்திய அணி நீண்ட கால நோக்கில் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார். வீரர்களின் தற்போதைய பெறுபேறுகள் ஆராயப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர், கடந்த காலப் பெறுபேறுகள் கருத்திற் கொள்ளப்படக்கூடாது எனவும் தெரிவித்தார்.

மகேந்திரசிங் டோனி - டெஸ்ட் அணியில் இடமொன்றைப் பெற முடியாது எனத் தெரிவித்த அவர், கடந்த ஒரு வருடத்தில் டோனி - டெஸ்ட் போட்டியில் என்ன செய்திருக்கிறார் எனவும் கேள்வியெழுப்பினார்.

அத்தோடு டோனியைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு தேர்வாளர்களுக்கு தைரியம் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு வகையான போட்டிகளுக்குமான அணித்தலைமைக்கும் ஒவ்வொருவரை அணித்தலைவராக நியமிப்பதில் எந்தத் தீமைகளும் இல்லையெனத் தெரிவித்த மொஹிந்தர் அமர்நாத், மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியில் ஹோக்லியில் பெறுபேறுகள் தொடர்பாகத் தான் மிகவும் ஈர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததோடு, டெஸ்ட் போட்டியில் டோனிக்குப் பதிலாக கௌதம் கம்பீர் அணித்தலைவராக நியமிக்கப்படலாம் எனத் தெரிவித்தார்.

இந்தியத் தேர்வாளராக அண்மைக்காலம் வரை பதவி வகித்த மொஹிந்தர் அமர்நாத், டோனி உட்பட சில சிரேஷ்ட வீரர்களுடனும், சில தேர்வாளர்களுடனும் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் செப்டெம்பரில் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். (5)

# அப்ரிடி அதிரடி நீக்கம்



இந்தியா சென்று இந்த பாகிஸ்தான் அணி அறி
இதில் பாகிஸ்தானின் இடம்பெறவில்லை.
இடம்பெற்றுள்ளார்.
ஒ ரு நா ள்
யு னி ஸ் கா ன்
பந்து வீச்சாளர்
சீமா, இடது கை
ஆ கி யோ ர்
ஒ ரு நா ள்
ந சீ ர்
யு னி ஸ்
க ம் ர ன்

உ ம ர்

மாதம் ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ள விக்கப்பட்டுள்ளது
முக்கிய சகலதுறை வீரர் அப்ரிடி ஆனால் 'ரி-20' கிரிக்கெட் அணியில் அப்ரிடி

அணியில் அனுபவமிக்க நடுக்கள வீரர் மீண்டும் இடம்பெற்றுள்ளார். இடது கை சுழற் அப்துர் ரஹ்மான், வேகப்பந்து வீச்சாளர் ஜாஸ் வேகப்பந்து வீச்சாளர் சொகைல் தன்வீர், மலிக் ஒருநாள் அனியில் இடம்பெறவில்லை.

அணி வீரர்கள் விவரம்:
ஜம்ஷெட், மொகமட் ஹபீஸ், அசார் அலி, கான், மிஸ்பா உல் ஹக், ஹரிஸ் சொஹைல், அக்மல், சயிட் அஜ்மல், வஹாப் ரியாஸ், ஜுனைத் கான், உமர் குல், இம்ரான் பர்ஹத், அக்மல், அன்வர் அலி, சுல்பிகர் பாபர்.

'ரி-20' அணி வீரர்கள் விவரம்:
மொகமட் ஹபீஸ் (அணித்தலைவர்), நசீர் ஜம்ஷெட், கம்ரன் அக்மல், உமர் அக்மல், உமர் அமின், மலிக், அப்ரிடி, சயிட் அஜ்மல், மொகமட் இர்பான், ஜுனைத் கான், சொகைல் தன்வீர், உமர் குல், ஆசாத் அலி, சுல்பிகர் பாபர், அஹ்மெட் ஷேஜாத். (5)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayam.com
0215671111

COMPUTER SALE
HP Computer 3.0 GHZ, 1GB Ram, 80GB HDD, LCD Monitor, DVD Rom, 3L Key, Mouse & PAD, Speaker.
FREE
ஒரு வருட உத்தரவாதம்
WEB Cam / Head Phone / Cover / 8GB Pen
St.Antony's.com
187,K.K.S. Road Jaffna.
0212224865 / 0750698608
(ச/1904)(3.14)

பணிநிலை வெற்றிடம்
இயக்கச்சியில் அமைந்துள்ள பூச்செடி விற்பனை நிலையத்துக்கு கடின உழைப்பை விரும்பும் பெண்கள் தேவை. தூர இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடம், உணவு வழங்கப்படும் மாதம் 10000 ரூபா சம்பளம் வழங்கப்படும்
தொடர்பு :0779684284
24358(14)

Ranjanas CERAMIC
சர்வதேச தரத்தில்...
சாதாரண விலையில்...
X-MAS
வருட இறுதி விற்பனைத் தள்ளுபடி
Sale
Don't think just buy
SPECIAL OFFER
The metro engineering (pvt) ltd
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
#05,Stanley Road, Jaffna. 021 222 4777/021 222 4888
#05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111

மானிப்பாய் மற்றும் நெல்லியடியில் ஆரம்பம்!!
Diploma in Mobile Phone Repairing
(Hardware and Software Repairing)
சகலவகையான கைத்தொலை பேசிகளையும் மிகக்குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி!!!
Apple iphone unlock செய்யும் முறையும் கற்பிக்கப்படும்
By :- Selvathashan, M.Sc
மேலதிக விவரங்களுக்கு :-
UNI - ICT Education (PVT) LTD
Jaffna Road, Manipay.
T.P :- 021 321 6433 / 0777 110 862

நத்தார் பண்டிகையை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
கிறிஸ்தவ புத்தகங்கள், வாக்குத்தத்தங்கள், பாட்டு புத்தகங்கள், CD, DVD, வேதாகமங்கள் கிறிஸ்மஸ் சோடினைகள் மற்றும் பாடசாலை, சிறுவர் பாடசாலை உபகரணங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பான்சி பொருள்கள், புத்தகங்களை 10 % இருந்து 50 % வரையிலான கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.
(12.12.2012 தொடக்கம் 31.12.2012 வரை)
WORD OF LIFE - ஜீவவார்த்தை
137, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 077 6365737, 078 6143410

மொடேண் மற்ஸ் அக்கடமி
சண்டிலிப்பாய்
விரைவில் A/L 2015
A/L 2013,2014 கலைப்பிரிவு
எமது வழமையான ஆசிரியர் குழாம்
தமிழ் - பத்மநாதன்
அரசியல் - கோகுலன்
அளவையியல் - E.S பவன்
புவியியல் - ஆனந்தன்
இந்துநாகரிகம் - ஸ்ரீஸ்
வரலாறு - K.S சந்திரன்
நா.அரங்கியல் - றமேஸ்
நிர்வாகி: B.குகதாசன்

விற்பனைக்கு
மாருதி கார் 800CC, சாப்பாட்டு கண்ணாடி மேசை, கறுப்பு Pleasure விற்பனைக்கு உண்டு.
175,பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.
(25635)(14)


கண்ணீர் அஞ்சலி



கல்வி மாணி பட்டக்கற்கைநெறி - 2011/2013
ஆசிரிய பயிலுநரும், கிளி / உருத்திரபுரம்
மகாவித்தியாலய ஆசிரியையுமான
திருமதி கண்ணதாசன் - ஜெயராணி
அவர்களின் அன்புக்கணவர்
பரஞ்சோதி கண்ணதாசன்
(வர்த்தகர் - கிளிநொச்சி)

அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முகவரி : 136, D - 10
உருத்திரபுரம், கிளிநொச்சி.

இணைப்பாளர், பிரதி இணைப்பாளர்கள்,
விரிவுரையாளர்கள்,
ஆசிரியர் பயிலுநர்கள்,
கல்விமாணிப்பட்டக்கற்கை நெறி பிராந்திய நிலையம், கிளிநொச்சி.

(21588)(8.14)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
Ms office, Hardware, Networking, DTP, Accounting, Multimedia, Web Design,Singalam(Course fee Free 5 Months)
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் ஆரம்பத்தில் இருந்து கற்கலாம் பூரண அறிவிற்கான உத்தரவாதம்
மேலதிக விபரங்களுக்கு தேடில்
Management Computer and Accounting Institute
243, Adiyapatham Road,
Kalviyankadu Junction
12 Years Experience
Qualified Lectures panel
தூரஇடத்து மாணவர்களும் எமது நிறுவனத்தில் கற்க, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பஸ் வழிப்பாதை (750/751) ஊடாக வரலாம்
Discount

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

காற்று
வீசவில்லையா?
துடுப்பு போடு.
-போலந்து
பழமொழி-

# புதன் பொய்கை A

உதயன் டிசெம்பர் 12 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# வாழ்க்கையெனும் ஓடம் வழங்குகின்ற பாடம்



■ மணிமேகலை

வாழ்க்கைக்கான பாடம் வகுப்பறைக்கு வெளியே தான் இருக்கிறது என்று சொல்வார்கள். அதனை யாரும் சொல்லித் தருவதில்லை. நாமே சமூகம், சூழல், குடும்பம், நண்பர்கள், அனுபவங்கள் வாயிலாகக் கற்றுக் கொள்கிறோம். அதனால் தான் நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் என்றனர். நல்ல நண்பர் வட்டம் வேண்டும் என்றனர். குடும்பங்களுக்குள் வன்முறை கூடா தென்றனர். அறம், பண்பாடு, சமயங்கள் தோன்றின. சட்டங்கள், தண்டனை முறைகள் பிறந்தன. ஒழுங்கும் விதியும் அமுல்படுத்தப்பட்டன.

புலம் பெயர்ந்த பின்பும், சமூக ஊடாட்டத்தின் போதும், வாழ்க்கை தந்த அனுபவங்களின் போதும் நாம் கண்டு கொண்டதென்னவென்றால் ஒருவர் தன் பிள்ளையைத் தன் காலில் தான் நிற்கக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்பது தான். அது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி; பண முள்ளவராக இருந்தாலும் சரி ஏழையாக இருந்தாலும் சரி; கல்வியறிவுள்ளவராக இருந்தாலும் சரி இல்லாதவராக இருந்தாலும் சரி; மன உறுதியும் பிரச்சினைகளை எதிர் கொள்ளும் வலுவும் உள்ள பிள்ளையாக; தனக்கு தன் தேவைகள் விருப்பங்கள் இவற்றை இனங்கண்டு கொள்ளத் தக்க பிள்ளையாக - அதில் தெளிவான தீர்மானம் உள்ள பிள்ளையாக; இலக்கினைக் கண்டடைந்து அதை நோக்கி பயணிக்கும் திடமுள்ளவனாக; உறுதியாக பிரச்சினைகளை எதிர் கொள்ளும் தீரம் மிக்கவனாக; வெற்றியில் நிதானமாய் இருக்கத் தக்கவனாக; தோல்வியில் துவண்டு போகாதவனாக; அப்பிள்ளை இருக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

சமூகத்தையும், வாழ்க்கையின் சுக துக்கங்களையும் பிள்ளைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும்; மாற்றம் ஒன்றே மாறாதது என்ற உண்மையையும் பிறர் கையில் எதற்கும் தங்கியிருக்காத தன்மையையும் தன்னைப் புரிந்து கொள்ளும் தெளிவையும் அதே நேரம் அன்பு, மனிதப் பண்பு, எளிமை, சினேகிதத் துவம், சேவை போன்ற பண்புகளையும், பிள்ளைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். தவறுகளில் இருந்து எழுந்து நடக்கும் வித்தை தெரிந்தவனாக பிள்ளை வளர வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒவ்வொரு தனித்திறமை இருக்கிறது. அதனை அடையாளம் கண்டு அதில் அவன் தன் ஆற்றலைக் காட்ட பெற்றோர் உதவ வேண்டும். புலம் பெயர்ந்த நாடுகளில் பாடசாலையைத் தவிர விளையாட்டு, மியூசிக், நீச்சல், கலை என பிள்ளைகள் பிள்ளைகளாக இல்லாமல் அவர்களது நேரங்கள் பெற்றோரால் களவாடப்படுகின்றன. பெற்றோரின் ஆசைகள் எல்லாம் பிள்ளைகளில் திணிக்கப்படுகின்றன. அதிலும் ஒரு பிள்ளையாக மட்டும் இருந்து விட்டால் நிலைமை இன்னும் மோசமாகி விடும்.


தன் பிள்ளை எல்லாவற்றிலும் திறமை உள்ளவனாக வர வேண்டும் என்று பெற்றோர் ஆசைப்படுவது இயல்பு தான். ஆனால் பிள்ளை பிள்ளையாக இருக்க வேண்டும் என்பதும் கவனிக்கப்பட வேண்டியது முக்கியம். கல்வி கற்கும் இயந்திரமாக பெற்றோர் ஆட்டி வைக்கும் பொம்மையாக பெற்றோரின் ஆசைகளின் வடிகாலாக இருப்பதால் பிள்ளை வளர்ந்த பின் பணம் கொட்டும் இயந்திரமாக மட்டுமே இருப்பான். மகிழ்ச்சியை அவன் பணத்தில் தான் காண வேண்டியிருக்கும்.

பிள்ளைக்கு இல்லாத ஒரு கனவுலகத்தை சிருஷ்டித்துக் காட்டும் பெற்றோரும் உள்ளார்கள். பணத்தின் மதிப்பு, தம் தேவைகள் எது என்பது பற்றிய தெளிவு, சிக்கனம் இவைகளும் கவனிக்கப்பட வேண்டியவை. தமக்குரிய கஷ்டங்களை மறைத்து தம் தகுதிக்கு மீறி பிள்ளைக்கு வேண்டுவனவற்றை எல்லாம் கொடுத்து வாழ்க்கையைப் பற்றிய தவறான முன்னுதாரணமாக பெற்றோர்கள் ஆகிவிடுவதுமுண்டு. இதனால் திடீரென ஒரு சரிவு வரும் போது அதனைப் பிள்ளையால் எதிர் கொள்ள முடியாது போய் விடக் கூடும். சில வேளை பணமில்லா விட்டாலும் படம் பார்க்கப் போக வேண்டும் என்பது முக்கியமாகத் தோன்றக் கூடும். ஒரு வேளை உணவை விட ஒரு பிள்ளைக்கு புது உடுப்பு கூடுதலான தேவையாக இருக்கக் கூடும்.. அதனால் இயல்பாக இருப்பதும், அதனைப் பிள்ளைக்கு தெளிவாக காட்டுதலும் கூட முக்கியமானது தான். கனவுகளைக் காணட்டும் ஆனால் யதார்த் தத்தில் இருக் கட்டும். Think globaly; Act localy.

கலையோ விளையாட்டோ ஏதாவது ஒன்றில் - பிள்ளைக்கு மட்டும் பிடித்தமானது எது என்பதைக் கண்டு அதில் மட்டும் அவனை ஈடுபடுத்தினால் பிள்ளைக்கு நேரம் மிச்சமாவதுடன் முழுவதுமாக ஒரு விடயத்தில் தன் ஈடுபாட்டைக் காட்டவும் அது ஏதுவாக இருக்கும். சில வேளை தனிமையும் கலை மூலமான வெளிப்பாடுகளும் சிறந்த மன வலி நிவாரணி என்பதைப் பெற்றோர் அறிவது நலம். குடும்பத்துக்கான நேரமும் அதே முக்கியத்துவத்தோடு உணரப்பட வேண்டியது தான்.

'கல்வி, வேலை, வீடு, குடும்பம் எல்லாம் இருந்தும் மனப்பலம் இல்லாமையும் பிரச்சினைகளை எதிர் கொள்ளும் பலமின்மையும் மனிதனை இறப்புக்குத் தூண்டி விடும்.

இங்கு கல்வி இருந்து பயனென்ன? கல்விக்கூடங்கள் எதனை நமக்குக் கற்றுத் தருகின்றன? அங்கு விடுபட்ட விடயங்களான மனஉறுதி, பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வலு, சமூக அழுத்தங்கள், சமூகத்தின் இயல்புகள், தன்னை அறிதல், தன் மீது நம்பிக்கை கொள்ளுதல், சுயமரியாதை, மகிழ்ச்சியின் பாதை, வாழ்க்கையின் மாற்றங்கள் வளர்ச்சிகள் சிதைவுகள் -போன்ற இயல்புகளை எதிர் கொள்ளுதல் எவ்வாறு, போன்ற விடயங்களை நாம் எங்கிருந்து கற்றுக்கொள்ளப் போகிறோம்? விடுபட்டிருக்கின்ற இத்தகைய விடயங்களைப் பிள்ளைகளுக்கு யார் சொல்லிக் கொடுக்கப் போகிறார்கள்? இதில் இருக்கின்ற ஓர் ஆபத்து என்னவென்றால் சமூகத்தில் இருக்கின்ற பண்பாட்டுக் கோட்பாடுகளும், பெண்கள் மீதான அழுத்தங்களும், பொருளாதாரம் ஒருவரிடம் மட்டும் குவிந்திருப்பதும் மக்களிடம் சிலவற்றுக்கெதிராக எதிர்த்து நிற்கும் வலுவைக் கொடுக்கவில்லை.



தன்னம்பிக்கையை வளர்க்க அவை உதவவில்லை. அதனால் பலமிழந்தவர்களாக சமூக நீரோட்டத்தோடு அடித்துச் செல்லப்படுபவர்களாகவே பலர் உள்ளனர். வாழ்க்கையோடு சமரசத்தை ஏற்றுக் கொள்வதோடு அல்லது சகித்துக் கொள்வதோடு முடிந்து விடுகிறது.

மகிழ்ச்சியற்ற முகங்களுக்கு சமூகம் ஏற்றுக் கொள்ளத் தக்கதான முக மூடிகள் கச்சிதமாகப் பொருந்துகின்றன. வாழ்க்கை வண்ணமயமானது என்று சமூகத்துக்குக் காட்டுவதிலேயே காலம் கரைந்து விடுகிறது. மாற்றுக் கருத்துக்களை முன்வைக்கவும், எதிர்கொள்ளவும் யாரும் தயாராயில்லாமல் இருக்க கல்வியும் தன் பங்கை ஆற்றி இருக்கிறது.

ஆபிரகாம் லிங்கன் பாடசாலைக்கு தன் மகனை அனுப்பிய போது ஆசிரியருக்கு அவர் எழுதிய கடிதம் மிக முக்கியம் வாய்ந்ததென்றே தோன்றுகிறது. இதுதான் அவர் ஆசிரியருக்கு எழுதிய கடிதம்.

எவரும் முற்றிலும் நேர்மையானவர் அல்லர்; உண்மையானவர் அல்லர். இதை அவனுக்குச் சொல்லுங்கள்.

தோல்வியை ஏற்றுக் கொள்ளவும், வெற்றியைக் கொண்டாடவும் கற்றுக் கொடுங்கள்.

பொருமையிலிருந்து அவன் விலகியே இருக்கட்டும். மனம் விட்டுச் சிரிக்கும் இரகசியம் அவனுக்குத் தெரியட்டும்.

ஆடம்பரப் பேச்சுக்கு அடிமை ஆவது எளிது என்பதை அவன் சிறு வயதிலேயே அறியட்டும். புத்தகங்களின் விநோதங்களை அவனுக்கு உணர்த்துங்கள்.

இயற்கை விநோதங்களை அலசி ஆராய அவனுக்கு நேரம் கொடுங்கள். பிறரை ஏமாற்றுவதை விட, தோற்பது கண்ணியமானது என்பதைக் கற்றுக் கொடுங்கள்.

எத்தனை பேர் கூடி தவறு என்றாலும், சுயசிந்தனையில் நம்பிக்கை கொள்ளச் செய்யுங்கள்.

மென்மையானவர்களிடம் மென்மையாகவும், உறுதியானவர்களிடம் உறுதியாகவும் நடக்கக் கற்றுக் கொடுங்கள்.

துன்பத்தில் அவன் சிரிக்கட்டும். அத்துடன் கண்ணீர் விடுவது அவமானம் இல்லை என்பதை உணர்த்துங்கள்.

குற்றங்குறை கூறுபவர்களை அவன் அலட்சியப்படுத்தட்டும். அத்துடன் அளவுக்கு அதிக இனிமையுடன் பேசுபவரிடம் எச்சரிக்கையாகவும் இருக்கச் சொல்லிக் கொடுங்கள்.

உரக்கக்கத்தும் கூட்டத்திற்கு அவன் செவி சாயாமல் இருக்கட்டும். தன் மனதுக்கு 'சரி' என்று தோன்றுவதைத் துணிந்து நின்று போராடி நிறைவேற்ற அவனைப் பழக்குங்கள்.

அவனை மென்மையாக நடத்துங்கள். அதற்காகக் கட்டித் தழுவாதீர்கள். எப்போதும் எதிலும் ஆவல் மிக்கவனாக இருக்க அவனுக்குத் தைரியம் ஊட்டுங்கள். தொடர்ந்து தைரியசாலியாக இருக்க விடாமுயற்சியைக் கற்றுக் கொடுங்கள்.

தன்னம்பிக்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ளச் செய்யுங்கள். அப்போது அவன் மனித சமுதாயத்தின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவனாக இருப்பான்.

இவையெல்லாம் மிகப்பெரிய, கடினமான நடைமுறைகள்தான். ஆனால் உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். ஏனெனில் இனிமையான என் மகன் மிகவும் சிறியவன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீந்தும் குழந்தைகள்...





பிறந்து 9 மாதங்களேயான இரட்டை குழந்தைகள் இருவர் 25 மீற்றர் நீளமுடைய நீச்சல் தடாகத்தில் நீந்தும் காட்சி பலரை மெய்சிலிர்க்கச் செய்துள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த வில்லியம், ஜெலனிமா என்ற இரட்டையர்களே தமது அபார நீச்சல் திறமையைக் குழந்தைப் பருவத்திலிருந்தே காட்டி வருகின்றனர். குழந்தைகளின் தாயான கெரோலிடி (வயது 35), மற்றும் தந்தையான விக்டர் இருவரும் குழந்தைகளின் திறமைகளை வளர்ப்பதற்கு பல பிரயத்தனங்களை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விடுமுறைக்காக துருக்கிக்கு சென்றபோது, அங்கு நீச்சல் தடாகத்தில் இக்குழந்தைகளையும் வைத்துக்கொண்டு நீந்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். இதன்போதே தமது குழந்தைகளுக்கும் நீந்தும் திறமை குழந்தை பருவத்திலேயே இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். பின்னர் விடுமுறை முடிந்து பிரிட்டனுக்கு திரும்பிய பேற்றடி ஜோடி உள்ளூரில் உள்ள குழந்தைகளுக்கான நீச்சல் தடாகத்தில் தமது குழந்தைகளுக்கு நீச்சல் பயிற்சிகளை வழங்கியுள்ளனர். குழந்தைகள் முதலில் 5 மீற்றர் தூரத்தையே நீந்தினர். பின்பு 7 மீற்றர், பின் 12 மீற்றராக தமது நீச்சல் தூரத்தை அதிகரித்துக்கொண்டனர் என கெரோலிடி தெரிவித்துள்ளார்.


நவூளட் டுபரடு!தத்

# சிறந்த இடம் சுவிட்சர்லாந்து

ஒரு மனிதனின் ஆரோக்கியமிக்க நீண்ட ஆயுளைத் தீர்மானிக்கும் பல்வேறு காரணிகளில் 'நாடு' என்பது மிக முக்கியமானது. அமைதியான சூழலும், பொருளாதர வளர்ச்சியும் ஒரு மனிதன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் காரணிகளின் மிக முக்கியமானதாக காணப்படுகின்றன.
இந்த வகையில் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் பிறந்து வாழ்வதற்குரிய சிறந்த நாடாக சுவிட்சர்லாந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது.
அதேபோல் இலங்கை 63 ஆவது இடத்திலும் இந்தியா 66 ஆவது இடத்திலும் காணப்படுகின்றன.
எதிர்வரும் வருடத்தில் சுபீட்சமான, மன நிறைவான வாழ்க்யை வாழ்வதற்கு ஏற்ற சூழலைக் கொண்ட நாடு எது என்று ஆராயும் முயற்சியை பிரிட்டனின் பொருளாதார புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டுள்ளது.
மக்களின் மணநிறைவான கருத்துக்கள், மற்றும் நாடுகளின் வாழ்க்கை தரம் என்பவற்றை உள்ளடக்கி இந்த ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆய்வறிக்கையின் பிரகாரமே சுவிட்சர்லாந்து வாழ்வதற்கு ஏற்ற முதல் நாடாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்தில் பிறப்பவர்கள் மகிழ்ச்சிகரமானவர்களாகக் காணப்படுவதுடன் தரமான உடல் ஆரோக்கிய நிலையானது அவர்களது ஆயுளைத் தீர்மானிப்பதாகவும் சுகாதார மற்றும் பொது நிறுவனங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.
அதேபோல் ஸ்கெண்டிநேவியா நாடுகளான நோர்வே, சுவிடன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளும் சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற நாடுகளின் பட்டியலில் முதல் ஐந்து இடங்களைப் பிடித்துள்ளதாக அந்த ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.
புவியியல், குடியியல்; மற்று கலாசாரம், பொருளாதார நிலை உட்பட 11 விடயங்களைப் பிரதானப்படுத்தி இந்த ஆய்வறிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, நோர்வே, சுவீடன், டென்மார்க், சிங்கப்பூர்,



நியூசிலாந்து, நெதர்லாந்து, கனடா, ஹொங்கொங் ஆகிய நாடுகளே 2013 இல் சிறப்பாக வாழக்கூடிய முதல் 10 நாடுகளாகும். இதில் அமெரிக்கா 16 ஆவது இடத்திலும் பிரிட்டன் 20 ஆவது இடத்திலும், சீனா 49 ஆவது இடத்திலும் காணப்படுகின்றன.




# யானைக் கழிவிலிருந்து 'ஸ்பெஷல் கோப்பி' ஒரு கப் 4800 ரூபா

ஒரு கப் 30 யூரோவுக்கு விற்கப்படும் கோப்பியை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதென்ன ஸ்பெஷல் கோப்பி? யானையின் கழிவில் இருந்து தயாரிக்கப்படும் கோப்பி தான் அது. பிளாக் ஐவரி என்ற இந்தக் கோப்பியை தாய்லாந்தில் தயாரிக்கின்றனர். தாய்லாந்தின் சியாங்ராய் மாகாணத்தில் இந்நாட்டுடன் லாவோஸ், மியான்மர் நாட்டு எல்லைகள் சந்திக்கும் இடம் கோல்டன் டிரையாங்கிள். மலைப்பாங்கான பகுதி மூலிகைகளுக்கு பிரசித்தி பெற்ற இடம். இங்கு இத்தகைய கோப்பி தயாரிப்பதற்காக தனியாக யானைகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றுக்கு புல், வாழைப்பழம், கரும்பு ஆகியவற்றுடன் கோப்பி கொட்டைகளையும் உண்ணக் கொடுக்கின்றனர். அந்த கோப்பிக் கொட்டைகள் யானையின் வயிற்றில் 15 முதல் 30 மணிநேரம் வரை ஜீரணமாகிறது.

அப்போது உணவு நொதித்தல் காரணமாக அந்த கொட்டைகளில் சுவை கூடுகிறது. பின்னர், யானைச் சாணியில் செரிக்காமல் வெளியேறியிருக்கும் கோப்பிக் கொட்டைகள் சேகரிக்கப்படுகின்றன. 33 கிலோ கொட்டைகளை யானை உண்டால் ஒரு கிலோ கோப்பிக் கொட்டை மட்டுமே கிடைக்கும்.

இவ்வளவு குறைவாக கோப்பிக் கொட்டைகள் கிடைப்பதால் அதன் விலை மிக அதிகமாகிறது. இந்த கொட்டைகளை வறுத்து, அரைத்து தயாராவது தான் பிளாக் ஐவரி கோப்பி. இதன் விலை கிலோ 685 யூரோவாகும். இந்தக் கோப்பி வ க்கு [illegible] மாலைத்தீவு மற்றும் அபுதாபியில் உள்ள நட்சத்திர உ[illegible] 1 கப் 4800 ரூபாவாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்களின் உலகம்

வலையவன்

(கடந்தவாரத் தொடர்ச்சி....)

இராட்சத ஒக்டோபஸ்கள் 5 மீற்றர் வரை வளர்கின்றன. அதிகபட்ச எடை 34 கிலோ. பழங்கதைகளில் வருவது போல் இவை இராட்சதத் தன்மை கொண்டவையல்ல. மென்மையானவை. வெட்கி, அஞ்சி ஒதுங்குபவை. சில இராட்சதக் கணவாய் மீன்கள் சுமார் 20 மீற்றர் நீளமும் 1000 கிலோ எடையும் கொண்டவை.

முதுகு நாணற்ற கடல் இனங்களில் பெரியது இதுதான். கடலின் பாதாளங்களிலும் சில மீன்கள் வாழ்கின்றன. கஸ்க் ஈல் எனப்படும் மீனை 8,370 மீற்றர் ஆழமுள்ள போர்டோரிகோ கடற் பாதாளத்தில் பிடித்துள்ளனர். பாதாளக் கடலின் விசேஷம் என்ன? காரிருள், பிராணவாயு பற்றாக்குறை, உணவு பஞ்சம், உயர் அழுத்தம், கடும் குளிர் இவைதான் அங்குள்ள தனித்துவமான சூழல்.

கடலில் ஆழத்துக்குப் போகப் போக அழுத்தம் அதிகரிக்கும். காற்று மண்டலத்தின் அழுத்தம் கடல்மட்டத்தில் ஓர் அலகு என்று எடுத்துக் கொண்டால், பத்து மீற்றர் ஆழத்துக்கு ஓர் அலகு அழுத்தம் அதிகரிக்கும்.

எட்டாயிரம் மீற்றர் ஆழம் என்றால் எண்ணூறு மடங்கு அழுத்தம். மீன்கள் பொதுவாக புரதம் மிகுந்தவை. கொழுப்பு குறைந்தவை. ஆனால் மேற்கடலில் (கரை கடலில்) வாழும் சார்டின் (சாளை), ஹெரிங் போன்ற இனங்களில் கொழுப்பு அதிகம்.

மீன் கொழுப்புகள் அபாயம் குறைந்தவை மட்டுமல்ல, பிற கொழுப்புகள் ஏற்படுத்தும் அபாயத்தைக் குறைக்க வல்லவை. ஒமேகா- 3- கொழுப்பு அமிலம் மூளை வளர்ச்சிக்கு முக்கியமானது.

உலக அளவில் மீன் சாப்பிடுபவர்களுக்கு இதய நோய் பாதிப்பு குறைவுதான். ஸ்டர்ஜன் மற்றும் கட்டுப மீன் பண்டத்துக்கு கவியார் (caviar) என்று பெயர். உலக அளவில் விலையுயர்ந்த உணவு இதுதான். ஒரு கிலோ கவியாரின் மதிப்பு 700 அமெரிக்க டொலர்கள். இந்திய ரூபாயில் 35,000-. ஈரான்தான் கவியாரை அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறது. இதற்கு அடுத்தபடியாக வரும் மீன் பதார்த்தம் சுறா துடுப்பின் நார்ப் பொருளிலிருந்து தயாராகும் சூப். பாகம் செய்த சுறாத் துடுப்பின் நார்கள் (இழைகள்) ஒரு கிலோ முப்பதாயிரம் ரூபாய் வரை பெறும். சிங்கப்பூர், ஹொங்கொங் சந்தைகளில் இதற்கு ஏக கிராக்கி, இறால், நண்டு கோதுகளிலிருந்து பெறப்படும் கைடின், கைடோசான், க்ளுகோஸமைன் ஆகிய மூன்று பொருள்களுக்கும் மருத்துவப் பயன்பாடு உண்டு.

மீன்களில் காற்றுப் பைகளும் உண்டு. நன்னீர் மீன்களின் உடலளவில் ஏழு விழுக்காடு அளவும், கடல் மீன்களுக்கு ஐந்து விழுக்காடு அளவும் காற்றுப்பைகள். இஸின் கிளாஸ் என்னும் பொருள் இதிலிருந்து கிடைக்கிறது. பீர் மதுபானத்தைத் தூய்மைப்படுத்த இஸின் கிளாஸ் பயன்படுகிறது. பாகவத புராணம் திருமாலின் தசாவதாரங்களில் ஒன்றாக மச்சவதாரத்தைக் குறிப்பிடுகிறது. (மச்சம் மீன்) மனுவையும் ஏழு முனிவர்களையும் காக்க திருமால் மீனாக அவதரித்ததாக பாகவதம் சொல்கிறது.

இராட்சத பல்லி இனங்களான டைனோசர்களின் தோற்றத்துக்கு ஏழு கோடி ஆண்டுகளுக்கு முன்னரே மீன்கள் தோன்றியிருக்க வேண்டும்.


லாடிமேரியா சலும்னி என்கிற வாழும் தொல்லியிரினத்தை முதன் முதலாக 1938இல்தான் கண்டுபிடித்தனர்.

தென் ஆபிரிக்காவின் சலும்னா ஆற்றின் முகத்துவாரத்தில் கிடைத்த இந்த மீனுக்கு ஏராளம் சிறப்புகள் உண்டு. ஓடு போன்ற செதில்களுக்குப் பதிலாக கவசம், தரையில் ஊர்ந்து செல்ல உதவும் துடுப்புகள், காற்றைச் சுவாசிப்பதற்கான பைகள்... தரைவாழ், முதுகு நாண் விலங்குகளின் முன்னோர்கள் மீன்கள்தாம் என்பதற்கான ஆதாரங்களில் இவை முக்கியமானவை.

நானூற்று அறுபது கோடி ஆண்டுகளில் (பூமிப்பந்தின் வயது) பல்வேறு தருணங்களில் கட்டுப்பாடற்ற இயற்கை மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தொன்மையான உயிரினங்கள் பூண்டோடு அழிந்திருக்கின்றன. இராட்சதப் பல்லிகளின் அழிவு ஓர் உதாரணம். இயற்கைப் பேரிடரின் விளைவாக டைனோசர், டீரோசார், இக்தியோசர் முதலிய பல்லியினங்கள் அழிந்திருக்கலாம் என தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். மீனின் பல்லுயிர் வளம் அழிய வாய்ப்பிருக்கிறதா? இருக்கவே இருக்கிறது!

புவி வெப்பமாதல், துருவப் பனிப் பாறைகள் உருகிவழிதல், கடல் மாசுபடுதல், மிகை மீன் பிடித்தல், கட்டுப்பாடின்றி கடல் வளத்தை கொள்ளையிடுதல் என்பதாக நீண்ட வரிசையில் பிரச்சினைகள் அணிவகுத்து நிற்கின்றன.

நிலம் சார்ந்த உயிரினங்களைப் போலவே மீனினங்களும் அழிவின் விளிம்பில் நிற்கின்றன. நாம் இல்லாமல் மீன்கள் வாழ்ந்துகொள்ளும்; மீனில்லாமல் மனிதனால் வாழ முடியாது. சூழலியலையும் பல்லுயிர் வளங்களையும் காப்பதில்தான் மனித குலத்தின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. ★





# ஆசிரியர் கவனிக்கவும்

தாய் மொழி தமிழுக்குத் தனிச் சிறப்புக்கள் பல உள்ளன. அதனால் தானோ என்னவோ தமிழர்களால் தனிச் சிறப்புடன் வாழ முடியாமல் உள்ளது. தமிழ் பல இடங்களில் புகுந்து விளையாடுவதாகச் சொல்வார்கள். இரட்டைக் கிழவி முதல் இரட்டை அர்த்த வசனங்கள் வரையில் தமிழ் புகுந்து விளையாடாத இடங்களே இல்லை.

இப்போது பல தமிழ் வாத்தியார்களும் தமிழை வைத்து தாங்கள் புகுந்து விளையாடுகின்றார்கள். ஏற்கனவே யாழ்ப்பாணத்தின் கலாசாரம் தறி கெட்டுப் போய்க் கொண்டிருக்கின்றது. மாணவர்களைக் குறிப்பாக பதின்ம வயதுக்காரர்களை நல்வழிப்படுத்த வேண்டிய ஆசிரியர்களே மாணவர்கள் மனதை சஞ்சலப்படுத்தும் படியாக நடந்து கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் பெருகுகின்றன.

தனியார் கல்வி நிறுவனங்கள் அதிலும் உயர்தர மாணவர்கள் கல்வி கற்கின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் யாழ். நகரப் பகுதியில் பல உள்ளன. மாணவர்களால் முன்னர் ஒரு தடவை எரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் கற்பிக்கும் தமிழ் ஆசான் ஒருவர் வகுப்பில் பாடம் எடுப்பதை விட இரட்டை அர்த்த வசனங்களைப் பேசுவதிலேயே நேரத்தை செலவிடுகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏன்... எதற்கு... எப்படி?

மாணவ, மாணவியருக்கு முன்பாக ஒருவரை எழுப்பி வைத்து இரட்டை அர்த்த ஆபாச வசனங்களைச் கூச்சமின்றிச் சொல்கின்றார். இது தொடர்பில் நிர்வாகத்துக்கு தெரிந்தும் அவர்கள் இதில் தலையிடவில்லை.

கல்வியை மாணவர்களுக்கு கற்பிக்கின்ற போது இடையிடையே பகிடிகளை வாத்தியார்கள் விடுவ்து வழமை. ஆனால் மாண வர்களை இழிவுபடுத்தி ஆபாசமாகக் கதைப்பதையே முழு நேரமாகக் கொண்டிருப் பது தவறானது.

மாணவர்கள் வழி தவறிப் போகின்றார்கள் என்று கூச்சலிடுபவர்கள், முதலில் ஆசிரியர்கள் வழி தவறாமல் இருப்பதற்கும், மாணவர்களை எப்படி நல்வழிப்படுத்துவதென்பதற்கும் ஆசிரியர்களுக்கு பாடம் எடுக்க வேண்டும் என்ற நிலை அல்லவோ அதிகரித்து வருகிறது...!

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

படம் ஒன்று ஒரு செய்தியை சொல்லும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அந்த வகையில் உதயன் பத்திரிகையில் வெளிவரும் நிகழ்வுப் படங்கள் பல செய்திகளை வெளிப்படுத்துகின்றன.

அண்மையில் யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் மீது பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பான படம் உதயன் முன்பக்கத்தில் வெளிவந்தது. இந்த செய்திப்படம் வெளிப்படையாக ஒரு செய்தியை சொல்லியிருக்கிறது.

இந்தப் படம் ஒன்றே போதும் யாழ்.பல்கலைக்கழகத்தில் என்ன விபரீதம் ஏற்பட்டுள்ளது என்பதை வெளிக்காட்ட.

அன்றைய நாள் பத்திரிகையில் முதல் பக்கத்தை அலங்கரித்த இந்த செய்திப் படமானது வாசகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்படியான செய்திப்படங்களை முன்பக்கத்தில் பெரியளவில் பிரசுரிப்பீர்களானால், அதன் ஊடாக பல செய்திகளை மக்களுக்கு இலகுவாகக் கொண்டு செல்ல முடியும் என்பது உண்மை.

எனவே உதயன் முக்கிய செய்தியை நிழற்பட மூடாக பெரிதாக வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உதயன் முன்பக்கத்தை அலங்கரிக்கும் செய்திப்படம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளியுலகுக்கு இலகுவாக எடுத்துச் செல்ல ஒரு வாய்ப்பாக அமையும்.

செய்திப்படம் ஊடாக பல செய்திகளை வெளிக்காட்ட முடியும் என்ற ரீதியில் தத்துரூபமான படங்களை எடுத்துப் பிரசுரிக்க வேண்டும். வாசகனுடைய எதிர்பார்ப்பு இதுவாகும். இதனைக் கருத்தில் எடுத்து செயற்படுத்துவீர்களா?

கேதீஸ், கோப்பாய்

★ ★ ★

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கைதுகள் தமிழ் மக்களை அச்சத்தில் உறைய வைத்துள்ளன. ஏன், எதற்கு கைது செய்யப்படுகிறார்கள் என்ற விபரம் தெரியாமல் மக்கள் உள்ளனர்.

உதயனையே நாளாந்தம் பார்த்து வருவதால் கைதுகள் தொடர்பான முழுமையான செய்தியை உதயன் வெளியிட வேண்டும். அப்பொழுது தான் கைதுகள் தொடர்பான விவரங்களை அறிந்துகொள்ள முடியும்.


கைது செய்யப்பட்டவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். அவர்களின் நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பது கூட தெரியாமல் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளனர். உதயன் ஊடாக முழுமையான செய்தியை அறிய முடியுமா?

நவம், வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பு மூளையின் சிறந்த முடிவு

■ ராஜா



> ஓர் எறும்புப் புற்றை எடுத்துக்கொண்டால் சில நூறு முதல் பல இலட்சம் எறும்புகள் வரை இருக்கலாம். ஒவ்வொரு சிற்றெறும்புக்கும் ஒரு சிற்றறிவு. கால் மி.மீ. அகலத்தில் மூளை. அதிகமில்லை தான்; ஆனால் புற்றில் வசிக்கும் அத்தனை எறும்புகளும் சேர்ந்து செய்யும் சமுதாயச் செயல்கள் ஆச்சரியமானவை.

மனிதன் வரிசையை அடுத்துக் கொஞ்சம் பூச்சி படிக்கலாம். பூச்சிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. முக்கியமாக, கூட்டாகச் சேர்ந்து முடிவுகள் எடுப்பது எப்படி ?

ஓர் எறும்புப் புற்றை எடுத்துக் கொண்டால் சில நூறு முதல் பல இலட்சம் எறும்புகள் வரை இருக்கலாம். ஒவ்வொரு சிற்றெறும்புக்கும் ஒரு சிற்றறிவு. கால் மி.மீ. அகலத்தில் மூளை. அதிகமில்லைதான்; ஆனால் புற்றில் வசிக்கும் அத்தனை எறும்புகளும் சேர்ந்து செய்யும் சமுதாயச் செயல்கள் ஆச்சரியமானவை.

சனத்தொகை பெருத்துவிட்டாலோ வேறு வீடு தேட வேண்டும். இதை எறும்புகள் எப்படிச் செய்கின்றன என்பதில் படிப்பினை இருக்கிறது.

எறும்புக் கூட்டத்துக்கும் நம் மூளையின் நியூரான் கூட்டத்துக்கும் ஓர் ஒற்றுமை உள்ளது. ஓர் ஒற்றை நியூரானுக்கு அதிகம் நினைவு கிடையாது.

ஆனால் நம்முடைய பத்தாயிரம் கோடி நியூரான்களின் தொகுப்புக்கு எத்தனை விஷயம் தெரிந்திருக்கிறது. என்னுடைய ஒரு நியூரானில் 'சீ', மற்றொன்றில் 'னி', இன்னொன்றில் 'வா' என்றெல்லாம் செய்தி பதிந்திருக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனால் சீனிவாசன் எனக்கு ஐம்பது ரூபாய் தர வேண்டும் என்பது மட்டும் மறக்க முடியாமல் நினைவிருக்கிறது.

அதே போல் ஓர் எறும்புக்கு மூளை சின்னதாக இருந்தாலும் எறும்புக் கூட்டத்துக்கு அறிவு அதிகம். ஒவ்வொரு எறும்பும், ஒவ்வொரு நியூரானும் ஒரு தனித்த பிறவி என்றும் சொல்லலாம்; அல்லது ஒரு தொகுப்பைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் என்றும் சொல்லலாம்.

மத்திய கட்டுப்பாடு இல்லாமலேயே கூட்டாகச் சேர்ந்து அவை எடுக்கும் முடிவுகள், ஒற்றை மனம் எடுத்த முடிவுகள் போல ஒருமித்துத் தெளிவாக இருக்கின்றன.

எனவே, நம் மூளையைப் பற்றின இரகசியங்களை அகழ்ந்தெடுக்க விஞ்ஞானிகள் கைக்கொள்ளும் புதிய கருவி - எறும்புப் புற்று! பிரிட்டனின் பிரிஸ்டல் விஞ்ஞானிகளும் கணினி வல்லுநர்களும், இப்போது எறும்புகள், நியூரான்கள் இவை கூட்டாகச் சேர்ந்து எப்படி முடிவெடுக்கின்றன என்பதைத்தான் கூட்டாகச் சேர்ந்து ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள்.

புதுசாகக் கல்யாணமானவர்கள் மட்டுமில்லாது, எறும்புக் கூட்டமும் தீர்மானிக்க வேண்டிய மிகச் சிக்கலான பிரச்சினை, புது வீடு தேடுவது. முதலில் ஒரு ஸ்கவுட் படை போய், புற்று கட்டப் பொருத்தமான இடத்தைத் தேடும். தனித் தனியே அவைகள் கொண்டு வரும் சிபாரிசுகள் சபையில் பரிசீலிக்கப்படும். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் ஓர் இடத்துக்கு வாக்களிப்பு கிடைத்தால் அந்த இடம்தான் தேர்ந்தெடுக்கப்படும்.

நமது மூளையின் தனித்தனி நியூரான்கள் சேர்ந்து எப்படி ஒரு முடிவுக்கு வருகின்றன என்பதும் இதைப் போன்றதே. நம் கண்காணும் காட்சியைப் பற்றி மூளை ஒரு தீர்மானத்துக்கு வருவதை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளலாம். இதை ஆராய விஞ்ஞானிகள் ஒரு குரங்கைப் பிடித்து வந்து அதன் விஷுவல் கார்டெக்ஸ் என்ற பார்வை உணரும் பகுதியைக் கவனித்தார்கள்.

கண் முன்னால் கணினி திரையில் பல புள்ளிகள் பல திசைகளில் அலைந்துகொண்டிருக்கும். அதிகபட்ச புள்ளிகள் எந்தத் திசையில் நகர்கின்றன என்பதைக் குரங்கு சரியாகக் கணித்தால் விஷுவல் கார்டெக்ஸில் உள்ள நியூரான்கள் தனித்தனிப் புள்ளிகளைப் பற்றிய தகவல் துணுக்குகளைப் பெறுகின்றன.

அதிகமான புள்ளிகளைச் சேகரித்த நியூரான்கள் உற்சாகமாக நியூரோட்ரான்ஸ்மிட்டர் இரசாயன குண்டுகளைச் சுட ஆரம்பிக்கின்றன. சரியான விடையைக் கண்டுபிடித்து விட்ட நியூரான்களின் வேகம் மெல்ல அதிகரித்து, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சுடுவது அதிகரித்தவுடன் குரங்கு ஒரு முடிவுக்கு வருகிறது. எனவே, முடிவு எடுப்பதற்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையி[illegible] களோ நியூர[illegible] வேண்டும். (தொடரும்)

# குழந்தைகள் இறைவனின் அற்புதப் படைப்பாகும்




■ இணையவன்

குழந்தைகள் இறைவனின் அற்புதப் படைப்பு, அபூர்வமான பரிசு. இந்த உலகத்தில் வந்திறங்கியவுடன் அவர்களுக்கு முதலில் இந்த உலகத்தை அறிமுகப் படுத்துகிறவர்கள், உணரவைக்கிறவர்கள் பெற்றோர்கள் தான். குழந்தைகள் பெற்றோர்களைத்தான் முதலில் கவனிக்கின்றனர், உற்றுநோக்குகின்றனர். எனவே குழந்தைகளின் முன்னால் பெற்றோர்கள் நடந்துகொள்கிற நடவடிக்கைகளைப் பொறுத்தே குழந்தைகளின் அகவுலக அடிக்கட்டுமானம் கட்டப்படுகிறது. குழந்தைகளை நல்ல விதமாய் வளர்ப்பது பெற்றோர் கையில் தான் உள்ளது. குழந்தைகள் முன்னிலையில் செய்யக்கூடாத, சொல்லக்கூடாத சிலவற்றை தவிர்த்தால் அவர்கள் நல்ல பிள்ளைகளாக வளர்வது நிச்சயம்.

குழந்தைகள் முன்னிலையில் தீய சொற்களைப் பேசுவதைத் தவிருங்கள். நீங்கள் பேசுவதைக் கவனித்து தான் குழந்தை பேசுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் குழந்தையுடன் அடுத்த வீட்டுக் குழந்தையை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். அப்படிப் பேசினால் குழந்தையின் மனதில் தாழ்வு மனப்பான்மை வளரும். படிப்பு விசயத்தில் குழந்தைகளைக் கண்டிக்கும்போது கவனம் இருக்கவேண்டும். குழந்தைகளின் செயற்பாடுகளை உற்சாகப்படுத்தவேண்டும். குழந்தைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டும். புதிய புதிய செயல்பாடுகளில் ஈடுபாடு கொள்ளச் செய்யவேண்டும். குழந்தைகளின் சுட்டித்தனங்களை, சேட்டைகளைக் கண்டு பொதுவாக பெரியோர்கள் முகம் சுழிப்பதும், அதட்டுவதும், மிரட்டுவதும் கோபம் மிகுதியால் அடிப்பதும் கூட நிகழ்கிறது. குழந்தைகளுக்குத் தாங்கள் செய்த காரியங்களைவிட அதனால் கிடைத்த விளைவு ஆழ்மனதில் பதிந்துவிடும். பயந்து நடுங்குகிற அதன் உள்ளம் பிற்காலங்களில் தன் வாழ்நாள் முழுவதிலும் அந்த நடுக்கத்தை மறப்பதில்லை.

குழந்தைகளின் செயல்பாடுகளை உற்றுநோக்குங்கள். அதில் தெரியும் ஆவேசம். அர்ப்பணிப்பு, தீவிரம், பேராவல், இடைவிடாத முயற்சி, சிறிய முன்னேற்றத்திலும் கொள்ளும் உவகை, பிரச்சினையை புதிய கோணங்களில் அணுகுகிற அணுகுமுறை, பொறுமை, குழந்தைகள் படைப்பூகத்தின் பரிபூரண வடிவமாக திகழ்கிறார்கள். குழந்தைகளின் அறிதிறன் ஆவேசத்தைக் கட்டுப்படுத்தவோ, இடையூறு செய்யவோ கூடாது. அவர்களின் செயல்பாடுகளின் சுதந்திரம் கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதோடு குழந்தைகள் முன்னால் தகாத எதையும் செய்வதைத் தவிர்க்க வேண்டும். கணவன்-மனைவி சண்டை சச்சரவு குழந்தைகளுக்கு தெரியக்கூடாது. அவர்கள் முன்னிலையில் சண்டையிட்டுக் கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு முதன்முதலில் ஒழுங்கு முறையைப்



புகட்டுவதில் தான் கவனம் வேண்டும். அது தான் முக்கியம். பிறகு அடுத்தபடியாக உள்ளதுதான் கல்வி. முதலில் எப்படி பழக வேண்டும் என்ற நல்லொழுக்கத்தைப் புகட்ட வேண்டும். நல்லொழுக்கம் தான் ஒரு மனிதனைப் பிற்காலத்தில் சிறந்த பண்புடையவனாக ஆக்குகிறது.

அழுகின்ற குழந்தைக்கு நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டும் அம்மாவை இன்று உலகில் எந்த மூலையிலும் பார்க்க முடியாது. தொலைக்காட்சியைப் போட்டுவிட்டு இதைப் பார்த்துக் கொண்டே சாப்பிடு என்று கூறிவிட்டுச் செல்வதுதான் தற்போதைய வழக்கம். இதனால் அக்குழந்தை தொலைக்காட்சியில் வரும் புனையப்பட்ட கற்பனை உலகுக்கும், நிஜமான உலகுக்கும் வேறுபாடு தெரியாமலே வளர்கிறது. தொலைக்காட்சியை மட்டுமின்றி, சினிமா வீடியோ விளையாட்டுக்கள் மற்றும் புத்தகங்களுக்கும் இதில் பங்குண்டு உலகில் ஒவ்வொரு குழந்தையும் தினமும் குறைந்தது இருபது முதல் எழுபது முறை யாராவது கொலை செய்யப்படுவதை பார்க்கின்றன அல்லது படிக்கின்றன. குழந்தைகள் விரும்பிப் பார்க்கும் கார்ட்டூன் நிகழ்ச்சிகளில் ஒரு மசாலா படத்தை விட அதிகளவில் வன்முறை இடம்பெறுகிறது. கொலை வெறியுடன் மவுசைத் துறத்தும் மிக்கி, எதிரிகளைச் சரமாரியாக சுட்டுத் தள்ளும் பவர் ரேஞ்சர்கள், பாய்ந்து பாய்ந்து வில்லனைத் துவைக்கும் ஸ்பைடர்மேன் என்று வன்முறைக்கு அவற்றில் பஞ்சமில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org